பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

சிந்தாமணி

ரூ 2/50

THE MOST INFLUENTIAL TAMIL WEEKLY WITH THE LARGEST CIRCULATION IN SRI LANKA.

CHINTAMANI  Sunday, 10—6—1984  இல. 757  1984 ஜூன் 10 ஞாயிற்றுக்கிழமை  ★ ★  சிந்தாமணி

# இஸ்ரவேலின் உதவி பெறுவது

# அரசின் கொள்கை

## எதிர்ப்பவர்கள் வெளியேறலாம் அல்லது வெளியேற்றப்படுவார்கள்

### ஐ. தே. க. செயற்குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 10

**வடபகுதி பயங்கரவாதத்தை அடக்குவதற்கு பல நாடுகளிடம் உதவி கேட்டோம். இது இனப் பிரச்சினையுடன் சம்பந்தப்பட்டிருந்ததால் எந்த ஒரு நாடும் இணங்கவில்லை. இஸ்ரவேல் மட்டுமே இணங்கியது. ஆதலால் இஸ்ரவேலிடம் உதவி பெறுவது அரசாங்கத்தின் கொள்கை. அரசின் கொள்கையை எதிர்ப்பவர்கள் வெளியேறலாம். அல்லது வெளியேற்றப்படுவார்கள்.**

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற் குழுக் கூட்டம் நேற்று கொழும்பில் ஜோன் டி சில்வா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது. அதில் உரை நிகழ்த்துகையில் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதி கூட்டத்துக்கு தலைமை வகித்து உரை நிகழ்த்தினார்.

அவர் கூறியதாவது:—

பயங்கரவாதத்தை முறியடித்து நாட்டில் ஜனநாயகத்தையும், சட்டத்தையும், மக்களின் சுதந்திரத்தையும் பாதுகாக்க வேண்டிய ஒரு கடமை

பயங்கரவாதத்துக்கு தென் இந்தியாவில் இருந்து உதவி கிடைக்கிறது.

பயங்கரவாதச் செயல்களை நிறுத்துவது மிகவும் கடினமானது.

அவர்கள் எம்முடன் நேருக்கு நேர் யுத்தத்

(2ஆம் பக்கம் பார்க்க)

## எண்ணத்தில் என்றும் நிலைத்தவள்



# வடபகுதி இராணுவ

# நடவடிக்கைகளில்



"என்னிடம் வாருங்கள், என் எழில் பாருங்கள்,
ஏற்றதோர் இன்பத்தைக் காட்டு கிறேன்"
என்றே விரல் நீட்டிச் சுவர்க்கத்தின் திசையினைச்
சுட்டுகி றுள்இந்தச் சுந்தரி யாள்;
தன்னந் தனியாகச் சாய்ந்தவள் நின்றனள்
தாங்கும் இளநீர் நிமிர்ந்திட வே
என்ன அழகிவள்! கண்ணின் விருந்திவள்!]
எண்ணத்தில் என்றும் நிலைத்தன ளே.

ஜனநாயகத்தையும், சட்டத்தையும், மக்களின் சுதந்திரத்தையும் பாதுகாக்க வேண்டிய ஒரு கட்டத்தில் இன்று நாம் இருக்கிறோம்.

### ★ கிழக்கில் துக்ககரமானசம்பவம்

இதற்கென வெளிநாட்டு உதவி பெற்றுக் கொள்வதை எதிர்த்து துக்ககரமான சில சம்பவங்கள் கிழக்கு மாகாணத்தில் நிகழ்ந்துள்ளன.

அங்கு கலவரங்கள் ஏற்பட்டதால் அமைதியை நிலைநாட்ட பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அதில் உயிர்ச் சேதம் ஏதும் ஏற்படவில்லை.

இத்தகைய செயல்களை கொழும்பிலும் செய்ய எத்தனித்தனர். அவற்றை நிறுத்தினேம்.

தவருக வழிநடத்தப்பட்ட சில முஸ்லிம்களும், தமிழர்களும் சேர்ந்து இத்தகைய சம்பவங்களில் ஈடுபட்டிருக்கிருர்கள்.

சில பத்திரிகைகள் இதற்கு ஆதரவு வழங்குகின்றன.

இந்த நாட்டிலிருந்து பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டவே நாம் இஸ்ரவேலர்களின் உதவியைப் பெற்ருேம்.

# நடவடிக்கைகளில் பெரும் மாற்றங்கள்

வட பகுதி இராணுவ நடவடிக்கைகளில் பெரும் மாற்றங்கள் செய்யப்பட இருக்கின்றன. என்று பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

பயங்கரவாத ஒழிப்பில் பாதுகாப்புப் படையினர் நிதானமாக நடந்து கொள்ளுதல், பொதுமக்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளுதல் ஆகியவற்றின் அடிப்படையில் இந்த மாற்றங்கள் அமையும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த நோக்கத்துடனேயே, பாதுகாப்பு நடவடிக்கைகளின்

(3 ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கில் நடந்த இஸ்ரவேல் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூன் 10

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் நேற்று, முன்தினம் (வெள்ளிக்கிழமை) இஸ்ரவேல் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

இராஜாங்க அமைச்சு நேற்று, இது தொடர்பாக பத்திரிகைகளுக்கு அனுப்பிய அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது:—

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் உள்ள சில பள்ளி வாசல்களுக்கு அருகில் வெள்ளிக்கிழமை சிலர் இஸ்ரவேல் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர்கள்.

கட்டுக் கடங்காத சிறு, ஆர்ப்பாட்டக்காரக் குழுக்கள் சில பொலீஸ் வாகனங்கள் மீது கல்வீச்சு நடத்தின.

வீதிகளில் தடைகள் போடப்பட்டு இ. போ. ச. பஸ் ஒன்றுக்கு தீ வைக்கப்பட்டது. மற்றும் ஒரு இ. போ. ச. பஸ் கல்வீச்சுக்கு உள்ளான போது, அந்த பகுதியைச் சேர்ந்த சிலர் உட்பட 29 பஸ் பிரயாணிகள் காயம் அடைந்தனர்.

கடமையில் இருந்த பொலீஸார் மீதும் கல் வீசப்பட்டதால் பல பொலீஸார் காயம் அடைந்தனர்.

சனக் கூட்டத்தைக் கலைப்பதற்கு பொலீஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்தனர். பின்னர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு அவர்கள் உள்ளானர்கள். இதனல் 12 பேர் சிறு, காயம் அடைந்தனர்.

நிலைமை தற்பொழுது கட்டுப்பாட்டில் இருக்கிறது. வேறு சம்பவங்கள் பற்றி அறிவிக்கப்படவில்லை.

மேற்கண்டவாறு, அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (த)

### ★ வட பகுதி கொள்ளையருடன் தொடர்பு

# கொழும்பு வர்த்தகர் சிலர் விசாரணையில்

கொழும்பு, ஜூன் 10

வட பகுதியில் இயங்கி வரும் கொள்ளைக் கோஷ்டி ஒன்றுக்கு, வெளிநாடுகளில் இருந்து ஆயுதங் களைத் தருவித்து கொடுத்தார்கள் என சந்தேகிக்கப்படும் கொழும்பில் உள்ள சில பிரபல வர்த்தகர்கள் இரகசியப் பொலீஸாரினல் விசாரணைக்குட்படுத்தப்பட்டு இருக்கின்றனர்.

வட பகுதியில் இருக்கும் கொள்ளையர்களில் சிலர் பொலீஸாரினல் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து கிடைத்த தகவல்களை அடுத்தே பிரஸ்தாப கொழும்பு வர்த்தகர்கள் மீது விசாரணை நடத்தப்படுகிறதாம்.

கைதான கொள்ளைச் சந்தேக நபர்கள் வட பகுதியில் இருந்து இப்பொழுது கொழும்பு இரகசியப் பொலீஸ் தலைமையகத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளனர்.

கொழும்பில் இருக்கும் சில வர்த்தகர்களின் வீடுகள் அவர்களின் வர்த்தக நிலையங்கள் ஆகியவை இரகசியப் பொலீஸாரினல் சோதனையிடப்பட்டிருக்கின்றன. (த-மு)

### ● கார்களை எதிர்பார்த்து 4,000 பேர்

கொழும்பு, ஜூன் 11

டாக்டர்கள், பொறியியலாளர்கள், நீதிபதி

(2ஆம் பக்கம் பார்க்க)

### நோன்பு தொழுகை நேரம்

| | | |
|---|---|---|
| ஸஹர் முடிவு | — | காலை 4.19 |
| ஸ"புஹ" | — | காலை 4,34 |
| சூரிய உதயம் | — | காலை 5,54 |
| ளுஹர் | — | பகல் 12,20 |
| அஸர் | — | பிற்பகல் 3.37 |
| மஃரிபு | — | மாலை 6.26 |
| இஷா | — | இரவு 7.46 |

### பொற்கோயிலில் ஜெயில் சிங்

பஞ்சாப் மாநிலத்தில் அமிர்தசரஸ் புனித பொற்கோயிலை இந்திய ஜனதிபதி ஜெயில் சிங் நேற்று சென்று பார்வையிட்டார்.

அங்கு ஏற்பட்டிருக்கும் சேதங்களை உடனடியாக திருத்தியமைக்குமாறு பஞ்சாப் மாநில அரசுக்கு அவர் உத்தரவிட்டார்.

புதன்கிழமை இராணுவத்தினருக்கும், சீக்கிய தீவிரவாதிகளுக்கும் இடையில் பொற்கோவிலில் நடந்த உக்கிரமான சண்டையில் இறந்தோர் எண்ணிக்கை 500 [illegible] நேற்றுத் தெரி[illegible]து.

எனினும் உத்தியோ[illegible]மாக இறந்தோர் எ[illegible] பற்றி இன்னும் அறி[illegible] வில்லை.

பிரதமர் திரு[illegible] காந்தி நாட்டில் இ[illegible] தியை ஏற்படுத்த ஒத்துழைக்குமாறு எல்லாத் [illegible]ப்பினருக்கும் நேற்று [illegible] விடுத்தார். (த[illegible])

### தணிக்கை

கொழும்பு, ஜ[illegible]0

இலங்கையில் இஸ்ரவேல் நலன் காப்புப் பிரிவு ஏற்[illegible] படுவது தொடர்பாகப் பத்திரிகைகளில் எதையும் [illegible] முடியாமல் இருக்கிறது.

இலங்கை — இஸ்ரவேல் விஷயத்தை பயங்கரவாத[illegible] புச் சட்டத்தின் 14ஆவது பிரிவின் கீழ் அடங்கும் வி[illegible] சிரம[illegible] அரசாங்கம் பிரகடனப்படுத்தியிருக்கிறது. அதுவே இல[illegible]நரத்[illegible] இஸ்ரவேல் சம்பந்தப்பட்ட எதையும் பத்திரிகைகளில் பி[illegible] பதற்குத் தடையாக அமைந்திருக்கிறது.

சட்டப்படி இலங்கை — இஸ்ரவேல் சம்பந்தப்பட்ட [illegible] யங்களைத் தகுதி வாய்ந்த அதிகாரியின் அங்கீகாரத்துக்கு [illegible] சமர்ப்பிக்க வேண்டும். (உ[illegible])


ரமழான் மலர்ந்து விட்டது
ரம்மியமான ஆடைகளுக்கு நாடுங்கள்
KLASSIC PARADISE
TEXTILE CENTRE

எழில் மிகு சாரிகள், ஏங்க வைக்கும் சாரிகள்



★ காஞ்சிபுரம்
★ மணிப்புரி
★ பனரிஸ்
★ தஞ்சோயி சில்க்
★ பத்தோல
★ சிப்போன் மணிப்புரி
★ ஹாப் சிப்போன்
★ வேஷ்ஸ் சாரி
★ ரூபி குயின்
★ லேஸ் சாரி

[illegible] — ஒகன்சா — [illegible] — சங்கம் — [illegible] — ஊர்வசி — மாது — ஊராகிரி — பொன் [illegible] — [illegible] சிப்போன் — ஏட்டல் — [illegible] குயின் — ஒகி வீரா — நைட் பீவர் — கொய்நூர் — [illegible] ஜோர்ஜ் [illegible] — [illegible] — [illegible] ராணி — பியசெவன — குர்பாணி — [illegible] — வெபட் — [illegible] — வோயில் — சிப்போன் ஜோர்ஜ்ஜட் — சாரிகளுக்கேற்ற பிளவுஸ் பீஸ் எல்லா வர்ணங்களிலும் கிடைக்கும்.

ஆடவர் நெஞ்சையள்ளும் அழகிய அணிகள்

[illegible] செண்ட் [illegible] — பெராரி — பொஸ்டர் — யான் — ஹரா — பேர்ல் — [illegible] — கொடீரோய்.

[illegible]சர்ட் வகைகள்:—

[illegible] — யான் — சும்ஸ்வல் பேபி — இராண்டீ — ரொன்ஸன் — [illegible] மேன் — ஜொவாரினே — ஜோல்டீ [illegible] — [illegible] — ஹீமேன் — [illegible] — ரெங்லர் — [illegible] — எட்மிரா.

குழந்தைகளு[illegible] ரெடி மேடீ டிரவுசர் — பேபி சூட்ஸ், [illegible] பரிமளம் கமழும் வாசனைத் திரவியங்கள் — அழகிய [illegible] வகை அளவுகளிலும் அற்புதமான பாதணி [illegible]தற்கு இந்த அபூர்வ மாளிகைக்கு விஜயம் [illegible].

[illegible]ளசிக் பெரடைஸ்

— டெக்ஸ்டைல்ஸ் செண்டர் —

119 [illegible], கொழும்பு 11. தொலைபேசி: 549919.


ஆகக் கூடுதலான விற்பனையுள்ள தமிழ் வார இதழ் சிந்தாமணி தான்

# செயல் இழந்திருக்கும் அபி. சபைகளை கலைக்கலாம்

## பாதுகாப்பு அமைச்சுக்கு அதிகாரம்

கொழும்பு, ஜூன் 10

செயலிழந்திருக்கும் அபிவிருத்திச் சபைகளைக் கலைத்து விட்டு அவற்றுக்குரிய கடமைகளை மாவட்டச் செயலாளருக்கு வழங்க அவசரகாலச் சட்டத்தின் கீழ் பாதுகாப்பு அமைச்சருக்கு அரசாங்கம் அதிகாரம் வழங்கியிருக்கிறது.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் இதற்கான விதிகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கட்டுப்பாட்டிலிருந்த யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருமலை, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திச் சபைகள், உறுப்பினர்களின் பதவியிழப்பால் இப்போது செயலிழந்திருக்கின்றன.

அந்த அபிவிருத்திச் சபைகளுக்குரிய அதிகாரங்களை பாதுகாப்பு அமைச்சர் அந்தந்த மாவட்டச் செயலாளருக்கு வழங்க இந்த அவசரகால விதிகள் ஏற்பாடு செய்கின்றன. (த-ப)

● கார்களை....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள், சட்டத்தரணிகள், அமைச்சுச் செயலாளர்கள் உட்பட மிக முக்கிய நபர்கள் என்று குறிப்பிடப்படும் சுமார் 4 ஆயிரம் பேர் அரசாங்க விநியோகத் திணைக்களத்திலிருந்து செக்கண்ட்ஹான்ட் கார்களை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள்.

திணைக்களம் இவர்களுக்கென வருடாந்தம் நூறு கார்களை மாத்திரமே கொள்முதல் செய்கிறது.

அதனால் இவர்கள் நீண்டகாலமாக கார்களுக்கு காத்திருக்க வேண்டியதாக இருக்கிறது. (த-ப)

# இராணுவத்தில் சேர 12,000 பெண்கள் விண்ணப்பம்

கொழும்பு, ஜூன் 10

இராணுவத்தின் பெண்கள் பிரிவில் சேர விண்ணப்பித்த 12 ஆயிரம் பேரில் 6 ஆயிரம் பேரை நேர்முகப் பரீட்சைக்கு அழைக்க இராணுவ தலைமையகம் முடிவு செய்திருக்கிறது.

இம்மாதம் 25ஆம் திகதி முதல் கொழும்பு காலிமுகத் திடலில் இருக்கும் இராணுவ தலைமையகத்தில் இவர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடத்தப்படும் என இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் டி. ஐ. வீரதுங்க சிந்தாமணிக்குத் தெரிவித்தார்.

மகளிர் பிரிவில் 200 பேரே சேர்த்துக் கொள்ளப்படுவர். அவர்களுக்கு மூன்று மாத காலப் பயிற்சி வழங்கப்படும். பின்னர் அவர்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

தினமும் 200 பேர் வீதம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட இருக்கின்றனர். (த-மு)

# சிந்தாமணி சிறு விளம்பரங்கள்

### மணமகள் தேவை

கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த கௌரவமான முஸ்லிம் குடும்பத்தில் பிறந்த பயிற்றப்பட்ட ஆசிரியருக்கு அழகும், மார்க்கப் பற்றும் உடைய 34 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை. ஆசிரியைகள் விரும்பப்படுவர். சீதனம் ஓரளவு எதிர்பார்க்கப்படும். முதல் கடிதத்திலேயே முழு விவரங்களையும் தரவும். விளம்பர இலக்கம்:- 061001, மே/பா. சிந்தாமணி விளம்பர பீடம், த. பெ. 1257, கொழும்பு — 12.

### தேவை

கருமீன் பீலி, கடல் அட்டை, சூரல் மீன் நெட்டி, கடல் குதிரை, சங்கு, நாகனம், அம்பர், கடல் திரவியங்கள் ஏற்றுமதிக்காக மொத்தமாக வாங்கப்படும். விவரங்களுக்கு:
No. 38, Old Butcher Street, Pettah, Colombo—11.
வி. இ. 031542

### விற்பனைக்கு

கம்பளை நகரின் மத்தியில்

### இங்கிலீஷ் டீச்சர்

ஆங்கிலத்தில் கடிதங்கள் எழுதும் "வழிகாட்டி புத்தகம்", "இங்கிலீஸ் டீச்சர்". விளக்கங்கள் யாவும் தமிழில் தரப்பட்டுள்ளன. அழகிய அச்சுப் பதிப்பு! விலை 18/50. வி. பி. பி. உண்டு.
"Kovai" Book Sellers, 189, Central Road, Colombo—12.
வி. இ. 031987

### புத்தகங்கள்

விற்பனையாகிறது. "பேரறிஞர் அண்ணாவின் தேன் துளிகள்" - விலை 10/. தபாலில் பெற தொடர்பு கொள்க!
"Kovai" Book Sellers, 189, Central Road, Colombo—12.
வி. இ. 032088

### பக்திப் பாடல்கள்

முந்தானை முடிச்சு, தங்கைக் கோர் கீதம், தூங்காதே தம்பி தூங்காதே, மற்றும் பழைய, புதிய சினிமாப் படப் பாடல்கள், இஸ்லாமிய கீதங்கள், பக்திப் பாடல்கள், கிறிஸ்தவ கீதங்கள் பதிவு செய்யப்பட்ட கஸட்கள் வாங்க

### வீடு விற்பனைக்கு

கிருண்ட்பாஸில், ஆமர் வீதி — பலாமரத்துச் சந்திக்கிடையில், 56, கெத்தாராம மாவத்தை, கொழும்பு—14இல் அமைந்துள்ளது. நல்ல அமைதியான சுற்றுடல், தொந்தரவில்லாத சூழ்நிலை, முன்னுக்கு முற்றம், பின்னுக்கு வெளி கொண்ட இடம், இரண்டு அறைகள் என்பவற்றையும், பிறவும் உள்ளடக்கிய வீடு. 4½ பேர்ச்சஸ்ஸில் சகல வசதிகளுடனும் உடன் விற்பனைக்கு உண்டு. பகல் நேரத்தில் பார்வையிடலாம். நியாயமான விலை கோரப்படுகின்றது.
வி. இ. 032384

### ஹோட்டல் வேலை

திறமை வாய்ந்த ஹோட்டல் நிர்வாகிகள், காசாளர், சிட்டை இலிகிதர்கள், ரொட்டி, ஆப்பம் தயாரிப்பதில் அனுபவம் வாய்ந்தோர்கள் உடன் தேவை. பின்வரும் முகவரிக்கு அடையாள அட்டையுடன் 12-06-84 காலை 10.00 முதல் பி. ப. 4-00 மணிவரை நேரில் வரவும்.
ஹோட்டல் டீ இக்பால்
44, கோட்டடி வீதி, கொழும்பு-12.
வி. இ. 032066

### கருங்கற் பொருட்கள்

கோவில் தள வரிசை கல், கோமுகி கல், அத்துடன் அழுத்தமான அம்மி, ஆட்டு கல், உரல், திருகை அனைத்தும் கைதேர்ந்த தொழில் நுட்ப கலைஞரால் கருங்கல்லில் கடையப்பட்டவை. தயாரித்து விநியோகிப்பவர்கள்:- சூரியா ஸ்ரோர், வவுனியா. கிழக்கு மாகாணத்தில் எமது அனைத்துப் பொருட்களும் கிடைக்குமிடம்: செல்வி சினிமாத் தியேட்டர்.
SELVI THEATRE செங்கலடி.
வி. இ. 032174

### விண்ணப்பப் படிவம்

க. பொ. த. சாதாரண பரீட்சைக்கான விண்ணப்பப் படிவம் தேவையானோர் 60 சத நாலு முத்திரையுடனும், சுய விலாசமிட்ட தபால் உறையுடன் தொடர்பு கொள்க. விண்ணப்பப் படிவம் தேவைப்படும் புத்தகசாலைக்கு 35% வீத கழிவில் வி. பி. பியில் அனுப்பி வைக்கப்படும்.
Thraesa Institute, 452/2, Aluthmawatha Road, Colombo—15.
வி. இ. 031891

# இஸ்ரவேலின் உதவி....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

துக்கு வந்தால் நாம் யுத்தம் செய்து வெற்றி பெறலாம், அல்லது தோல்வி அடையலாம்.

### ★ 1971 நேருக்கு நேர் மோதல்

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சியின் போது 1971 ஏப்ரல் கிளர்ச்சி நேருக்கு நேரான மோதலாக இருந்தது. அதனால் அதனை முறியடிக்க முடிந்தது. சுமார் 40 பொலீஸ் நிலையங்களை அப்போது கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியிருந்தனர்.

அப்போது ரோஸ்மீட் பிளேஸ் இல்லத்திலிருந்த திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை ஜெனரல் ஆட்டிகலை அலரி மாளிகைக்கு அனுப்பி வைத்தார். ஆடைகளையும், உள்ளாடைகளையும் சுருட்டிக் கொண்டு அவசரமாக அலரி மாளிகைக்கு சென்றார். அவர்தான் இப்போது பெரிதாகப் பேசித்திரிகிறார்.

### ★ பொற்கோயில் விவகாரம்

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அமிர்தசரஸ் பொற் கோயிலில் தஞ்சமடைந்திருந்த தீவிரவாத சீக்கியர்களுடன் போரிட்டு அவர்களை அடிபணியச் செய்திருக்கிறார்.

இலங்கையில் பயங்கரவாதத்தை முறியடிக்க நாம் எல்லா நாடுகளிடமும் உதவி கோரினோம். எந்தவொரு நாடும் உதவி தர முன்வரவில்லை.

ஜூலை கலவரம் பயங்கரவாதிகளின் கலவரமல்ல; இனக் கலவரம் என்று அந்த நாடுகள் கருதுகின்றன.

அப்போதைய எகிப்திய ஜனாதிபதி நாஸர் சொன்னார் என்பதற்காக திருமதி பண்டாரநாயக்கா இங்கிருந்த இஸ்ரவேலர்களைத் திருப்பி அனுப்பினார்.

### ★ முஸ்லிம்களுக்காக முடிவை மாற்ற மாட்டோம்

உலகில் பல நாடுகளில் இஸ்ரவேலர்கள் இருக்கிறார்கள்.

எந்த ஒருவரிடமிருந்தும் உதவி கிடைக்காததால் நாம் இஸ்ரவேலர்களின் உதவியை ஏற்கத் தீர்மானித்தோம். அவர்களின் அலுவலகம் ஒன்று இங்கு அமைக்கப்படும்.

இந்த நாட்டின் முஸ்லிம் மக்கள் என்ன கருத்துக் கொண்டிருந்தாலும் நாம் எடுத்த தீர்மானத்தை மாற்ற மாட்டோம்.

அரபு நாடுகளுடன் நாம் கொண்டிருக்கும் உறவில் எந்த மாற்றமும் இதனால் ஏற்படாது.

எமது பாதுகாப்புக்கு இங்கு வருமாறு இஸ்ரவேலர்களுக்கு நாம் கூறியிருக்கிறோம்.

எமது கட்சியில் ஒழுங்கு, கட்டுப்பாடு அவசியம்.

பத்திரிகைகளில் எழுதப்படும் சில விடயங்களும் மக்களைத் தூண்டி விடுகின்றன. இதனால் ஜூலை மாதத்தில் தீப்பற்றியது.

1971 இல் லேக் ஹவுஸ் பத்திரிகை நிறுவனத்துக்கு தீவைக்கப்பட்டது. பத்திரிகை அலுவலகம் தீயில் நாசமுற்றது.

அப்படிச் செய்வது சுலபம். அப்படியான செயல்களை நாம் செய்ய மாட்டோம்.

பத்திரிகைகளில் எழுதப்படுவனவற்றால் முஸ்லிம் மக்கள் தூண்டிவிடப்படுகிறார்கள்.

அப்படி எழுதுவதை நிறுத்த வேண்டும். இது அரசாங்கத்தின் தீர்மானம்.

### ★ பாதிப்பு சிங்களவருக்கே

முஸ்லிம்கள், தமிழர்கள் குழப்பம் விளைவித்தால் அதனால் பாதிப்பு ஏற்படுவது சிங்கள மக்களுக்கே.

அமைச்சர் மத்தியூ இங்கு இருக்கிறார். அவதானமாகப் பேசுங்கள் என்று நான் அவருக்குச் சொன்னேன்.

பிரஜாவுரிமையுள்ள ஒவ்வொருவருக்கும் இந்த நாடு சொந்தம்.

இலங்கையில் உயர் பதவிகளை தமிழ், முஸ்லிம் மக்கள் வகிக்கின்றனர்.

அமைச்சரவையில் தமிழர், முஸ்லிம்கள் உள்ளனர்.

நாட்டில் அமைதியைக் கெடுத்து, குழப்பத்தை தூண்டிவிடக் கூடிய எந்தவொரு சூழ்நிலையையும் ஆரம்பத்திலேயே முறியடிக்க அரசு எண்ணியிருக்கிறது.

சிங்கள மக்களை கடலில் தூக்கிப் போட எவருக்கும் நாம் இடமளிக்க மாட்டோம். அத்தகைய முயற்சிகளை வெற்றிகரமாக முறியடிப்போம்.

சிங்கள இனம் அழிந்து போகும் நாளில் தலைவனாக இருப்பதற்கு நான் ஒருபோதும் விரும்ப மாட்டேன்.

அமெரிக்கா, ரஷ்யா, இந்தியா ஆகிய நாடுகளிலும் இஸ்ரவேலர்கள் இருக்கிறார்கள்.

பயங்கரவாத நடவடிக்கைகள் இங்கிலாந்து, கனடா, ஆஸ்திரேலியா, இந்தியா உட்பட அநேகமாக எல்லா நாடுகளிலும் இடம் பெறுகின்றன. இந்த எல்லா நாட்டுச் சட்டங்களையும் ஆராய்ந்த பின்னரே நாம் பயங்கரவாத தடுப்புச் சட்டங்களை இயற்றினோம். பிரிட்டிஷ் நாடாளுமன்றத் தூதுக் குழுத் தலைவர் என்னைச் சந்தித்துப் பேசிய போது நான் அவரிடம் இதைக் கூறினேன்.

— இப்படி ஜனாதிபதி சொன்னார்.

சர்வ கட்சி மாநாட்டில் இணக்கம்

கம்பளை நகரின் மத்தியில் அனைத்து வசதிகளும் அடங்கிய இரு மாடிகள் கொண்ட வியாபார ஸ்தலம் விற்பனைக்குண்டு. கம்பளை மார்க்கெட்டுக்கு எதிரில் பிரதான பஜாரில் உண்டு. கடித மூலம் மாத்திரம் தொடர்பு கொள்ளவும். எஸ். ஆர். ராமு, 71, மலபார் வீதி, கம்பளை.

வி. இ. 032453

## குத்தகைக்கு

கல்முனை பஸ் நிலையத்திற்கு முன்பதாக அமைந்துள்ள பிஸ்கட் பெக்டரி, பேக்கரியுடன் தொடர்புள்ள நல்ல வியாபாரமுள்ள தேநீர் சாலையும், கொமிசனுக்கு அல்லது குத்தகைக்கு கொடுக்கப்படும். தேவையானோர் பின்வரும் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும். கடித மூலமாக (சாதி மதம் கவனிக்கப்பட மாட்டாது). முகவரி: முகாமையாளர், 128, மதுரஸா ரோட், கல்முனை-6.

வி. இ. 226487

## ஜீ.சி.ஈ. உயர்தரம்

1984 ஜீ. சி. ஈ. உயர்தர கலை, வர்த்தக, மீட்டல் வகுப்புகள் தற்போது நடைபெறுகின்றன. 1985 ஆம் ஆண்டுக்கான உயர்தரம், ஜி ஏ கியு வகுப்புகள் அடுத்த மாத இறுதியில் ஆரம்பமாகும். முத்திரைக் கவருடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: அமைப்பாளர், கொழும்பு மத்தி கல்வி அபிவிருத்தி நிலையம், 79/11, மீரானியா வீதி, கொழும்பு — 12.

வி. இ. 031944

## ராஜ வசியம்

எமது கட்டணம், ராஜ வசியம் 330/-, கரும பிணி நிவர்த்தி 87/-, ஸ்திரி — புருஷ குடும்ப வசியம் 69/-, தொழில் சிறப்பு, பெரியோர்களின் நல் ஆசி பெற, வசிய மூலிகை பாதுகாப்பு யந்திரம் 45/-, முன் அறிவிப்பு ஆலோசனை (APPOINTMENT) 150/-, ஜாதக குறிப்பு, பலாபலனுடன் 45/-, விசேஷ கல்வி ஞான கவசம் 72/-, எமது மலையாள மாந்திரீகம், எம்மதத்தினருக்கும் உகந்தது. தேவைக்குரிய விடயத்திற்கு, மணி ஓடர் அனுப்புவது அவசியமே. வருகை தர வேண்டிய முகவரி: ஜோதிட மாந்திரீக தத்துவ ஞானி, பீ. கே. சாமி, திருமுகன்ஸ், எண்ணின் பலன் நிறுவனம், இல. 33, தினச்சந்தை, நுவரெலியா.

வி. இ. 226485

கள், கிறிஸ்தவ இதங்கள் பதிவு செய்யப்பட்ட கஸெட்கள் வாங்கச் சிறந்த இடம்: Twinkle, P 1, Front Street, Colombo—11.

வி. இ. 031343

## நண்பர் தொடர்பு

உள்நாட்டு, வெளிநாட்டு பேனா நண்பர்களின் விலாசங்களைக் கொண்டது — "கோவை" விலை 4/-. தபாலில் பெற விரும்புவோர் 4/50க்கு முத்திரை அனுப்பவும். "Kovai" Book Sellers, 189, Central Road, Colombo—12.

வி. இ. 031988

## ஆங்கிலப் பயிற்சி

ஆங்கிலத்தில் பேசுவது எப்படி? என்ற நூலை பெற்றுக் கொள்ளுங்கள். ஏராளமான உரையாடல்களுக்கு தமிழில் விளக்கங்கள் உண்டு. அச்சுப் பதிப்பு! விலை 14/50. வி. பி. பி.யிலும் பெறலாம்.

Aids to Spoken English "Kovai" Book Sellers, 189, Central Road, Colombo—12.

வி. இ. 031585

## கட்டழகு

பெண்கள் கட்டழகுடன் திகழ தனத் [illegible] உயரத்திற்கும், பருமனுக்கும் [illegible] அல்லாத மெலிந்து நலிந்து போன பெண்களுக்கு அழகான, பருமனான [illegible] பகங்களையும், தோற்றத்தையும் பெற விரும்பினால் சுய விலாசமிட்ட [illegible] முத்திரைக் கவருடன் தொடர்பு கொள்க. முகவரி: [illegible] வதி அத்தனயக்க, 55, மிகுந்து மாவத்தை, கொழும்பு—12.

வி. இ. 032364

## நியூமரலாஜி

உங்களின் பிறந்த திகதியிலும் பெயரிலும் [illegible] பொதிந்துள்ள துரதிர்ஷ்டங்களை — நியூமராலஜி எண் கணிதம் மூலம் அறிந்து, உங்களின் பிறந்த திகதிக்கு ஏற்ற [illegible] பொருத்தமான பெயர், [illegible] மணங்கள், [illegible] வியாபாரம், நிறங்கள், [illegible] இலக்கங்கள், [illegible] தினம், பிரயாணம் முதலான [illegible] பல அம்சங்களையும் அதிர்ஷ்டமாக அமைத்து, உங்கள் வாழ்க்கையை மகிழ்ச்சிகரமானதாக ஆக்கிக் கொள்ள விரும்பினால், எமக்கு விண்ணப்பியுங்கள். Sulfika Buhary, 86, Horana Road, Eluwila, Panadura.

வி. இ. 031551

வி. இ. 032066

## கல்விச் சேவை

ஆசிரியரின்றி சுயமாக, விரிவான இலக்கணத்துடன் இலகுவில் ஆங்கிலம் பேச, "SPOKEN ENGLISH" எழுத — வாசிக்க பட்டதாரி ஆசிரியர்களினால் ஆக்கப்பட்ட பாடத் தொகுப்புகள் பல. விவரங்களுக்கு முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க. Lanka Excellent English Service, P. O. Box 119, Jaffna.

வி. இ. 031733

## சிங்கள நூல்

தமிழ் மூலம் சிங்களம் கற்றுப் பேசவும், எழுதவும், "சிங்கள கோஸ்". விலை 12/- வி. பி. பியில் லும் பெறலாம். சகல வழிமுறைகளும் தரப்பட்டுள்ளன.

"Sinhala Course"
Bond Institute, 89/15, Jampettah Street, Colombo—13.

வி. இ. 031984

## ஞாபக சக்திக்கு

மேம்மோறின் (MEMORIN) மூளை விருத்தி வில்லைகள். மேற்கு ஜெர்மனியில் வைத்திய கலாநிதி கிராபி அவர்களால் தயாரிக்கப்பட்டவை. அதிசயிக்கும் வகையில் இழந்த ஞாபக சக்தியை மீட்டுத் தரும், [illegible] போஷாக்கும், சிந்திக்கும் ஆற்றல், விருத்தியையும் கொடுக்கிறது. மாணவ, மாணவிகள், வயது முதிர்ந்தோர், எழுத்தாளர், வச சங்கீத நிபுணர்களுக்கு இன்றியமையாத ஒரு வரப்பிரசாதம். 50 வில்லைகள் கொண்ட பாக்கெற் ஒன்றுக்கு ரூ. 90/-. வி. பி. பியில் பா[illegible] முன் பணத்தோடு பெறலாம். ஏக விநியோகஸ்தர்கள்: [illegible]ITE [illegible]TERPRISES 14, [illegible] StreetColombo 11.

வி. இ. 032380

## [illegible]வர்களுக்கு

[illegible]களே! உங்கள் அந்த [illegible] உறுப்பில் ஏதாவது [illegible]கள் இருப்பின் நிவர்த்தி [illegible] கொள்ள விவரங்களுக்கு [illegible] சமிடப்பட்ட முத்திரைக் [illegible] தொடர்பு கொள்க. முகவரி— பி. எம். திசாநாயக்கா, அரசாங்க பதிவு பெற்ற குப்த விஞ்ஞான மாந்திரீக நிபுணர் (நான்கு தேவாலய பிரதம தர்மகர்த்தா), [illegible], மிகுந்து மாவத்தை, கொழும்பு — 12.

வி. இ. 032364

## ஆங்கில நூல்

தமிழின் உதவியுடன் இலகு வழியில் ஆங்கிலம் பயின்று உரையாடவும், எழுதவும் — "ஈஸி இங்லிஷ்": விலை 12/50 வி. பி. பியிலும் பெறலாம். இலக்கண ரீதியாகப் பயிலும் இச்சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள்.

(Easy English), S. Hariharan, 63/11, Paramananda Vihara Mawatha, Colombo—13.

வி. இ. 031986

## தீப நூல் விற்பனை

திருச்செந்தூர் தீபதரிசனை வெண்தாமரை நூல் நாடெங்கிலும் விற்பனையாகின்றன. பக்கெட்டின் விலை 3/50. மொத்த விற்பனையாளர்கள்: கண்டி: போவத்த மெடிகல் ஸ்டோரர்ஸ், ராகலை: அழவை விநாயகர் ஸ்டோர்ஸ், நுவரெலியா: பெரோஸ் டிரேடர்ஸ். விபரங்களுக்கு, பி. கே. சாமி, 33, தினச்சந்தை, நுவரெலியா.

வி. இ. 226485

## மாதர்களுக்கு

மாதர்களின் மாதவிடாய் எவ்வளவு தாமதமானாலும் உடன் நிவாரணம் பெறுவதற்கும், பாதுகாப்பான சிகிச்சை பெறுவதற்கும் சந்தியுங்கள். பூரண சுகத்தின் பின் பணம் செலுத்தலாம். சிகிச்சை நிலையம், தினசரி திறந்திருக்கும். சிஸிராஸ் கிளினிக், மரதன் கடவல.

வி. இ. 226486

## யந்திரம், மந்திரம்

யாருக்கும் சொல்ல முடியாத, சொல்லியும் பலன் கிடைக்காத மனக் கஷ்டங்களா, காதலர்களுடைய பாசம் மாறுமல் இருக்க வேண்டுமா, கணவன் — மனைவியிடையே உள்ள சச்சரவு, வெறுப்பு, சந்தேகம் தீரவேண்டுமா, குடும்பத்தில் அன்பும், சமாதானமும் நிலைக்க வேண்டுமா, தேவையானவர்களுடைய ஆதரவைப் பெற வேண்டுமா, இவை யாவற்றிற்கும் நிவாரணம் அளிக்கப்படும். இரகசியங்கள் வெளியிடப்பட மாட்டா. விவரங்களுக்கு சுய விலாசமிடப்பட்ட முத்திரைக் கவருடன் தொடர்பு கொள்க. முகவரி:- பி. எம். திசாநாயக்கா, அரசாங்க பதிவு பெற்ற குப்த விஞ்ஞான மாந்திரீக நிபுணர் (நான்கு தேவாலய பிரதம தர்மகர்த்தா), 55, மிகுந்து மாவத்தை, கொழும்பு-12. தொலைபேசி:— 33955.

வி. இ. 032364


★ எதிர்ப்போர் வெளியேறலாம்

இது அரசாங்கத்தின் கொள்கை. இதனை எதிர்ப்போர் அரசாங்கத்தில் இருந்தால் அவர்கள் விலகிக் கொள்ள வேண்டும். அல்லது அவர்கள் வெளியேற்றப்படுவார்கள். அரசாங்கத்தின் கொள்கைக்கு எதிராக அவர்கள் பேச முடியாது.

சர்வ கட்சி மாநாட்டில் இணக்கும் ஏற்பட்ட விடயங்களை நாடாளுமன்றத்துக்கும் சர்வஜன வாக்கெடுப்புக்கும் சமர்ப்பிப்பது தொடர்பாக முழுப் பொறுப்பையும் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவிடமும் அமைச்சரவையிடமும் ஒப்படைப்பதாகத் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்று செயற் குழுவில் நிறைவேற்றப்பட்டது. (ப)

# தமிழ் மொழி அமுல் குறித்து
## பிரதேச அமைச்சு ஆலோசனைக் கூட்டம்

கொழும்பு, ஜூன் 10

அரசமைப்பில் வழங்கப்பட்டுள்ள தமிழ் மொழி உரிமைகளை அமுல் நடத்துவதில் உள்ள சிரமங்கள், அவற்றை நிவர்த்தி செய்து தமிழ் மொழி அமுலாக்கலைத் துரிதப்படுத்தும் நடைமுறைகள் ஆகியவை பற்றி ஆராய்வதற்காக பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செல்லையா இராசதுரை சமீபத்தில் ஆலோசனைக் கூட்டம் ஒன்றை நடத்தினர்.

நாடாளுமன்றக் கட்டடத்தில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட அமைச்சர் திருமதி ஆர். பத்மநாதன், முல்லைத்தீவு மாவட்ட அமைச்சர் ஜனுப் ஏ. ஆர். மன்சூர், மன்னார் மாவட்ட அமைச்சர் ஜனுப் மஹ்ரூப், யாழ்ப்பாண மாவட்ட அமைச்சர் திரு. விஜயகோன், பிரதி தபால் அமைச்சர் ஏ. அப்துல் மஜீத், பொத்துவில் நாடாளுமன்றப் பிரதிநிதி ஜனுப் உதுமா லெப்பை, சேருவில நாடாளுமன்றப் பிரதிநிதி திரு. லீலாரத்தின, மின்சார பிரதி அமைச்சரும், அம்பாறை மாவட்ட அமைச்சருமான திரு. தயாரத்தின, பிரதேச அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் திரு. ஆர். இராமலிங்கம், தமிழ் மொழி அலுவல்கள் பணிப்பாளர் திரு. இராஜநாயகம், இந்து சமய பிரதிப் பணிப்பாளர் திரு. தங்கவேல், பிரதேச அபிவிருத்திப் பணிப்பாளர் திரு. எம். ஸ்ரீசண்முகராசா ஆகியோரும் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

தமிழ்மொழியை அமுலாக்குவதில் உள்ள தேவைகள் கூட்டத்தில் விசேஷமாக ஆராயப்பட்டன. தமிழ்மொழியை அமுல் செய்வதற்கு ஒரு உயர்ந்த அதிகாரி நியமனம் செய்யப்பட வேண்டும் என்றும், சகல அரசாங்க திணைக்களங்களிலும், கூட்டுத்தாபனங்களிலும் தமிழ் சிங்கள மொழிபெயர்ப்பாளர்களும், தமிழ் தட்டெழுத்தாளர்கள், சுருக்கெழுத்தாளர்கள் ஆகியோரும் நியமனம் செய்யப்பட வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

தமிழ்பேசும் மக்களோடு சகல அரசாங்கத் தொடர்புகளும் தமிழ் மொழியிலும் செய்யப்பட வேண்டும் என்பதில் ஆலோசனையில் கலந்து கொண்ட மாவட்ட அமைச்சர்களும், நாடாளுமன்றப் பிரதிநிதிகளும், மிகுந்த ஆர்வம் காட்டினர்கள்.

1985 ஆம் ஆண்டு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஆரம்பிக்கப்பட இருக்கும் தமிழ் திட்டங்களின் விவரங்களை நாடாளுமன்றப் பிரதிநிதிகளும், மாவட்ட அமைச்சர்களும் ஜூன் மாத இறுதிக்குள் அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

தமிழ்மொழியிலுள்ள கஷ்டங்களை உடன் களைந்துவிட வேண்டும் என்றும், அதற்கான நடவடிக்கைகளை துரிதமாக்க வேண்டும் என்றும், அவற்றைச் செய்வதில் மாவட்ட ரீதியாக லிகிதர்கள் தட்டுப்பாடு, தட்டச்சு இயந்திரங்கள் தட்டுப்பாடு, மொழிபெயர்ப்பாளர் தட்டுப்பாடு நிலவுகின்றது என்றும் சம்மாந்துறை நாடாளுமன்றப் பிரதிநிதியும், பிரதி தபால் அமைச்சருமான ஜனுப் மஜீத் கூறினர்.

அம்பாறை மாவட்டத்தில் தமிழ்மொழி அமுலாக்கலுக்கு சகல ஒத்துழைப்பையும் வழங்கத் தாம் தயாராக இருப்பதாகவும், அதற்கான உத்தியோகத்தர்களைத் தந்துதவுமாறும் அம்பாறை நாடாளுமன்றப் பிரதிநிதியும், அம்பாறை மாவட்ட அமைச்சரும், உதவி மின்சார அமைச்சருமான தயாரத்தின அமைச்சரிடம் கேட்டுக் கொண்டார்.

மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தளவில் பிரதேசஅபிவிருத்தி அமைச்சர் மன்னார் கச்சேரிக்கு விஜயம் செய்து தமிழ் மொழி அலுவல்களை ஆரம்பித்து வைத்தார்.

அங்கு ஓரளவு நிருவாக ஒழுங்குகள் சீராக நடைபெறுகின்றன. அவற்றை மேலும் விஸ்தரிக்க வேண்டுமென்று மாவட்ட அமைச்சர் மஹ்ரூப் கருத்துத் தெரிவித்தார். (த)


## பிறந்தநாள் வாழ்த்துக்கள்

கட்டப்பிராய், கோப்பாய் சந்திரா விவேகானந்தன் இன்று (10-6-84) தனது பிறந்த நாளை கொண்டாடுகிறார். இவரை அன்பு கிருஷ்சாந்தன், கிருஷ்சாந்தி, அத்தான் (ஜேர்மனி), சாந்த் காமண்ட்ஸ் ஊழியர்கள், ஸ்ரீதரன், சின்ராசு பல்லாண்டு வாழ வாழ்த்துகிறார்கள்.

வி. இ. 036202

## ரமழான் மலர்ந்து விட்டது

உயர்ரக ஆடைகள் — சாரிகள் — பிளவுஸ் என்பவற்றை குறைந்த விலையில் பெறுங்கள்.

டிரவ்சர் — சேர்ட்ஸ் — லேடிஸ் சபாரிஸ் உடைகளை சீக்கிரமாக, நேர்த்தியாக தைத்துக் கொள்ள நாடுங்கள்:

**MODERN DRAPERY STORES**

5, W. A. Silva Mawatha, Colombo—6.

## கொசுவின் தொல்லை! நீங்க வழி!

அமெரிக்காவில் உள்ள ஜியார்ஜியா என்ற பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் ஆர்டன் லீ என்பவர் கொசுக்களின் (நுளம்புகள்) தொல்லையிலிருந்து தப்புதற்கு ஒரு புதிய புதுமையான வழியைக் கண்டு பிடித்திருக்கிறார்.

இவர் இதற்காக கொசுக்களின் மீது தெளிக்கும் ஒரு வகையான மருந்தைத் தயாரித்துள்ளார்.

அம்மருந்தை கொசுக்களின் மீது தெளித்து விட்டால் அவைகள் இறந்து விடுவதோ அன்றி ஓடி விடுவதோ இல்லை!

அவ்வதிசய மருந்தை கொசுக்களின் மீது தெளித்தவுடன் கொசுக்களின் மனம் மாற்றம் அடைந்து விடுகிறது. இதனால் தாங்கள் வழமையாக மேற்கொள்ளும் மனிதர்களைக் கடிக்கும் குணமும் மாறி சாதாரண பூச்சியின் நிலைக்கு ஆகிவிடுகின்றன.

மனிதர்களில் வந்து மொய்த்தாலும் அவைகள் யாதொரு தீங்கும் செய்வதில்லை.

(ம-236)

## வெளிநாடு வேலை பார்க்கும்

# 2375 பேர்

# திருப்பி அழைக்க

# கோருகின்றனர்!

### பணிப்பெண்களாக சென்றவர்களே

### இவர்களில் அதிகம்

கொழும்பு, ஜூன் 10

கடந்த இரண்டு வருட காலப்பகுதியில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பெற்றுச் சென்ற இலங்கையருள் 2375 பேர், தம்மை மீண்டும் இங்கு வரவழைத்துக் கொள்ளும்படி தொழில் திணைக்களத்தைக் கேட்டிருக்கின்றனர்.

தாம் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாகவும், அதனால் தம்மை இலங்கைக்கு வரவழைக்கும்படியும் அவர்கள் கோரியுள்ளனர்.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊழல்கள் பற்றி முறைப்பாடு செய்பவர்களில் பெரும் பாலானவர்கள் வீட்டுப் பணிப் பெண்களாகச் சென்ற யுவதிகளாவர் என்றும் தொழில் அமைச்சின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தொழில் ஏஜன்ஸிகளுக்கெதிராகக் கிடைத்திருக்கும் முறைப்பாடுகளில் 55 வீதமானவை பதிவு செய்யப்பட்ட தொழில் ஏ ஜ ன் ஸிகளுக்கெதிரானவையாகும்.

பணமோசடி, குறைந்த சம்பளம் தொடர்பாக 272 முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

(ண-11)



"டெஸ்ட் டியூப் பேபி" என அழைக்கப்படும் பரிசோதனைக் குழாய்க் குழந்தைகள் உற்பத்தி செய்வது இப்போது சாதாரணமாகி விட்டது. இது போல் மரங்களையும் பிளாஸ்டிக் குழாய்களில் வளர்த்தால் அதிக நன்மை பெறலாம் என்று ஆஸ்திரேலியரானகிரஹாம் டியூலி கண்டுபிடித்திருக்கிறார். குழாயில் வளர்க்கப்படும் தாவரம் மூன்று மடங்கு அதிக வேகத்தில் வளர்ச்சி அடைகிறது என்று இவர் கூறுகிறார். (ம-சி)

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, ஜூன் 10

கொழும்பில் நேற்று முன்தினம் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட தேசிய சுவீப் முடிவுகளு:

முதலாவது பரிசு

**12 Z 0750**

ரூ, 1,89,600

இரண்டாவது பரிசு

**15 W 0523**

ரூ. 71,100

மூன்றுவது பரிசு

**05 N 0010**

ரூ. 23,700

தலா 853 ரூபா 20 சதம் பரிசு பெறும் 100 ஆறுதல் பரிசு விவரம் வருமாறு:-

01 A 0029 05 A 0551
08 A 0981 11 A 0940
12 A 0464 12 A 0761
16 A 0371 21 A 0036
15 B 0324 17 B 0262
17 B 0345
01 C 0787 01 C 0826
11 C 0040 18 C 0067
18 C 0733 18 C 0885
05 D 0552 06 D 0075
06 D 0143 06 D 0561
09 D 0350 17 D 0527
20 D 0025
01 E 0939 04 E 0053
05 E 0773 05 E 0923
08 E 0764 11 E 0954
12 E 0750 20 E 0305
04 F 0569 08 F 0481
03 G 0226 05 G 0639
09 G 0247 16 G 0820
19 G 0222
08 H 0940 12 H 0680
14 H 0286 14 H 0348
17 H 0038 18 H 0135
05 J 0523 07 J 0514
08 J 0836 09 J 0362
09 J 0816
04 K 0604 07 K 0232
12 K 0307 15 K 0245
19 K 0873
02 L 0772 13 L 0206
16 L 0957 17 L 0001
05 M 0769 08 M 0950
17 M 0569 19 M 0236
11 N 0107 19 N 0881
20 N 0758
04 O 0136 08 O 0529
09 O 0855 15 O 0845
20 O 0395
15 P 0910 20 P 0404
02 Q 0222 02 Q 0227
04 Q 0794 06 Q 0188
12 Q 0850 17 Q 0236
17 Q 0609 18 Q 0129
08 R 0414
02 S 0229 17 S 0723
06 T 0345 13 T 0422
06 T 0345 13 T 0422
16 T 0502
19 V 0684
06 W 0114 07 W 0338
14 W 0913
01 X 0753 05 X 0606
09 X 0475 10 X 0459
02 Y 0130 07 Y 0742
12 Y 0394 14 Y 0862
17 Y 0753

## கார்ப்டர் மீது குற்றச்சாட்டு

மாட்ரிட், ஜூன் 9

இவ்வருட ஒலிம்பிக் போட்டிகளை ரஷ்யா பகிஷ்கரிப்பதற்கு முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டரே காரணமென தாம் கருதுவதாக சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் தலைவர் ஜுவான் அன்டோனியோ சமராங் பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

1980 இல் மாஸ்கோவில் நடைபெற்ற போட்டியில் அமெரிக்கா பங்குபற்றியிருந்தால், ரஷ்யா இவ்வருட போட்டிகளைப் பகிஷ்கரித்திருக்காது என அவர் கூறினார்.

ரஷ்யாவின் ஆப்கானிஸ்தான் ஊடுருவல் காரணமாக அமெரிக்கா 1980 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளைப் பகிஷ்கரித்தது. அப்போது ஜனாதிபதி கார்ட்டர் பதவியில் இருந்தார்.

(ய-ந)

## வடபகுதி இராணுவ நட....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போது மரணமாவோரின் சடலங்கள் மரண விசாரணையின்றி அகற்றப்படும் நடவடிக்கையை கைவிட்டு இத்தகைய எல்லா மரணங்களின் போதும் மரண விசாரணை நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் திட்டப்படி பயங்கரவாத ஒழிப்புக்கென முப்படைகளிலும் இருந்து தெரிந்தெடுத்த வீரர்களைக் கொண்ட நான்காவது படைப் பிரிவு ஒன்று வடக்கில் அமைக்கப்படும்.

இராணுவ, விமானப் படை கமாண்டோக்களும், கடற்படை ரோந்துப் பிரிவினரும் இந்த நான்காவது படையில் நியமனம் பெறுவார்கள்.

முப்படைகளிலுமிருந்து தனித்து சுதந்திரமாக இந்த நான்காவது படை இயங்கும்.

அதேவேளை முப்படைத் தளபதிகளோடும், தேசிய பாதுகாப்பு அமைச்சுடனும் நேரடியாக தொடர்பு கொண்டு நடவடிக்கைகளை எடுக்கக் கூடியதாகவும் இந்த நான்காவது படை விளங்கும்.

வட பகுதி இணைப்பு அதிகாரியின் கட்டுப்பாட்டின் கீழ் ஆயுதப்படைகளின் கூட்டு நடடிக்கைகளை மேற்கொண்ட போது எழுந்த சில நடைமுறைச் சிக்கல்களை ஆராய்ந்த பின்னரே இந்த நான்காவது படையை அமைக்கும் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது.

இந்தப் படை குருநகரில் அல்லது, கட்டுக்குருந்தையில் இருந்து இயங்கலாம். வெளிநாட்டு பாதுகாப்பு நிபுணர்களின் ஒத்துழைப்பும் இந்தப் படைக்கு வழங்கப்படும்.

அதேவேளை இப்போதிருக்கும் முப்படைகளின் நடவடிக்கைகள் வடக்கில் தொடர்ந்து இருக்கும்.

இராணுவத்தினர் இப்போது வடக்கில் ஒரு மத்திய முகாமிலிருந்து செயல்படுகின்றனர். இதற்குப் பதிலாக 1983 ஜூலைக்கு முன்னர் இருந்தது போல் யாழ். குடா நாட்டில் பல முகாம்களை அமைத்து பாதுகாப்புப் படையினர் செயல்படவிருக்கின்றனர்.

வடக்கில் பொலீஸாருக்கு இருக்கும் வசதிகளும் அதிகரிக்கப்படவிருக்கின்றன.

தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு- லலித் அத்துலத் முதலி யாழ்- குடா நாட்டில் எல்லாப் பொலீஸ் நிலையங்களுக்கும் விரைவில் விஜயம் செய்யவிருக்கிறார்.

(த-ப)

## சீனன்குடாவில்: மேலும் 3 களஞ்சியங்கள் சீல் வைப்பு

சீனக்குடா, ஜூன் 9

சீனக்குடா இளப்பன் பேர்க் உணவுத் திணைக்களத்துக்குரிய மேலும் மூன்று களஞ்சியங்களுக்கு அதிகாரிகள் "சீல்" வைத்தனர்.

சீனி மற்றும் அரிசி வகைகள் இந்த களஞ்சியங்களில் களஞ்சியப் படுத்தி வைக்கப் பட்டிருந்தன.

இக் களஞ்சியங்களில் கையிருப்பு குறைந்திருப்பதாக கருதப் படுவதன் காரணமாக இந் நடவடிக்கை மேற் கொள்ளப் பட்டதாக அறியப்படுகின்றது.

முன்பும் 8 களஞ்சியங்கள் அதிகாரிகளினல் "சீல்" வைக்கப்பட்டது, தெரிந்ததே.

(த-54)

## பூக்கோறு அரிசி மலிவு விற்பனை

வானொலி

8.00 உலகச் செய்திகள்
8.10 கிறிஸ்தவ நிகழ்ச்சி
8.40 கிறிஸ்தவ கீதங்கள்
9.00 செய்திகள்
9.30 ...

## RADIO CLASSES

1984 இன் இரண்டாம் குழுவுக்கு மாணவ, மாணவிகள் சேர்க்கப்படுவர், நேரில் கற்பதற்கும், தபாற் போதனைக்கும்

# பூக்கோரு அரிசி மலிவு விற்பனை

வெண்மையும், மென்மையும் நிறைந்த கல், மண் இல்லாத ஒட்டல், வீட்டுச் சாப்பாட்டிற்கும், தோசை, இட்லி போடுவதற்கும் உகந்ததுமான பூக்கோரு அரிசி விற்பனைக்கு உண்டு. குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் பெரிய சிந்தாமணிக் கடலையும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:—

**P. B. உம்பிச்சி லிமிட்.,**
28, 4ஆம் குறுக்குத் தெரு,
கொழும்பு—11.
தொலைபேசி இல: 23408 — 21972 — 28610



# இறக்குமதி செய்யப்பட்ட பிளாஸ்டிக் கூரைத் தகடுகள்

ஐந்து கண்கவர் நிறங்களில்
சிறிய பெரிய நெளிவுகளில்
இப்போது கிடைக்கின்றன

பெரிய நெளிவு 2½ அடி (720 மி. மீ.) அகலத்தில் 6, 7, 8 அடி (1820 மி. மீ. 2120 மி. மீ. 2400 மி. மீ.) நீளங்களில்.

**விலை அடி ரூ. 21/–**

சிறிய நெளிவு 2 அடி (660 மி. மீ.) அகலத்தில் 6, 7, 8 அடி (1820 மி. மீ. 2120 மி. மீ-2420 மி. மீ.) நீளங்களில்

**விலை அடி ரூ. 17/50**

பிளாஸ்டிக் தகடுகளைப் பொருத்துவதற்குத் தேவையான ஆணிகள் வசர்களுடன்

**பெக்கட் ரூ. 4/–**

இறக்குமதியாளர்கள்:—

**தேவ் அன்ட் ஸ்ரீ என்டர்பிறைஸ்**
19, அப்துல் ஜப்பார் மாவத்தை,
கொழும்பு – 12
போன்:– 33807, 27044


விரைவில் விஜயம் செய்யவிருக்கிறார்.

(த–ப)

அதிகாரிகளினால் "சீல்" வைக்கப்பட்டது தெரிந்ததே.

(த–54)

## வானொலி

10—6—1984

காலை —
5.30 நாதாஞ்சலி காசி விஸ்வநாதர் சுப்ரபாதம் — எம். எஸ். சுப்புலக்ஷ்மி
5.35 தோத்திரமாலை
6.00 சைவநற்சிந்தனை
6.05 கத்தோலிக்க நற்சிந்தனை
6.10 பௌத்த நற்சிந்தனை
6.15 நன்னெறி
6.30 செய்திகள்
6.50 மெல்லிசைப் பாடல்கள்
7.00 ஒன் வீ கோ (ஆங்கில நிகழ்ச்சி)
7.30 மாகாணச் செய்திகள்
7.35 கிறிஸ்தவ கீதங்கள்
8.00 துதிப் பாடற் பயிற்சி
8.15 முஸ்லிம் நிகழ்ச்சி
8.45 மெல்லிசைப் பாடல்கள்
9.15 சங்கீதாமிர்தம்
9.30 விசேஷ நிகழ்ச்சி (உலக சுகாதார வாரம்)
9.45 நாதவிநோதம்
10.00 குதூகலம்
10.30 நேயர் கடிதம்
10.45 பூவையர் பூங்கா
11.15 சிறுவர் மலர்
மாலை —
6.00 செய்திகள்
6.20 இப்தார் நிகழ்ச்சி
6.35 கோபுரதரிசனம்
7.05 முஸ்லிம் நிகழ்ச்சி
இரவு —
8.00 உலகச் செய்திகள்
8.10 கிறிஸ்தவ நிகழ்ச்சி
8.40 கிறிஸ்தவ கீதங்கள்
9.00 செய்திகள்
9.30 பக்திப் பாடல்
9.45 கிளாரினட் – ஏ. கே. ஸி. நடராஜன்

## டெலிவிஷன்

### ரூபவாஹினி

5-30 சிறுவர் கதைகள்
5-55 பிளே ஹவுஸ்
6-25 "மஜ்லிசுல் இஸ்லாம்"
6-55 செய்திகள் – தமிழ்
7-15 "பிஸ் பை கெட்ச்"
7-30 பியூசர் அட்ரக்சன்ஸ்
7-45 விளையாட்டுச் செய்திகள்
8-15 செய்திகள் – சிங்களம்
8-35 நந்தன விந்தன
9-30 செய்திகள் – ஆங்கிலம்
9-50 போகஸ்
10-00 பிக் வெலி
10.30 உலகச் செய்திகள்

### ஐ. டி. என்.

6-01 ஏ. பி.சி. வைட் வேர்ல்ட் ஒப் ஸ்போர்ட்ஸ்
7-00 கோர்னெல்ஸ் கீத மாலா
7-15 மியுரு கீ
7-30 இசை நிகழ்ச்சி
8-00 த இன்க்ரடிபில் ஹல்க்
9-00 ரொக்பர்ட் டைல்ஸ்
9-30 செய்திகள் – ஆங்கிலம்
9-45 ரொக்பர்ட் டைல்ஸ் (தொடர்ச்சி).

| | | |
|---|---|---|
| | 17 D 0527 | |
| | 20 D 0025 | |
| 01 E 0939 | | 04 E 0053 |
| 05 E 0773 | | 05 E 0923 |
| 08 E 0764 | | 11 E 0954 |
| 12 E 0750 | | 20 E 0305 |
| 04 F 0569 | | 08 F 0481 |
| 03 G 0226 | | 05 G 0639 |
| 09 G 0247 | | 16 G 0820 |
| | 19 G 0222 | |
| 08 H 0940 | | 12 H 0680 |

## பூண்டுலோயா முத்துமாரியம்மன் ரத உற்சவம்

பூண்டுலோயா, ஜூன் 10

பூண்டுலோயா அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் வருடாந்த ரத உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

பூண்டுலோயா இந்து இளைஞர் மன்றத்தின் ஆதரவில் வரவழைக்கப்பட்ட சித்திரத் தேர் பவனி இன்று இரவு 9.00 மணிக்கு கோயிலில் இருந்து புறப்பட்டு கீழ்க்கடைவீதி, மேட்டுக் கடைவீதி வழியாகச் சென்று திங்கட்கிழமை காலை கோவிலை வந்தடையும்.

இன்று மாலை பிரதமரின் பத்து லட்சம் வீடமைப்புத் திட்டம் வெற்றிபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விசேஷ பூஜையில் நுவரெலியா மாவட்ட அபிவிருத்தி சபை தலைவர் திரு. மஹிந்த தெல்பிட்டிய, பூண்டுலோயா கிராமோதய தபைத் தலைவர் திரு. கே. சண்முகநாதன், பூண்டுலோயா பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோரும் கலந்து கொள்வார்கள் என இந்து இளைஞர் மன்ற அமைப்புக்குழுத் தலைவர் திரு. லோகநாதன் தெரிவித்தார்.

## புனித ரமழான் சிந்தனைகள்

அருள் நிறைந்த அருமை ரமழான் பொறுமை உள்ளவர்களாக நாம் இருக்க வேண்டுமென்று உணர்த்திக் கொண்டிருக்கின்றது.

விசுவாசிகளே! பொறுமையோடு இருங்கள். பரஸ்பரம் பொறுமையைக் கூறி இணைந்து நடவுங்கள். அல்லாஹ்வை அஞ்சுங்கள்; வெற்றி பெறுவீர்கள். (அல்குர்ஆன் – 3;200)

—எப். எம். பைரூஸ்

விசுவாசிகளே! பொறுமையைக் கொண்டும், தொழுகையைக் கொண்டும் உதவி தேடுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கிறான். (அல்குர்ஆன் – 2:153)

மேற்கண்ட இறை வணக்கங்கள் எமது சிந்தையில் ஆழமாகப் பதிய வேண்டும். எமக்குச் சோதனைகள், துன்ப துயரங்கள் தொடர்ச்சியாக வந்தாலும் பொறுமையைக் கொண்டு அவற்றை நாம் வெல்ல வேண்டும்.

திருக்குர்ஆன், ஹதீத் ஆகிய சட்ட திட்டங்களின் மீது நிலைத்து நிற்பது தான் பொறுமையின் மெய்ப் பொருள்.

இவ்வாறு அல்கவ்வாஸ் (ரஹ்) அவர்கள் பொறுமைக்கு விளக்கம் அளித்தார்கள்.

பொறுமை உனக்கு உற்ற துணைவனாக இருப்பின் அது உனக்கு நிலையான செல்வங்களை ஈட்டித் தரும்.

பொறுமை இறை தூதர்களின் பண்பாகும். அதிலிருந்து மத பக்தர்கள் தம் கவனத்தைத் திருப்பிக் கொள்ள மாட்டார்கள்.

இவ்வாறு இமாம் ஷஅதி அவர்கள் பொறுமைக்குப் பொருள் கூறினார்கள்.

ரமழானில் இருந்து நாம் பொறுமைசாலிகளாக வாழ திடசங்கற்பம் பூண வேண்டும். பொறுமையிலேயே வெற்றி உண்டென்று நம்பி செயற்பட வேண்டும்.

பொறுமையாய் நாம் இருப்பதால் எமக்குக் கஷ்டம் வராது. பொறுமையை நாம் கடைப்பிடித்து வாழ உறுதி பூணுவோம்.

ரமழானின் ரஹ்மத்தைக் கொண்டு அல்லாஹுத்தஆலா எமக்கு பொறுமையைத் தந்தருள்வானாக! ஆமீன்!! யாரப்பல் ஆலமீன்!!!


# RADIO CLASSES

1984 இன் இரண்டாம் குழுவுக்கு மாணவ, மாணவிகள் சேர்க்கப்படுவர். நேரில் கற்பதற்கும், தபால் போதனைக்கும் வகுப்புகளுண்டு. அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழும், உபகரணங்களும் இலவசம். எமது கல்வி நிலையத்தில் படித்து படிக்கின்றவர்களுக்கு தொலைக்காட்சிப் பாடத் தொகுப்பு இலவசம். எமது 15 வருட அனுபவத்தில் முழு நிறைவான அறிவைப் பெறுங்கள். நேரிலோ 9"X4" அளவுள்ள சொந்த முகவரியிட்ட முத்திரை உறையனுப்பியோ விவரங்களை இலவசமாகப் பெறலாம்.

அதிபர்,

**டெக்னிக்கல் ட்ரெயினிங் சென்டர்**
235; 2 ஆம் மாடி, ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு – 11.



# புத்தாடை அணிந்து ரமழான் திருநாளைக் கொண்டாட அழைக்கிறது

**LUCKY PLAZA EMPORIUM**
AIR-CONDITIONED

மங்கையரை மலைக்கச் செய்யும் மணங்கமழ் சாரிகள்.



★ மாது
★ முந்தானை முடிச்சு
★ ஊர்வசி
★ பூனம்
★ சக்தி
★ ஒஜ்ஜிவரா
★ கிறிஸ்பல்
★ நிகுல் பிரேமிகா
★ ரேக்கா குயின்
★ றோயல் குயின்
★ நைட் பீவர்
★ கிரவுண் சீரிஸ்
★ மணிப்புரி
★ பர்கா ராணி
★ கண்டஸ்ரிங் மணிப்புரி
★ தஞ்சோய் சில்க்
★ பனாரிஸ்

ரூபி குயின் — லவ்போட் — கவிதா — பொன் மேனி — கிளியோபட்ரா — டிக் டிக் கஜிசில்க் — டார்லிங் டார்லிங் டார்லிங் — ஸ்ரீதேவி, சபாற, லக்கி குயின்.

ஆடவரின் எண்ணம்போல் வண்ணத் தெரிவுகள்

டிப்பி — கிராண்ட்டி — ராடோ — ஹம்ஸ்டில் — சிலைசி — ரொன்சன் — ஜெயட்ஸ் — குவான் — ரொம்பேக் — போன்ற உயர்ரக ஷேர்ட் வகைகளும் — ஷேர்ட்டிங்ஸ் — சூட்டிங்ஸ் — டி சேர்ட்ஸ் — சிலிப்பர்ஸ் — வாசனைத் திரவியங்கள் போன்ற உங்கள் தேவைகள் அனைத்தையும் தரமானதாக தருவதில் தனித்துவமானவர்கள் — தாமதம் வேண்டாம் விரைந்து வாருங்கள்.

**லக்கி பிளாஸா எம்போரியம்**
— குளிரூட்டப்பட்டது —
225 — 2ஆம் குறுக்குத் தெரு,
கொழும்பு—11.
தொலைபேசி:— 549385.



தலையில் என்ன கூடையா?, என்று வியப்படையாதீர்கள். இது ஒருவகை தொப்பியாம். இது பார்ப்பதற்கு பெரியதாக இருந்தாலும் மிகவும் லேசான துதானும். இம்மாதிரி 50 வகையான தொப்பிகள் வைத்திருக்கும் "ஜெர்டி சில்லிங்" என்ற இந்த அழகி இதற்காகவே லண்டனில் நடத்தப்பட்ட விழாவில் "நேஷனல் அவார்டை" வாங்கியிருக்கிறார். (ம-10)

# அசுத்தம் அணுகுண்டை விட அபாயகரமானது!

அணுகுண்டு அபாயம் உலகை அச்சுறுத்தி வருகிறது. இந்நிலையில் அணுகுண்டை விட ஆபத்தான தொன்றும் இருக்கிறது என்று நிபுணர்கள் தெரிவிக்கிறார்கள். ஆம்!, அதுதான் அசுத்தம்!

நல்ல காற்றைச் சுவாசிப்பதென்பது நகர்ப்புற மக்களுக்கு, குறிப்பாக வேகமாக வளர்ந்து வரும் பெரு நகரங்களில் மிகவும் அரிய ஒன்றாக ஆகிவிட்டது.

உயிரினங்கள், தாவரங்கள் மனிதனுக்கு நெருக்கமாக இருந்த காலம் ஒன்று இருந்தது. இயற்கையின் செறிவு மனித இனத்தைப் போற்றி வந்தது. நவீனமயம், நகர்ப்புறத் தொழில்மயம் மற்றும் அதிகரித்து வரும் மக்கள் தொகை ஆகியவற்றின் விளைவாக இயற்கை பல்வேறு வழிகளில் நாசமாகியது.

அசுத்தக் கேட்டின் விளைவாக நாட்டின் விலை மதிப்பற்ற செல்வங்களை நாம் இழந்துள்ளோம். வன விலங்குகளில் சிறுத்தை இனத்தை நாம் முழுமையாக இழந்து விட்டோம். பறவைகளில் 500 இனங்கள் தற்போது இல்லை. எண்ணற்ற தாவரங்களையும், பூக்களையும் நாம் நிரந்தரமாக இழந்து விட்டோம்.

சுற்றுப்புறச் சூழ்நிலையின் முக்கியத்துவத்தை மனிதன் அசட்டை செய்ததே இதற்குக் காரணம். அணு ஆயுதப் போரைவிட, சுற்றுப்புறச் சூழ்நிலைக் கேடுதான் படிப்படியாக மனித நாகரிகத்தினை அழிக்க வல்லதாக உள்ளது.

நகரங்கள், தொழில்களின் தாறுமாறான வளர்ச்சி, சுதந்திரமான நீர் வழிகள் மற்றும் வன விலங்குப் பகுதிகள் அழிவு ஆகியவையே நாகரிகங்கள் அழியக் காரணம் என்று வரலாறு நிரூபித்துள்ளது.

விமானத்தளம், சுரங்கங்கள், இரசாயன ஆலைகள், அனல் மின் ஆலைகள் மற்றும் காடுகள் அழிப்பு போன்றவற்றில் ஈடுபாடு கொண்டுள்ள தொழில்மய, சமுதாயம், கட்டடக்கலை மற்றும் நினைவுச் சின்னங்களை மெதுவாக அழித்து வருகின்றது.

நினைவுச் சின்னப் பகுதிகளிலும், இவற்றைச் சுற்றிலும் துரித கதி நகர்ப்புற மயம் மற்றும் தொழில் மயத்தின் விளைவாக இவை பெரும் ஆபத்துக்குள்ளாகி உள்ளன. தாஜ்மகால் இதற்குச் சிறந்த உதாரணம்.

இதுபோலவே கடற்கரைப் பகுதிகள் மற்றும் வனவிலங்குப் பகுதிகளும் மனிதனின் தவறான போகினால் பாழ்பட்டுள்ளன. (ம-சி)



## தண்ணீரில் சறுக்கும் அழகியின் விபரீத ஆட்டம்!

பொதுவாகத் தண்ணீரில் சறுக்கும் விளையாட்டைப் படங்களில் பார்த்திருப்பீர்கள். அதில் எல்லாம் இரண்டு சறுக்குக் கட்டைகளை வைத்துக் கொண்டு படகின் பின்னால் சறுக்கிக் கொண்டு போவார்கள். ஆனால் இப்போது அதில் "திரில்" ஏதும் இல்லை என்று கூறுகிறார்கள் அமெரிக்கர்கள். அமெரிக்காவில் உள்ள ஒரு ஏரியில் கீத் என்ற பெண்ணும், இரு ஆண்களும் ஒரு புதுமாதிரியாக தண்ணீரில் சறுக்கி விளையாடினர். இரண்டு சறுக்குக் கட்டைகளுக்குப் பதிலாக இரு ஆண்கள் படுத்துக் கொள்ள அவர்களின் மேல் "கீத்" ஏறி நின்று சறுக்கினார். இப்போது இந்த விபரீத விளையாட்டு அமெரிக்காவில் பெருகி வருகிறது. (ம-10)

## சாணஎரிவாயுவின் தேவை அதிகரிப்பு

மண்ணெண்ணெய், பெட்ரோலிய எரி வாயு, விறகுக்குப் பதிலாக சாண எரிவாயுவைப் பயன்படுத்தும் வழக்கம் கடந்த சில ஆண்டுகளாகவே மக்களிடையில் நிலவி வந்துள்ளது.

எனினும் நாடு முழுவதும் எல்லா மக்களும் சாண எரிவாயுவைப் பெருமளவில் பயன்படுத்தும் நிலையை உருவாக்க வேண்டுமென்று மத்திய, மாநில அரசுகள் சில ஆண்டுகளாகவே பெரிதும் முயன்று வருகின்றன.

இந்தியப் பிரதமரின் புதிய 20 அம்சத்திட்டத்தில் இது ஒரு அம்சமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு முனைப்புடன் செயல் படுத்தப்படுகிறது.

1983–84 ஆம் ஆண்டில் தமிழகத்தில் 5,000 சாண எரிவாயுக் கலன்களை அமைக்கவேண்டுமென்று மத்திய அரசு இலக்கு நிர்ணயித்தது.

இவற்றில் 1983 ஆம் ஆண்டு டிசம்பர் முடிய அதாவது குறியீட்டை அடைய மூன்று மாதங்களுக்கு முன்பாகவே தமிழக அரசு 5045 அமைப்புகளை நிறுவி சாதனை புரிந்துள்ளது.

எஞ்சியுள்ள காலத்தில் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் இலக்கினையும் எடுத்துக் கொண்டு செயல்படுத்த மாநில அரசு முன் வந்துள்ளது. இதன் மூலம் 6,000 கலன்களை அரசு ஏற்படுத்தி விடக்கூடும். (ம-சி)

## பூண்டு உட்கொண்டால் கொசு அருகில் வராது!

உங்களுக்கு "பூண்டு" பிடிக்குமா?, அப்படியானால் கவலை இல்லை. உணவில் பூண்டு அதிகம் சாப்பிடுபவர்களை கொசுக்கள் அணுகவே அணுகாதாம.

இப்படி ஒரு மருத்துவ ஆராய்ச்சி குறிப்பு கூறுகிறது. இதை பரிசோதனையின் போது ஆராய்ந்து பார்த்த விஞ்ஞானிகள் பூண்டின் நெடி தாங்க முடியாமல் ஐந்து வெவ்வேறு வகையான கொசுக்கள் செத்து மடிந்தனவாம். (ம-10)

## ஆண்களுக்கு மாத்திரம்

ஆண்களின் இரகசிய நோய்களான ஆண்மைக் குறைவு, வீரியமின்மை, துரித ஸ்கலிதம், நரம்புத் தளர்ச்சி, இல்லறத்தில் விருப்பமின்மை ஆகிய கோளாறுகளுக்கு 30 வருட அனுபவமுள்ள என்னை நேரில் சந்தியுங்கள். அல்லது கடித மூலம் தொடர்பு கொள்ளுங்கள். இரகசியங்கள் யாவும் பாதுகாக்கப்படும்.



"ஷம்மு" பாடு ஒரே குஷி!



## சீர்திருத்த வந்தவர்கள்



விருப்பமின்மை ஆகிய கோளாறுகளுக்கு 30 வருட அனுபவமுள்ள என்னை நேரில் சந்தியுங்கள். அல்லது கடித மூலம் தொடர்பு கொள்ளுங்கள். இரகசியங்கள் யாவும் பாதுகாக்கப்படும்.


**Dr. ஏ. முகம்மது**

REGD. NO. 6345

கொழும்பு மெடிக்கல் சென்டர்,
190, ஜெம்பட்டா வீதி, கொழும்பு — 13.

## ஆஸ்த்மா-சிலசான்றுகள்

திரு. பீ. சாய்ந்தியாப்பிள்ளை,
போஸ்ட் மாஸ்டர் கரவெட்டி:

என் மனைவிக்கு கடந்த 6 வருடங்களாக இருந்த மார்ச்சளி, இழுப்பு, மார்பில் ஏற்படும் "கர் கர்" என்ற சத்தம் ஆகியவற்றை டாக்டர் அப்துல்லா முகம்மது அவர்கள் பூரணமாகச் சுகப்படுத்தி விட்டார். என் மனைவியின் நோய்க்கு நான் செய்யாத வைத்தியமில்லை, காணாத டாக்டர்கள் இல்லை. நன்றி.

ஜனாப் ஏ. எம். உவைஸ்
30, பங்கொள்ளாமட, ரத்துகொஹாதிவல, அக்குறணை:

சிறு வயது முதல் எனக்கு தீராது இருந்து வந்த ஆஸ்த்மா நோயை டாக்டர் ஏ. முகம்மது அவர்கள் ஒரே ஒரு மருந்தில் சுகப்படுத்தி விட்டார். என் அன்பு கனிந்த நன்றியுடன், பாராட்டுகிறேன்.

திரு. இ. ராசமாணிக்கம்,
8அம் வட்டாரம், புங்குடுதீவு.

எனது மனைவிக்கு பல வருடங்களாக இருந்த ஆஸ்த்மா என்ற மார்ச்சளியை டாக்டர் முகம்மது அவர்கள் சுகப்படுத்தி விட்டார். நன்றி.

ஜனாப் ஏ. சீ. எம். ரமீம்,
70, புளுகொஹதென்னை, அக்குறணை.

எனது சகோதரிக்கு 13 வருட காலமாக இருந்த ஆஸ்த்மா என்ற மார்ச்சளி காரணமாக நாங்கள் மாதம் ஒன்றுக்கு ரூ. 2,000/- செலவு செய்வோம். அதுவும் சுகம் கிடைக்கவில்லை. நீங்கள் இந்த நோயை 2 மாதத்தில் பூரணமாகச் சுகப்படுத்தி விட்டீர்கள்.

என் குடும்பத்தின் மனம் [illegible] நன்றி.
திருமதி லலிதா பழ[illegible],
லலிதா ஸ்டோர்ஸ் முத்தையன்கட்டு,
ஒட்டுசுட்டான்.

கடந்த 7 வருடமாக என் அம்மா ஆஸ்த்மா என்ற இழுப்பு நோயால் பட்ட துன்பமும், கஷ்டமும் எழுத்தில் அடங்காது. நாங்கள் செய்யாத வைத்தியம் இல்லை. தங்களின் மருந்துகளைப் பாவித்த பின் இழுப்பு பூரணமாக நின்று நன்றாகச் சாப்பிட்டு நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கிறார். அவருக்கு அடுத்தபடியாக உங்களுக்கு என் நன்றி.

புனிதமான ஸ்பெஷல் மருந்துகள் மூலமாக ஆஸ்த்மா என்ற மார்ச்சளியை பூரணமாகவும், நிரந்தரமாகவும் குணப்படுத்தப்படுகிறது.

ஒரு செட் மருந்தின் விலை: 46/- தபால் ரூ. 7/-
2 செட்டுக்குக் குறைவாக வி. பி. பி.
அனுப்பப்பட மாட்டாது.

ஆஸ்த்மா என்ற நோயுடன் வேறு வியாதிகள் — சக்தியின்மை, களைப்பு, பசியின்மை, பீனிசம் ஆகியன இருப்பின் வேறு ஸ்பெஷல் மருந்துகளும் இணைத்து அனுப்பி வைக்கப்படும். இவைகளுக்கு கட்டணம் வேறு.

இன்னும் வயிற்றுக் கோளாறுகள் ஜீரணக் குறைவு, உடல் மெலிவு, பலவீனம், மூல வியாதிகள், புண், சொறி, எக்ஸிமா, தலைமயிர் விழுதல் ஆகிய நோய்களுக்கும், 30 வருட கால அனுபவமுள்ள டாக்டர் ஏ. முகம்மது அவர்களால் சிகிச்சை அளிக்கப்படும்.

சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு மெடிக்கல் சான்றிதழ் இலவசம்.

**Dr. A. MOHAMED**

REGD. NO. 6345

கொழும்பு மெடிக்கல் சென்டர்,
190, ஜெம்பட்டா வீதி, கொழும்பு — 13.




கலிபோர்னியாவில் உள்ள "சீ வால்ட்" என்ற ஒரு மிருக காட்சிச்சாலையில் "ஷம்மு" என்ற இந்தத் திமிங்கிலம் இருக்கிறது. இதனுடைய காப்பாளர் யார் தெரியுமா? தண்ணீரில் மிதக்கும் இந்த 18 வயது பெண்ணை "காத்ரீன்" தான். காத்ரீனும், ஷம்முவும் பல சாகசங்கள் நீரில் புரிவதைக் காண ஆயிரக் கணக்கில் தினமும் மக்கள் கூடுகின்றனர். (ம-10)

## 38 ஆயிரம் ரூபாவுக்கு விலை போன மாளிகை

தமிழ்நாட்டில் கொடைக்கானலில் உள்ள கோகினூர் மாளிகை ஹைதராபாத்தைச் சேர்ந்த நவாப் காசிம் யார்ஜங் என்பவருக்குச் சொந்தமானது.

1958 இல் அரசு மாளிகையாக எடுக்கப்பட்டது. இது வெளியேற்றப்பட்டவர்களின் சொத்து என மத்திய அரசால் அறிவிக்கப்பட்டு ரூ. 38,200க்கு மத்திய அரசு மூலமாக வாங்கப்பட்டது.

இதனுடைய பரப்பளவு 3.85 ஏக்கர். இதில் 4 அறைகள் உள்ளன. ரூ. 1 லட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் காஷ்மீர் முதலமைச்சர் ஷேக் அப்துல்லா இங்கே தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

அவரது நினைவை மக்கள் மனதில் பதிய வைக்கும் வகையில், இந்த மாளிகை "கோகினூர் ஷேக் அப்துல்லா மாளிகை" என்று பெயரிடப்பட்டுள்ளது. (ம-சி)

## விழியிழந்தோர் காது வழியாக கல்வி கற்க வசதி!

விழியிழந்தவர்கள் கல்வி அறிவின்றி வாட வேண்டிய அவல நிலை இனி ஏற்படாது. அவர்கள் காது வழியாகக் கல்வி கற்க வசதி ஏற்பட்டிருக்கிறது.

விழியிழந்தோர் காதில் தேனாக ஒலிக்க ஒரு கம்பியூட்டர் அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது அச்சில் அல்லது தட்டச்சில் உள்ளவற்றைப் பேச்சாக மாற்றிப் பார்வையற்றவர்களுக்குச் செவிச் செல்வம் வழங்கும்.

மேஜையின் மீது வைத்துக் கொள்ளக் கூடிய அளவுக்குச் சிறிதானது. இதன் கண்ணாடிப் பரப்பில் படிக்க வேண்டியதை வைத்து விட்டால் போதும், அதில் உள்ள செய்திகள் ஒலி வடிவில் கிடைக்கும். பேச்சின் வேகத்தைத் தேவைக் கேற்பக் கூட்டவும் குறைக்கவும் வழி செய்யப்பட்டுள்ளது. கேட்டதையே மீண்டும் உடனே திரும்பக் கேட்கலாம். சொற்களின் எழுத்துக் கூட்டமைப்பையும் நிறுத்தல் குறியீடுகளையும் எடுத்துச் சொல்லும் திறமை வாய்ந்தது இந்தக் கம்பியூட்டர். (ம-சி)



பக்கத்து வீட்டுக்காரர்:— புதுசா டி. வி. வாங்கியிருக்கிறீங்களாமே...

மற்றவர்:— ஆமா... அதோட ஒரு பூட்டும் செயினும் வாங்கியிருக்கேன், அஞ்சு மணிக்கே கேற்றைப் பூட்டுறதுக்காக...

## புற்றுநோயை விரட்ட வழி

உலகில் முதல்தர உயிர்க்கொல்லி நோயாக புற்றுநோய் பெருகி வருகிறது.

முட்டைக்கோஸ், காலிபிளவர் ஆகியவற்றை அடிக்கடி சாப்பாட்டில் சேர்த்துக் கொள்ளுகிறவர்களுக்கு புற்றுநோய் வரும் வாய்ப்புக் குறைவு என்று டாக்டர்கள் கண்டு பிடித்து இருக்கிறார்கள். (ம-சி)



இளம் குற்றவாளிகளைத் திருத்தும் வல்லமை பெண்களுக்கே உண்டு என்று மேல் நாட்டவர்கள் கருதுகிறார்கள். இதனால் இத்துறையில் பெண்களுக்கே முக்கிய இடம் கொடுக்கிறார்கள். டென்மார்க் தேசத்திலுள்ள இளம் குற்றவாளிகள் சீர்திருத்த நிலையத்தைச் சேர்ந்த இந்த மூன்று பெண்மணிகளும் இலங்கையில் இத்துறையில் ஆலோசனை கூறுவதற்காக வந்திருக்கிறார்கள். (ம-சி)

### ஊக்கப் பரிசு

10 ஆம் வகுப்புத் தேர்வில் முதலாவது வரும் மாணவனுக்கும், மாணவிக்கும், 12 ஆம் வகுப்புத் தேர்வில் முதலாவதாக வரும் மாணவனுக்கும், மாணவிக்கும் தலா 1000 (மொத்தம் ரூ.4000) பரிசு வழங்கப்படும் என்று தமிழ்நாடு துளுவ வேளாளர் சங்கம் அறிவித்து உள்ளது. (ம-சி)

## பிரேதத்துடன் "பிக்னிக்" செல்கிறார்கள்



மரண வைபவம் ஒன்றில் கலந்து கொண்டால் வீட்டுக்கு வந்து தலைமுழுகாமல் வாய் நனைக்க மாட்டார்கள் நம் மத்தியில் உள்ள சில வைதீகர்கள்.

இறந்தவர் ஒருவரின் சடலத்துடன் பிரேதப் பெட்டியை தூக்கிச் செல்லும் இந்த இருவருமோ

# ஆபிரிக்க நங்கையா?





இந்த யுவதியின் பெயர் ரீடா ஜெனட். போர்த்துக்கேயர்கள் இலங்கையை ஆட்சி செய்த காலத்தில் இவரது முன்னோர்கள் இந்த நாட்டுக்கு வந்திருக்கின்றனர். இந்த நாட்டுப் பிரஜாவுரிமையும் அவர்கள் பின்னர் பெற்றுக் கொண்டனர். புத்தளத்தில் வசிக்கும் ரீடாவின் குடும்பத்தவர்கள் இன்னும் ஆபிரிக்க இனத்தவர்களின் சம்பிரதாயங்களை பின்பற்றுகின்றனர். தோற்றமும் அசல் ஆபிரிக்கர்கள் போலவே இருக்கிறது. ரீடா சைக்கிளுடன் நகருக்குச் சென்றபோது புகைப்படப் பிடிப்பாளரின் கண்ணில் இப்படி அகப்பட்டுக் கொண்டார்.

(ய)

# உப்புநீர் எவ்வாறு குடி தண்ணீராகிறது?

ஒருவருக்குத் தாகமெடுத்தது. தண்ணீர் நிறைய இருந்தது. குடிக்க வேண்டியதுதானே? அவரால் ஒரு வாய்கூடக் குடிக்க முடியவில்லை. அவ்வளவும் உவர் நீர், உப்பு நீர்!

உவர் நீர் குடிதண்ணீரானல் எப்படி இருக்கும்? எவ்வளவு உவப்பான செய்தி!

இந்த அரிய சாதனையை அற்புதமாக நிகழ்த்தியிருக்கிறார்கள். குஜராத் மாநிலம் பவநகரில் உள்ள மத்திய அரசுக்குச் சொந்தமான உப்பு ஆராய்ச்சி நிலையத்தார்.

பவநகர் நிலைய இயக்குநர் பேராசிரியர் தக்விகான் தெரிவித்த தகவல்கள் வருமாறு:

"சுற்றிலும் உப்பு நீரால் சூழப்பட்ட கிராமங்களுக்குக் குடிதண்ணீர் வழங்க இந்த இயந்திரம் பயன்படும்.

"தமிழ் நாட்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் கடற்கரை ஓரத்தில் உள்ள கிராமங்களில் இப்படிப்பட்ட இயந்திரங்கள் இரண்டை சோதனை ஏற்பாடாக 6 மாத காலத்திற்கு வைக்க, மத்திய அரசு சொல்லி இருக்கிறது.

"இந்த இயந்திரத்தில் ஒரு பிளாஸ்டிக் தகட்டின் மேல் உவர் நீரை, சதுர அங்குலத்திற்கு 400 இருத்தல் அழுத்தத்திற்குச் செலுத்தினல், உப்புநீர் வேருகவும், உப்பு இல்லாத நீர் வேருகவும் பிரிந்துவிடும். இந்த உப்பு இல்லாத நீர் சுத்தமாகவும், குடிப்பதற்குச் சுவையாகவும் இருக்கும்.

"நாளொன்றுக்கு 10.000 லிட்டர் அல்லது 30,000 லிட்டர் குடிதண்ணீர் தயாரிக்கும் இயந்திரம்தான் இப்பொழுது உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு நடுத்தரக் கிராமத்திற்கு இது போதுமானது.

"இதன் மூலம் குடிநீர் தயாரிக்க லிட்டருக்கு ஒரு காசுதான் செலவாகும். 1000 லிட்டருக்கு 10 ரூபாய்தான் பிடிக்கும். இயந்திரத்தின் விலை ரூ. 2.5 லட்சம். ஒரு சிறிய அறையில் வைத்துக்கொள்ளலாம்.

(மு—சி)





அவள்:— இடுப்பில கை போடாதிங்க எனக்குச் சரியான கூச்சம்னு எத்தனை தடவை தான் சொல்றது. மோகனுக்கு ஒரு தடவை தான் சொன்னேன். அதுக்கப் புறம் இடுப்பில கை போடுறதே கிடையாது.



வாத்தியார்:— நீ ஏண்டா... ஸ்கூலுக்கு ஒழுங்காக வாறதில்லை...?

மாணவன்:— ஸ்கூலுக்கு ஒழுங்காக வராவிட்டாலும் பரவாயில்லை. ஆனு உங்க வீட்டில நடக்கிற ரியூட்டரிக்கு ஒழுங்கா வரணும்னு நீங்க தானே சார் சொல்லியிருக்கிங்க...

# கண்கள் இல்லாத பல்லி!

யூகோஸ்லாவியாவில் உள்ள போஸ்டோஜ்ஞ என்ற பகுதியில் ஒருவிதப் பல்லி இருக்கிறது.

இப் பல்லியில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால் அதற்கு கண்கள் இல்லை.

கண்கள் இருப்பதைப் போலவே சாதாரணமாக ஏறி ஓடி இரை பிடித்துண்ணும் இது எதனுல் பார்க்கின்றது என ஆராய்ந்த போது ஒரு அதிசய உண்மை வெளியானது.

ஆம்! அப்பல்லி தன் மெல்லிய தோலினுலேயே பார்க்கிறது. கண்ணுடி இழையைப் போல் மிருதுவாகவுள்ள இதன் உடல் தோலே இதற்குக் கண்களாகப் பயன்படுகிறது.

எனினும் தோலே கண்களாகப்பயன் படுவதால் இதற்கொரு நன்மையும் உண்டு. அதாவது தன்னை அறியாமல், எதிரிகள் யாரும் தாக்க வந்தாலோ அன்றி இரைகள் ஏதும் ஒளித்து ஓடப் பார்த்தாலோ எப்பக்கமும் பார்க்கின்ற இதன் தோல் கண்கள் பார்த்து விடுகின்றன.

இதனுல் எதிரிகளின் தாக்குதல்களிலிருந்து தப்பியும், இரைகள் ஒன்றையும் தப்ப விடாமலும் அது வாழ்ந்து வந்தால் அதில் வியப்பில்லைதானே?

(ஊ—ஐ)

# எடை குறைந்த சிசுக்களுக்கு

## கங்காரு பராணி

...வும் வெகுவாகக் குறைவதாக கூறப்படுகிறது.

இவ்விதம் தாயும் சேயும் 24 மணி நேரமும் இணைந்திருப்பதை ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (யூனிசெப்) "கங்காரு சிகிச்சை" முறை என குறிப்பிட்டுள்ளது.

ஜெனிவாவில், பொகோட்டாவில் உள்ள சென் ஜுவான் டி டிய்யாஸ் ஆஸ்பத்திரியில் உள்ள டாக்டர்கள் எட்கார் ரே, எக்டர் மார்டினெஸ் ஆகியோர் இச் சிகிச்சையை கிரமமான முறையில் பாரிய அளவில் மேற்கொண்டு வரு...

# பால் கொடுக்கும் நடிகர்




## ஆடவர்க்கான வெளிநாட்டு உடைகள்

டிரவ்ஸர் வகைகள்: 26" — 40"

★ சென்பீட்டர்ஸ் — ஹாரா — யான்

★ யுனிட்வன் — இமேஜ் — லீவிஸ்.

சேர்ட் வகைகள்

★ கிராண்டி — டிப்பி — சிவைசி — ரேயல் — சில்வரானே — ரெப்கோ

★ ஹமாரி — பெப்ரியானி — கோல்ட் லீவ் — ராடோ

## எடை குறைந்த சிசுக்களுக்கு

## கங்காரு பாணி

## சிகிச்சை முறை

பிறக்கும்போதே எடையில் குறைந்த பிள்ளைகளைக் காப்பாற்றும் புதிய "கங்காரு" பாணி சிகிச்சை முறை மூலம் இரு கொலம்பிய டாக்டர்கள் சிறந்த வெற்றிகண்டு பெற்று வருகின்றனர்.

கங்காரு மிருகம் எப்படி தன் குட்டியை வயிற்றுப் பைக்குள் பாதுகாப்பாக வைத்து வருகின்றதோ, அந்த அடிப்படைத் தத்துவமே இந்த முறையிலும் கையாளப்படுகிறது.

குறை மாதத்தில் பிறக்கும் குழந்தைகளைக் கண்ணாடிப் பெட்டிகளில் வைத்துப் பராமரிக்கும் முறையைவிட, தாயின் மார்பகத்துக்கு அருகிலேயே ரவிக்கைக்குள் வைத்து குழந்தை பராமரிக்கப்படுகிறது. இம் முறையினால் செலவினமும் தாயும் சேயும் 24 மணி நேரமும் இணைந்திருப்பதை ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (யூனிசெப்) "கங்காரு சிகிச்சை" முறை என குறிப்பிட்டுள்ளது.

ஜெனிவாவில், பொகோட்டாவில் உள்ள சென் ஜுவான் டி டிப்யாஸ் ஆஸ்பத்திரியில் உள்ள டாக்டர்கள் எட்கார் ரே, எக்டர் மார்டினஸ் ஆகியோர் இச் சிகிச்சையை கிரமமான முறையில் பாரிய அளவில் மேற்கொண்டு வருவதாக கூறப்படுகிறது.

இந்த ஆஸ்பத்திரியில் பிறக்கும் 500 முதல் 2000 கிராம் வரையிலான (1.1 முதல் 4.4 இரு.) குழந்தைகளில் அரைவாசிக்கு மேல் இறந்து போவது கடந்த பல வருடங்களாக வழக்கமாக இருந்து வந்தது. ஆனால் இச் சிகிச்சையின் மூலம் தற்போது 95 வீதமான குழந்தைகள் உயிர் பிழைத்துக் கொள்கின்றன.

கண்ணாடிப் பெட்டியினுள் வைக்கப்பட்டிருக்கும் குழந்தைகள், உள்ளேயிருக்கும் சுகாதார சூழ்நிலையிலிருந்து அசுத்தமான சுற்றுப்புறத்தைக் கொண்ட வறிய வீடுகளின் சூழ்நிலைக்கு மாற்றப்பட்டதும் அபாயத்தை எதிர்நோக்குகின்றன.

"குழந்தைகளுக்கு தாய்ப் பாலூட்டும் போது தேவையான எதிர்ப்புச் சக்தி தாய்ப் பாலின் மூலம், தாயினூடாக குழந்தைக்குக் கிடைக்கிறது.

மகப்பேறு ஏற்பட்டபின் தாய்க்கும் சேய்க்கும் இடையேயுள்ள அந்த சில நிமிடங்களின் பிணைப்பு, அவர்களுக்கு இடையே நிலவும் பாசத்துக்கு எத்துணை அவசியமானது என்பதை நாம் நன்கு உணர்ந்துள்ளோம்" என இச் சிகிச்சையை மேற்கொள்ளும் டாக்டர் எட்கார் ரே கூறினார். (ம-ந)



### குட்டி வித்துவான்!

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த இவருடைய பெயர் மைக்கேல். இவருக்கு பிறவியிலேயே ஒரு விசித்திரமான குறை இருந்தது. எலும்புகள் வளர்வதற்குத் தேவையான கல்சியம் (சுண்ணாம்பு) சத்து இவர் உடம்பில் போதிய அளவு இல்லை. இதனால் 21 வயதாகியும் இவர் உயரம் 3 அடிதான். எடை 25 கிலோ மட்டுமே. சுண்ணாம்பு சத்து இல்லாததால் இவரின் எலும்புகள் பலவீனமாகி அடிக்கடி தானகவே உடைந்து போவது உண்டாம். இவருடைய முழங்கைகள் மட்டுமே உறுதியாக இருக்கின்றனவாம். எனவே அந்த கைகளை பயன்படுத்தி பியானோ வாசிக்க கற்றுக் கொண்டவர், இன்று பியானோ இசையில் கொடிகட்டிப் பறக்கிறார். இவருடைய பியானோ இசை நிகழ்ச்சி நடக்கிறதென்றால் வெளிநாடுகளில் கூட்டம் அலை மோதுகிறது. கச்சேரி மேடைக்கு தன்னை தூக்கிவர ஒரு மனேஜரை நியமித்துள்ள மைக்கேல் திருமணமானவர். (ம-10)



### தூசு பறக்கிறது!

ஜப்பானில் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்கள் வேலை முடிந்து விட்டுக்குச் செல்லும் முன்பு இந்த அறையில் சற்று நேரம் நின்று விட்டுப் போவார்கள். இந்த அறையில் அப்படி என்ன விசேஷம்? தொழிற்சாலையில் பணிபுரிந்த போது உடலில் ஒட்டிய தூசி துகள்களை இந்த அறையில் சிலகுழாய்கள் வழியே வீசும் காற்று முற்றிலும் அகற்றிவிடுமாம். இதனால் தொழிற்சாலையில் பணிபுரியும் பெண்கள் உடலையும் உடைகளையும் சுத்தமாக்கி ஆரோக்கியமாகத் திகழ முடிகிறதாம். (ம-10)



குரங்குக்கு போத்தலில் பாலூட்டும் பெரிய மனிதர் யார் தெரிகிறதா? நன்றாக உற்று நோக்கி யோசியுங்கள், தெரியும். தற்போது ஒரு பெரிய நாட்டின் ஜனாதிபதி இவர். இன்னும் தெரியவில்லையோ? அமெரிக்காவின் ஜனாதிபதி ரொனல்ட் றேகன்தான். 1957இல் இவருக்குமிகவும் புகழை தேடித் தந்த படமான "பெட்டைம் பார் பாங்கோ" என்ற படத்தில் ஒரு சிம்பன்சி குரங்குடன் இவ்வாறு தோன்றுகிறார் அவர். (ம-10)

### பெண்ணுக்குரிய பண்புகள் எவை?

நான்கு பண்புகள் ஒரு பெண்ணிடத்தில் இருக்க வேண்டும். அவளுடைய இதயத்தில் நல்லொழுக்கம் குடி கொண்டிருக்க வேண்டும். அடக்கம் அவளுடைய நெற்றியை அழகு செய்ய வேண்டும். இனிமை அவளது உதடுகளிலிருந்து வழிந்தோட வேண்டும். சுறு சுறுப்பு அவளது கைகளில் தவழ வேண்டும்.



இளைஞன்:— என்ர கூட்டாளிமாரெல்லாம் என்னைக் கேலி பண்றாங்கம்மா...

தாய்:— ஏன்? நீ என்ன சொத்தியா, முடமா, உன்னைக் கேலி பண்றதுக்கு.

இளைஞன்:— இல்லேம்மா... அவங்கள்ளாம் கலியாணம் கட்டிட்டாங்க, நான் மட்டும் பிரமச்சாரியாக இருக்கேன்னு தான்...


டிரவ்ஸர் வகைகள்: 26" — 40"
★ சென்பீட்டர்ஸ் — ஹாரா — யான்
★ யுனிட்வன் — இமேஜ் — லீவிஸ்.
சேர்ட் வகைகள்
★ கிராண்டி — டிப்பி — சிவைசி — ரேயஸ் — சில்வாநோ — ரெப்கோ
★ ஹமாரி — பெப்ரியானி — கோல்ட் லீஃப் — நாடோ — ஜொவரினோ ★ மோப்பி
வாசனைப் பொருட்கள்:
★ ஜீல்ஸ் — லேரா — டாபாக் — குக்சி — ஓலெக் — காசினி — டெனிம் — ஜொவன்.
இந்திய சாரம் போன்ற இன்னும் என்னென்ன உங்கள் தேவைகளோ அனைத்தையும் ஓரிடத்தில் பெற்றிட —
LUCKY STAR EMPORIUM
223 — 2nd Cross St., Colombo — 11.
T. P. 29372.



RADIO
ELECTRONICS

ரேடியோ எலக்ட்ரோனிக் கல்வியை ஆரம்பத்திலிருந்தே தபால் மூலமாகவோ அல்லது வகுப்புகளுக்கு சமுகமளித்தோ பயிலுங்கள். நாட்டின் முன்னணி வானொலி தொழில் நுட்பக் கல்லூரியில் சேருங்கள். மதிப்புள்ள சான்றிதழ் DIPLOMA வழங்கப்படும். பயிற்சி உபகரணங்கள் இலவசம். நேரில் நடக்கும் வகுப்புகளுக்கு இரு பாலாரும் தற்போது அனுமதிக்கப்படுகின்றனர். தபாலில் பயில விரும்புவோர், முகவரி எழுதப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையை அனுப்பி விவரங்களை இலவசமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

புதிதாக ஆரம்பித்து சமுகமளித்து பயிலும் வகுப்புகளுக்கு ஒருசில மாணவர்களுக்கு மாத்திரமே இடமுண்டு. விவரங்களை நேரில் பெறலாம்.

VEGAS ENTERPRISES
203, Olcott Mawatha,
Bauddha Mandiraya Colombo — 11.



freight and travels lanka limited

முஸ்லிம் – முஸ்லிமல்லாத பணிப்பெண்களுக்கு
குவைத் நாட்டில்
வேலை வாய்ப்புக்கள்
வயது 18 முதல் 40 வரை.
★ நல்ல இல்லங்களில் வேலை
★ தங்குமிட வசதி இலவசம்
★ வைத்திய சிகிச்சை இலவசம்
★ நல்ல சம்பளம்
★ உணவு இலவசம்
★ உங்களுக்கு உதவ குவைத்தில் எமது பிரதிநிதி.
பாஸ்போர்ட் ஏழு புகைப்படங்களுடன் நேரில் வரவும், அல்லது விண்ணப்பிக்கவும்.
சப் ஏஜண்டுகளுக்கு
கவர்ச்சிகரமான அன்பளிப்பு வழங்குவோம்
பிரைட் அன்ட் டிரவல்ஸ் லங்கா லிமிட்ட்
307, காலி வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு — 3. லேபர்; லைசென்ஸ் — 343.
L. DEPT APPROVEL FE/6/FE/6/FEA/635/3941.
நாங்கள் கட்டணம் ஏதும் வசூலிப்பதில்லை.

### மேற்கு ஜெர்மனியில்

# குழந்தைகள் விற்பனை அதிகரிப்பு!

மேற்கு ஜெர்மனியில் இப்போது வெளிநாட்டுக் குழந்தைகள் வியாபாரம் அதிகரித்து வருகிறது-

அதற்குக் காரணம் உலகிலேயே மிகக் குறைந்த பிறப்பு விகிதாசாரத்தைப் பெற்ற நாடான மேற்கு ஜெர்மனியில் குழந்தைகள் இல்லாத தம்பதிகள் ஒரு குழந்தையை தத்து எடுப்பதற்கு பல ஆண்டுகள் காத்துக் கிடக்க வேண்டியிருப்பதாகும்.

காத்திருந்தும் குழந்தையை சுவீகாரம் செய்ய இயலாத தம்பதிகள் கள்ளத்தனமாக குழந்தைகளைத் தத்தெடுக்கின்றனர்-

அரசாங்கத்தின் தத்தெடுக்கும் நிறுவனங்களுடன் அனுமதி பெற்ற தனியார் சுவீகார நிறுவனங்களும் மேற்கு ஜெர்மனியில் இருந்த போதிலும் சட்ட விரோத நிறுவனங்களும் இரகசியமாக இயங்குகின்றன.

ஆண்டு தோறும் 100 முதல் 150 சட்டவிரோத சுவீகாரங்கள் நடைபெறுவது தனக்குத் தெரியும் என்று மேற்கு ஜெர்மனி அரசாங்கம் அண்மையில் நாடாளுமன்றத்தில் கூறியது.

ஆண்டு தோறும் ஆயிரத்துக்கு மேற்பட்ட குழந்தைகள் மேற்கு ஜெர்மனிக்குக் கள்ளத்தனமாகக் கொண்டுவரப்படுகின்றன.

அவை இந்தியா. இந்தோனேஷியா, தென் கொரியா, இலங்கை, பொலிவியா, கொலம்பியா, பெரு, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து கொண்டு வரப்படுகின்றன.

குழந்தை இல்லையா? அப்படி என்றால் பெட்டைட்ஃபுளோருக்கு எழுதுங்கள் என்று மால்டா நிறுவனம் ஒன்று தனது சேவைகளை மேற்கு ஜெர்மனியில் விளம்பரம் செய்திருந்தது.

அந் நிறுவனத்தின் தலைவர் ஃபிரிட்ஸ் டோக்டர் மான் இப்போது பொலீஸாரால் தேடப்படுகிறார்.

அவர் விற்கும் குழந்தைகளுக்கு 5,060 முதல் 5,750 டாலர் வரை கட்டணம் விதித்து வந்தார்.

ஹாலந்தில் உள்ள ஒரு நிறுவனம் விற்கும் குழந்தைகளுக்கு நிர்ணயித்துள்ள விலை 2.920 டாலர் ஆகும்.

ஹாலந்தில் சுவீகார நிறுவனங்களுக்கு அரசாங்கக் கட்டுப்பாடு எதுவுமில்லை.

அதனால் ஹாலந்தில் தத்து எடுக்கப்படும் குழந்தைகளில் 90 வீதம் மூன்றாம் உலக நாடுகளிலிருந்தும் கொண்டு வரப்பட்டவை ஆகும்.

அனைத்துலக குழந்தை வியாபார மையமாக ஹாலந்து மாறி உள்ளது என்றும் வருணிக்கப்படுகிறது.

வெளிநாடு ஒன்றில் குழந்தையை சுவீகாரம் செய்து கொண்டு அதை மேற்கு ஜெர்மனிக்குக் கொண்டு வருவதில் சிரமமில்லை. அதற்கு விஸாவும் தேவைப்படாது.

அதனல் மேற்கு ஜெர்மனி அதிகாரிகள் தொல்லை கொடுப்பார் என அஞ்சும் பெற்றோர்கள் சிலர் தங்களின் சுவீகாரக் குழந்தைகளைப் பதிவு செய்வதில்லை.

அதனல் ஏற்படும் சிரமங்களை அக்குழந்தைகளைப் பாடசாலைக்கு அனுப்பும் போது தான் அவர்கள் உணர்கின்றனர்.

மேற்கு ஜெர்மனியில் சுவீகாரத்திற்கு மனுச் செய்யும் பெற்றோர்களுக்கு நான்கு ஆண்டுகள் கழிந்த பின்னரே குழந்தைகள் வழங்கப்படுகின்றன.

ஆண்டு தோறும் 20,000 க்கு மேற்பட்ட தம்பதிகள் குழந்தை சுவீகாரத்திற்காக மனுச் செய்கின்றனர். ஆனல் அவர்களில் பாதிக்கு மேற்பட்டோருக்கு குழந்தைகள் வழங்கப்படுவதில்லை.

தாராளமாக்கப்பட்ட கருக்கலைப்புச் சட்டம், பாலினக் கல்வி, கருத்தடை கருவி, மாத்திரைகளின் உபயோகம் அதிகரிப்பு ஆகியவை மேற்கு ஜெர்மனியில் குழந்தை பிறப்பு விகிதம் குறைந்ததற்குக் காரணமாகும்.

(ம—சி)

## மக்களுடன் நெருங்கி உறவாடும் ஜனாதிபதி






— தமிழோவியன் —

அன்றொருநாள் வீதியிலே மனைவி மக்கள்
அணிதிரள அரசனைப்போல் நடந்த வேளை,
ஒன்றாக என்னோடு தொழில் புரிந்தோன்
ஓரைந்து ஆண்டின்பின் கண்ட நண்பன்!
கன்றோடித் தாய்ப்பசுவை மோதல் போலே...
கட்டிஎனை யணைத்தவனாய், அசைத்துச் சற்றே,
நின்றவனும் என்தலையை உற்றுப் பார்த்தே;
நேரிழையாள் முகஞ்சுளிக்க உரைத்தான்
அந்தோ...

★

"கண்டோரைக் கவர்ந்திட்ட சுருண்ட கேசம்
காடாக அடர்ந்திருந்த தலையில் இன்றோ,
உண்டான வளவளப்பும் தட்டை காண
உளம்மிகவும் பதைக்குதடா! கிழவன்
நீயே...!"
என்றந்தப் பாவிமகன் சிரித்துச் சென்றான்!
என்நெஞ்சம் துணைவியவள் நிலைக்கு நோகும்!
கொன்றானே "நானழகுக் குமரன்!" என்ற
கோலமிகும் நினைப்பதனை வார்த்தை யாலே!

★

கண்காணு மனிதனது அங்க மெங்கும்
காடாகக் கருமையுடன் செழித்து நிற்பாய்!
கண் காணும் தலையில் நின்று உதிர்ந்து கொட்டி
காண்போர்கள் "மொட்டையனாய்ப்" பட்டஞ்
சூட்டிப்
புண்படுத்தும் வேலைக்குத் துணையாய் நின்றே
பொல்லாத "சொட்டையனாய்" ஆக்கி
வைப்பாய்!
வெண்பஞ்சுப் பொதியாக மடியும் மட்டும்
விளங்கிடுவாய் பெண்ணினத்தின் தலையில்
நன்றே!

★

மாங்கனியார் வதனத்தில் அரும்பா தாலோ
மாதர்களின் தலைகளிலே குடி யமர்ந்தாய்?
ஓங்கு புகழ் புலவர்களும் "கூந்தல்" பற்றி
உயர்வாகப் புகழ்ந்தமையால் செருக்க
டைந்தோ
தீங்கிழைத்தாய்? ஆடவர்கள் அழகிற் காகத்,
தினமுன்னை வெட்டுவதால் கோப முற்றோ
ஏங்க வைத்தாய்? "வழுக்கையராய்" மாற்றி எம்மை
ஏளனமும் புரியவழி காட்டி நின்றாய்......?

★

காலையிலே "முகச்சவரம்" செய்து கொண்டு
கடமைக்கு ஏகியே திரும்பும் முன்னம்;
மாலையிலே முகம் முழுதும் முடியாய் நின்று
மரமரப்பை உணர்த்துகின்ற! மயிரே!" நீயும்,
ஆண்களது தலைகளிலே முளைக்க மட்டும்,
அஞ்சுவதேன்? வஞ்சகமோ? நியாயந் தானோ?
நாணுகின்றேன் நின்துரோகச் செயல் நினைத்தே
நலங்கெட்டு நீ வீழ்ந்தால் தொடுவாருண்டோ?

## சூரிய சக்தியால் வீட்டுக்கு வெப்பம்!

கிராமங்களில் வீடுகளைச் சூரிய சக்தியால் வெப்பப்படுத்துவதற்கான அமைப்பு ஒன்றை மாஸ்கோ கட்டட இயல் கழகம் உருவாக்கியுள்ளது.

இந்த வீட்டுக்கு வேண்டிய வெப்பத்தை பாதுகாக்கும் பிரிவின் பரப்பளவு 10 அல்லது. 20 சதுர மீட்டர்களாகும். இதன் படுக்கையில் "கிராவல்" கற்கள் பாதுகாக்கின்றன-

சூரிய சக்தியால் கிடைக்கும் வெப்பத்தை இந்தக் கற்கள் இழுத்துக் கொண்டு. ஒரு மாதம் வரை வெப்பத்தைப் பாதுகாக்கின்றன.

இந்த அறையின் வெப்பக் காற்று, குளிர் காலத்தில் வீட்டின் மற்ற அறைகளுக்குக் குழாய்கள் மூலமே செலுத்தப்பட்டு அந்த அறைகளின் வெப்பநிலை அதிகரிக்கப்படுகிறது.

(ம—சி)

## கழகப் புலவரின்



மேற்கு ஜெர்மனியில் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் ரிச்சார்ட் வொன் வெய்ஸக்கர் ஒரு குதூகலப் பேர் வழி. மேற்கு பெர்லின் மேயராக இருந்த போது வெய்ஸக்கர் பொதுமக்களுடன் நெருங்கிப் பழகியவர். மனைவியுடன் கடைத் தெருவுக்குப் போவார். பஸ்ஸிலும், ரயிலிலும் பிரயாணம் செய்வார். அதனால் மக்கள் மத்தியில் அவருக்குப் பெரும் மதிப்பு உண்டு. (ம-சி)

# வெள்ளை இன புலிகளை பாதுகாக்க ஏற்பாடு!

உலகில் வெள்ளை இனப் புலிகளின் எண்ணிக்கை மிகவும் குறைவு. சுமார் 60 வரையில் தான் அப்புலிகள் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் டிசம்பர் 29 ஆம் திகதி, ஒரிஸ்ஸாவில் இருக்கும் நந்தன்கனன் மிருகக் காட்சிச்சாலைக்கு ஒரு குதூகலமான நாளாகும்.

ஆம். அன்று அங்கு ஐந்து வெள்ளைப் புலிக் குட்டிகள் பிறந்தன. வன விலங்கு நிபுணர்களின் விடா முயற்சியால் இது சாத்தியமானது.

கலப்பினச் சேர்க்கையின் மூலம் இந்த 5 குட்டிகளை ஒரு பெண் புலி ஈன்றெடுத்தது.

நந்தன்கனன் மிருகக்காட்சிச் சாலையில் இருக்கும் வெள்ளைப் புலிகளுடன் உலகின் புகழ் பெற்ற ரேவா வம்சமான டெப்ரட்டா கலப்பினச் சேர்க்கை மேற்கொள்ளப்பட்டது.

வெள்ளை இன வம்சத்தை சேர்ந்த சுப்ரா என்னும் பெண் புலி கருவுற்றது: டில்லி மிருகக் காட்சிச் சாலையிலிருந்து ரேவா வம்சத்தில் சேர்த்த வெள்ளை இனப் புலிதான் சுப்ரா.

இந்த இரு இனக் கலப்பினால் ஒரு புதிய வெள்ளை இனப் புலி சந்ததி உருவாகும் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது.

1980 ஜனவரியில் சாதாரண வர்ணப் புலி சோடிகள் மூலம் மூன்றும் ஈற்றில் மூன்று வெள்ளைக் குட்டிகள் ஈன்றெடுக்கப்பட்டன. இது நந்தன்கனன் மிருகக்காட்சிச் சாலைக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

இந்த மூன்று குட்டிகளுக்கும் டெபப்ரட்டா, அலக்கா. நந்தா என பெயரிடப்பட்டுள்ளன. இதன் பின்னர் பிறந்த இரு குட்டிகளுக்கு அஸ்வினி (ஆண்), பிங்கி (பெண்) என பெயரிடப்பட்டுள்ளது.

ஆனால் இந்தப் புலிக்கு ஐந்தாம் ஈற்றில் பிறந்த குட்டிகள் வர்ணக் குட்டிகளாகவே இருந்தன.

ரேவா வெள்ளை கலப்பின சினைப்படுத்தல் இப்பொழுது வெற்றி அளித்துள்ளது. இந்த இரு இனங்களையும் முறையாக சினைப்படுத்தும் வழி முறைகளை நிபுணர்கள் இப்பொழுது மேற்கொண்டு வருகின்றனர்.

நந்தன்கனன் மிருகக் காட்சிச் சாலையில் உருவாகி வரும் வெள்ளைப் புலி இனங்களை வெகு விரைவில் உலகின் ஏனைய மிருகக் காட்சிச் சாலைகளிலும் காணக் கூடியதாக இருக்கும். (ம-ங)

வெப்பத்தை பாதுகாக்கும் பிரிவின் பரப்பளவு 10 அல்லது. 20 சதுர மீட்டர்களாகும். இதன் படுக்கையில் "கிராவல்" கற்கள் பாதுகாக்கின்றன.

சூரிய சக்தியால் கிடைக்கும் வெப்பத்தை இந்தக் கற்கள் இழுத்துக் கொண்டு. ஒரு ...நிலை அதிகரிக்கப்படுகிறது. (ம-சி)

## வாயிலிருந்து வந்தது குண்டு!

யூகோஸ்லாவியாவில் உள்ள பெல்கிரேட் நகரத்திற்கு வடக்குப் பகுதியில் வயதான ஒரு கிழவர் இருமிக் கொண்டிருந்தார்.

அப்போது அவரின் வாயிலிருந்து துப்பாக்கிக் குண்டு ஒன்று வெளியே வந்து விழுந்தது.

அக்குண்டை அதிசயமாகப் பார்த்தவர்கள் விடயம் அறிந்த போது ஆச்சரியம் அடைந்தனர்.

ஏனெனில், முதலாம் உலக மகா யுத்தத்தின் போது இவரும் அதில் அகப்பட்டார். அப்போது இவரின் மீது பிரயோகிக்கப்பட்ட துப்பாக்கிச் சூட்டின் குண்டுதான் அதுவாம். (ங-236)

## கர்ப்பிணிக்கு காப்பி விரோதி

கர்ப்பிணிப் பெண்கள் அதிகம் காப்பி குடிக்கக் கூடாது!

தினம் 6 தம்ளர் காப்பி குடிக்கும் கர்ப்பிணிகளுக்குக் கருச் சிதைவு ஏற்படக் கூடும். (ம-சி)

# கழகப் புலவரின் நீங்காத நினைவுகள்

## பெ. பொ. சிவசேகரனார் பெயரில் அறக்கட்டளை நிறுவவேண்டும்

கழகப் புலவர் பெ. பொ. சிவ சேகரனார் அமரராகி ஒரு வருடம் பூர்த்தியடைந்தாலும், அவரின் நினைவுகள் இன்றும் எம் அனைவரின் மனதிலும் அழியாது பசுமையாகவே இருக்கின்றன.

தமிழ் வளர்ச்சிக்கு அரும் பணியாற்றி, அமரராகிவிட்ட இவரின் நினைவு அழிக்க முடியாத ஒன்றே.

தன்னை மறந்து, தன் குடும்பத்தை மறந்து திருகோணமலைப் பகுதி மாணவர் சமுதாயத்தையும், இளைஞர் சமுதாயத்தையும் சிறந்த முறையில் உருவாக்கினார் இவர்.



பெ. பொ. சிவசேகரனார்

திருகோணமலையில் திருவள்ளுவர் கழகம், அருள் நெறி மன்றம், கம்பன் கழகம் ஆகிய தமிழ் இயக்கங்களின் தந்தையாக விளங்கிய இவர், இளைஞர்களின் அறிவையும், ஆற்றலையும் இத்தகைய தமிழ் நிறுவனங்கள் மூலமாக தமிழ் உலகிற் சுடர் விட்டு பிரகாசிக்கச் செய்தார்.

இவ்வாறு தமிழ் வளர்ச்சிக்கு அரும் பெருந் தொண்டாற்றிய "ஐயா" சிவசேகரத்தின் குரல் இன்றும் நம் மத்தியில் சங்கநாதமாக ஒலித்துக் கொண்டேயிருக்கிறது.

"ஐயா" வணக்கம் என இவரது மாணவர்கள் இவரை வரவேற்பது கண்கொள்ளாக் காட்சியாகும்.

மாணவர்கள் இவரது மதிப்பீட்டாளர்கள், இளைஞர்கள் இவரது இருகரங்கள் என்றால் மிகையாகாது.

சமயம் அவரது சக்தி, இலக்கியம் அவரது இன்பம், கணிதம் அவரது கலங்கா அறிவு, ஆங்கிலம் அவரது அறிவு வள்ர்ச்சி, விஞ்ஞானம் அவரது மெஞ்ஞானத்தின் துணை என்றே கூற வேண்டும்.

இவ்வாறு தன் பட்டம் பதவிகள் எல்லாவற்றையும் துறந்து மாணவர்களையும், இளைஞர்களையும் இலக்கிய உலகத்திலும், சமயப் பணிகளிலும் ஈடுபடுத்தி அதில் இவர்களை முதன்மை பெற அயராது உழைத்த இவர், மாணவர் சமுதாயத்திற்கு கிடைத்த ஒரு நல்லாசான் என்றால் பொய்யாகாது.

திருகோணமலையில் வள்ளலார் வாசிகசாலை ஒன்றை நிறுவியதன் மூலம், இளைஞர்களின் எழுத்துலக பேச்சுலக, கவியுலக பிரவேசத்திற்கு இவர் அத்திவாரமிட்டார்.

இவரது கவிதைகள் யாவும் கருத்தாழம்மிக்கவை, பல முறை பாடி திளைக்கக் கூடிய இலக்கியச் சுவை, தரம் கொண்டவை.

சொற்சுவை, பொருட்சுவை கொண்ட கவிஞர்களை ஊக்குவிக்கும் கவியரங்கின் நடுநாயகம் அமரர் பெ. பொ. சிவசேகரம் ஆவார்.

"அஞ்சாத நெஞ்சும்
அயராது உழைக்கும்
அருந்திறமும்
நெஞ்சார வாழ்த்தும்,
பெருநிலையும், ஈயா
நீசரிடம்,
கெஞ்சாத வாழ்வும்,
கிறுங்காத நேர்மையும்
கேட்டு நின்றேன்
பஞ்சாட்சரத்தின் ஒளிவீசும்
பத்திர காளிகையே"

என்று அன்று பாடிய அவரின் குரல் ஓய்ந்து விட்டது. ஆனால் அவர் பாடிய காளி கவி மாலை இன்றும் காளி பக்தர்களின் இதயங்களில் ஒலித்துக் கொண்டிருப்பதோடு ஏனையோரை காளிகடாட்சம் வேண்டி நிற்கச் செய்கிறது.

இவர் இயற்றிய கவிதைகள் எவ்வாறு கவிஞர்களை ஈர்த்தனவோ அதே போல கட்டுரைகளும் உறங்கிய எழுத்தாளர்களை தட்டி எழுச்சி பெற வைத்தன.

தமிழ்க் கலையுக, எழுத்துலக வளர்ச்சிக்கு அரும் பாடுபட்டு, அமரராகிவிட்ட பெ. பொ. சியை மறவாமல் அவர் விட்டுச் சென்ற பணிகளையும், இலட்சியங்களையும் தொடர்ந்து நிறைவேற்றப் பாடுபடுவது நம் ஒவ்வொருவர் கடமையாகும்.

முதற் கட்டமாக அன்னார் எழுதி வெளியிடாது முடங்கிக் கிடக்கும் அவரது படைப்புக்களை அச்சிட்டு வெளியிட வேண்டும்.

அதனையடுத்து அவர் பெயரால் அறக் கட்டளை, நிறுவிப் பரிசளிப்பு, நூல் வெளியீடு, நினைவுச் சொற்பொழிவு ஆகியவற்றை நடத்தி அறிவுப் பணிக்கு ஆக்கம் சேர்க்க வேண்டும். (ம-ர)

— டாக்டர் க. இராமச்சந்திரன் —

## வைரம் பெற்ற அறிமுகம்

உலகிலேயே அதி சிறப்பான மதிப்புடைய பொருட்களில் ஒன்று வைரம். இது பெண்கள் விரும்பி அணியும் ஒரு அணிகலனுமாகும்.

இந்த வைரத்தைப் பெண்கள் அணியும் பழக்கத்தை முதன் முதலில் ஏற்படுத்தியவர் பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த ஒரு பெண்மணியாகும்.

ஏக்னஸ் சோரல் என்ற பெயருடைய அப்பெண்மணி 1430 ஆம் ஆண்டு இதனைத் தான் ஆபரணமாக அணிந்து உலகிற்கு அறிமுகம் செய்து வைத்தார்.

இன்று உலகில் வைரத்தின் மீதுள்ள ஆசையின் காரணமாக பெண்கள் படும் கஷ்டத்தை காணுவாரேயானால் நிச்சயம் தான் அன்று அறிமுகப்படுத்தி வைத்தமைக்காக மிக வருந்துவார் அப் பெண்மணி. (ம-236)

## நேரில் வந்தது "மிக்" சண்டை விமானம்



ரஷ்ய மிக் விமானங்கள் அதிவேகமாகப் பறக்கும் சக்தி வாய்ந்தவை. நவீன வசதிகள் கொண்ட இந்தச் சண்டை விமானங்களைச் சாதாரண மக்கள் அருகில் நின்று பார்க்க வாய்ப்புக் கிட்டுவதில்லை. அதனால் கொழும்பு விகாரமகாதேவிபூங்காவிலே, சிறுவர்கள் கண்டு மகிழ்வதற்காக இந்தப் பழைய மிக் விமானம் நிரந்தரமாக வைக்கப்பட்டிருக்கிறது. (ம-சி)

## வாடிக்கையான இடம்

இந்திப்பட இசை அமைப்பாளர் ஜெய்கிஷன் பம்பாயில் கேலார்ட் என்ற ரெஸ்டாரண்டுக்குத் தான் தொடர்ந்து போய்க் கொண்டிருந்தாராம். அங்கே போனால், ஒரு குறிப்பிட்ட டேபிளில் தான் உட்கார்ந்து சாப்பிடுவார்.

அவர் இறந்த அன்று அந்த டேபிளில், "இந்த டேபிள் மிஸ்டர் ஜெய்கிஷனுக்காக ரிசர்வ் செய்யப்பட்டிருக்கிறது" என்று எழுதி வைத்திருந்தார்களாம். (ம-10)

# ஒலி ஒளி உருவம்

ரூபவாஹினி
RUPAVAHINI


## இன்றைய திரைகளில்

**4-வதுவாரம்!**

**சமந்தா**
10.00, 2.00, 6.00, 9.30

**கொன்கோட்**
(தெஹிவளை)
10.30, 2.00, 6.00, 9.30

**வின்ஸர்**
(யாழ். நகர்)
10.30, 2.30, 6.00, 9.30

**சரஸ்வதி**
(திருமலை)
6-00 9-30.

மக்கள் திலகம்
**எம். ஜி. ஆர்.**
**ஜெயலலிதா**
நடித்த

**ஒளி விளக்கு**
(கலர்)
(புத்தம் புதிய கொப்பி)

**12-வதுவாரம்**

ஒருதலை காதலின்
விளைவுகளை சித்தரிக்கும்
கண்ணீர் காவியம்

**லிடோ**
(யாழ். நகர்)
10-30, 2-30, 6-30




"ரூபவாஹினி" கலையரங்கத்தில் ஒளிபரப்பாகிய ரங்கா விவேகானந்தனின் (திருமதி ரங்கா பார்த்) குச்சுப்புடி நடனத்திலொரு "க்ளோஸப்" தோற்றம்.

## கலையரங்கத்தில் ரங்காவின் ஆடல்

திங்கட்கிழமைகளில் இரவு 7.15 மணிக்கு ரூபவாஹினியில் ஒளிபரப்பாகும் "கலையரங்கம்" நிகழ்ச்சியில் கடந்த வாரம் (4-6-84) குச்சுப்புடி நடனங்கள் இடம்பெற்றன.

எல்லோருக்கும் பிடித்தமான வகையில் குச்சுப்புடி நடனங்களை ஆடிக் காட்டினார் ரங்கா விவேகானந்தன் (திருமதி ரங்கா பார்த்).

இடம்பெற்ற இரு நடனங்களிலும் (தாண்டவம், லேகா) ஆடலில் தனக்குள்ள ஆற்றலை அபாரமாகவே ஆடிக் காட்டினார் ரங்கா.

அரை மணி நேரத்திற்குள்ளாக டி. வி. ரசிகர்களை ஆகர்ஷிக்கும் வண்ணம் விறுவிறுப்பாக ஆடல்கள் அமைய வேண்டுமென்பதற்கேற்ப அவரது நடனங்கள் இடம் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

அபிநயங்கள் மூலம் கதை சொல்லி அரை மணி நேரத்தை வீணாக்காமலும், ரசிகர்களின் பொறுமையைச் சோதிக்காமலும் இருந்த வகையில் டி. வி. ரசிகர்களின் "டேஸ்ட்" அறிந்து ஆடிய ரங்கா பாராட்டுக்குரியவராகிறார்.



ரூபவாஹினியில் டி. வி. பிச்சையப்பா வாத்திய விருந்தாக வயலினிசை வழங்குகிறார்.

இலங்கைப் படம் தானே என ஏளனமாக எண்ணியவர்கள் கூட இன்று இலங்கைத் தமிழ்ப் படங்களைப் புதன்கிழமைகளில் எதிர்பார்க்கும் நிலை ஏற்பட்டு விட்டதைக் காண முடிகிறது.

வாரம் ஒரு முறை காட்டப்பட்டு வந்த தென்னிந்தியத் தமிழ்த் திரைப்படங்கள், மாதமொன்றாகக் குறைந்து, இன்று அந்த ஒன்றுக்கும் ஆபத்து வந்து விட்ட வேளையிலே தான, இலங்கைத் தமிழ்ப் படங்களையாவது பார்ப்போம் என்ற ஆவல் டி. வி. ரசிகர்களிடையே ஏற்பட்டுள்ளது.

உள்ளூர்த் திரைப்படங்களை இப்படிப் பகுதி பகுதியாகக் காட்டுவதிலும் ஒரு பிடித்தம் ரசிகர்களுக்கு இருப்பதைத் தான் அவர்களது புதன்கிழமை எதிர்பார்ப்பும் உணர்த்துகிறது.

## சாய்பு வெடிகள் வாரி வழங்கல்

"நாடு போற்ற வாழ்க" உள்ளூர்த் திரைப்படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்று வருவதை ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் அறிய முடிகிறது.

அவரது திரைப்படங்களைப் பார்ப்பதில் அவ்வளவு ஆர்வம்.

சிறந்த நடிகர் மட்டுமன்றி, நல்ல "ஸ்டைல்" நடையழகனுமான யூல் பிரைனரின் தோற்றமே ஒரு அலாதியானது. ஆம், மொட்டைத் தலையுடனேயே அவர் திரைப்படங்களில் தோன்றி உலகின் லட்சோப லட்சம் ரசிகர்களின் அபிமான நடிகராகத் திகழ்கிறார்.

"த கிங் அன்ட் ஐ", "த டென் கொமாண்ட் மென்ட்ஸ்", "சொலமன் அன்ட் ஷீபா", "த மக்னிபிஸன்ட் செவன்" போன்ற ஆங்கிலப் படங்களின் மூலம் அகில உலகப் புகழ்பெற்ற நடிகர் யூல் பிரைனர்.

அவர் "கிங்" ஆக நடித்த அரை மணி நேர ஹாஸ்யம் கலந்த டெலி பிளே தான் கடந்த வியாழன் இரவு ஒளிபரப்பான "அனா அன்ட் த கிங்".

இவருடன் பிரபல ஹொலிவூட் நடிகை சமந்தா எட்கரும் (அனாவாக) நடித்திருந்தார்.

வீரம், காதல் நடிப்பில் மட்டுமல்ல; ஹாஸ்ய நடிப்பிலும் தன்னால் சோபிக்க முடியும் என்பதை யூல் பிரைனர் டி. வி. பிளேயில் காட்டினார்.



ஐ.டி.என். ஐந்தாவதாண்டுவிழா விசேஷ நிகழ்ச்சியின் போது இடம் பெற்ற இசை விருந்தில், பிரபல சிங்களத் திரைப்பட ஹாஸ்ய நடிகர் பிறெடி சில்வாவுடன் இணைந்து கலாவதி சின்னச்சாமி சிங்களப் பாடல் பாடும் காட்சி.

சிறப்பித்தனர். "சுப்பர் ஸ்டார்" குழுவினர் பாடல்களுக்கு வாத்திய இசை வழங்கிச் சிறப்பித்தனர்.

கலாவதி சின்னச்சாமி இந்நிகழ்ச்சியில் பங்கு கொண்ட போதிலும், தமிழ்ப் பாடல் எதுவும் பாடாமல் பிறெடி சில்வாவுடன் ஜோடி சேர்ந்து சிங்களப் பாடலையே பாடினார். தமிழை ஏன் மறந்தாரோ?

இந்நிகழ்ச்சியின் போது வீடியோ படப்பிடிப்பு நல்ல பல கோணங்களில் இடம்பெற்றிருந்ததைப் பாராட்டத் தான் வேண்டும். சுருக்கமாகச் சொன்னால் மேல்நாட்டுப் பாணியில் படப்பிடிப்பு அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

**தயாரிப்பு: சஞ்ஜயன்**

## சபாஷ் அவந்தி சபாஷ் ஸ்ரீயாணி

வியாழக்கிழமைகளில் ரூபவாஹினியில் இடம்பெற்று வரும் "எக்க மவகே தருவோ" சிங்கள தொடர் டெலி

அடுத்த வாரத்தை ஆவலோடு எதிர்பார்க்கவும் வைத்து விட்டது.

வீட்டு எஜமானியாக அவந்தி அப்பொன்ஸுவும், வேலைக்காரியாக பிரபல சிங்கள சினிமா நடிகை ஸ்ரீயாணி அமரசேனவும் போட்டி போட்டுத் தமது நடிப்பின் ஆற்றலைக் கடந்த வாரம் காட்டியதை மறக்கத் தான் முடியுமா?

வெகு இயற்கையான நடிப்பில் அவர்களிருவரும் மிளிர்ந்ததைப் பாராட்டாதோர் இருக்கவே முடியாது. அவந்தியின் நடிப்பு ஒரு படி மேல். அபாரம்.

"திமுத்து முத்து" டெலி நாடகத்தையும் இந்த நாடகம் வென்று விட்டதென்ற பேச்சையே இன்று எங்கும் கேட்க முடிகிறது.

இன்று சிங்கள டெலி டிராமாக்களின் தரம் எவ்வளவோ உயர்ந்து விட்டது. தமிழ் ரசிகர்களும் சிங்கள டெலி டிராமாக்களை ஆவலோடு பார்த்து ரசித்து மகிழ்வதொன்றே அதற்குச் சான்றாகும்.

## ஜூலை வன்செயல் டெலி டிராமா மீண்டும் டிவியில்

ஜூலை வன்செயல் பின்னணியைக் கொண்டு, சிங்கள — தமிழ்க் குடும்பங்கள் மத்தியில் நிலவிய அன்பையும் நட்புறவையும் பிரதிபலிக்கும் "சந்தாகே கதாவ" என்னும் சிங்கள டெலி

யில் சென்றிருப்பார்களாகையால், மீண்டும் இந்த டெலி டிராமாவை ஒளிபரப்ப வேண்டும் என்று 20–5–84 இதழின் இப்பகுதியில் நாம் கேட்டிருந்ததும் வாசகர்கள் அறிந்ததே.

எமது வேண்டுகோள் வீண் போகவில்லை. மீண்டும் இந்த டெலி டிராமா (சந்தாகே கதாவ), பார்க்கத் தவறிய டி. வி. ரசிகர்களுக்காக எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமை போயா தினத்தன்று, இரவு 7.15க்கு ஒளிபரப்பப்படவிருக்கிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## சிங்களப் படம் பெத்தி கோமர

கடந்த புதன்கிழமை (6–6–84)யும் "மிட் வீக் மூவி" யாக "பெத்தி கோமர" என்னும் சிங்களப் படமே ரூபவாஹினியில் ஒளிபரப்பப்பட்டது.

இப்படத்தில் டோனி ரணசிங்க, ஸ்ரீயாணி அமரசேன, சுமணா ஆகியோர் முக்கிய பாத்திரங்களில் நடித்திருந்தனர்.

ஒரு கிராமத்து யுவதிக்கும், நில அளவையாளரான ஒரு பட்டணத்து வாலிபனுக்கும் இடையே ஏற்படும் காதலை மையமாகக் கொண்டு இப்படம் தயாரிக்கப்பட்டிருந்தது.

ஸ்ரீயாணியும் டோனியும் ஜோடி சேர்ந்து இப்படத்தில் நடித்திருந்தனர்.

வில்லன் பாத்திரமேற்றிருந்த மேர்வின் ஜெயதுங்க, அசல் வில்லனாகவே தோற்றமளிக்கும் விதத்தில் அவர் நடிப்பு அபாரமாக அமைந்திருந்தது.

சிறுவனின் இறப்பின் மூலம் வில்லன் திடீரெனத் திருந்துவதாகக் கடைசியில் காட்டுவது நம்பக் கூடியதாக இல்லையே?

சொல்லி அரை மணி நேரத்தை வீணக்காமலும், ரசிகர்களின் பொறுமையைச் சோதிக்காமலும் இருந்த வகையில் டி. வி. ரசிகர்களின் "டேஸ்ட்" அறிந்து ஆடிய ரங்கா பாராட்டுக்குரியவராகிறார்.

## டி.வி.பிச்சையப்பா டிவியில் வயலினிசை

கடந்த வியாழக்கிழமை (7-6-84) இரவு டி. வியில் டி. வி. பிச்சையப்பா, வாத்திய விருந்தாக வாஹினியில் வயலினிசை வழங்கினர்.



"பெத்தி கோமர" சிங்களத் திரைப்படத்தில் டோனி ரணசிங்க, ஸ்ரீயாணி அமரசேன, மேர்வின் ஜெயதுங்க தோன்றும் ஒரு சிக்கலான கட்டம்.

புகழ்பெற்ற வானொலிக் கலைஞரான டி. வி. பிச்சையப்பா வாஹினியிலும் தன் ஆற்றலைக் காட்டி ஏற்றம் பெற்று டி. வி. ரசிகர்களின் போற்றுதலைப் பெற்ருர்.

மஹா கணபதியும், சரஸ்வதி நமோஸ் துதே, தில்லாை ஆகியவற்றைப் பிச்சையப்பா தன் இச்சைப்படி வெகு லாவகமாக வயலினில் இசை எழுப்பிய விதம் கேட்பதற்கு இனிமையாகவே இருந்தது.

வயலினிசைக் கச்சேரிக்கு பக்க வாத்தியங்களின் துணையும் இணை சேர்த்த பக்குவம் பாராட்டத் தக்கதாகவே அமைந்திருந்தன.

## ரூபவாஹினியில் ஈழப்படங்கள்

புதன்கிழமைகளில் மாலை 6.30க்கு இலங்கைக் கலைஞர்களைக் கொண்டு இலங்கையில் தயாரிக்கப்பட்ட உள்ளூர்த் தமிழ்த் திரைப்படங்கள் ரூபவாஹினியில் ஒளிபரப்பாகி வருவது ரசிகர்கள் அறிந்ததே.

அந்த வரிசையில் முதலாவதாக "ஏமாளி"களும், இரண்டாவதாக தற்பொழுது "நாடு போற்ற வாழ்க"வும் இடம் பெற்றுள்ளன.

"நாடு போற்ற வாழ்க" உள்ளூர்த் திரைப்படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்று வருவதை ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் அறிய முடிகிறது.

எஸ். ராமதாஸின் கொழும்பு முஸ்லிம் பேச்சுத் தமிழைக் கேட்பதற்கென்றே இத்திரைப் படத்தைப் பார்க்கும் ஆவல் ரசிகர்களிடையே ஏற்பட்டுள்ளது.

ராமதாஸும் ரசிகர்களை ஏமாற்றவில்லை. சிரிப்பு வெடிகளை வாரி வழங்கி வருகிருர்.

பிரபல சிங்களத் திரைப்பட நடிகைகளான கீதா குமாரசிங்கவும், சுவர்ண மல்லவராச்சியும் தென்னிந்தியத் திரைப்படப் பாணியிலேயே தமது நடிப்பையும், ஆடல்களையும் வழங்குவதை நன்கு ரசிக்க முடிகிறது. வெளிப்புறப் படப்பிடிப்புகள் மலையகத்தில் இடம்பெற்றுள்ளது சிறப்பாகவே அமைந்துள்ளது.

தென்னிந்தியத் திரைப்படப் பாணியிலேயே இத்திரைப் படம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், பொருத்தமான கதாபாத்திரத்தில் பொருத்தமான நடிகர் தேர்ந்தெடுக்கப்படாத குறையொன்றும் இப்படத்தில் இருக்கத் தான் செய்கிறதென்பதை நிச்சயம் ரசிகர்களின் உள்ளுணர்வு உறுத்தத்தான் செய்யும்.

## ஐ. டி. என்னில் யூல் பிரைனர்

கடந்த வியாழன் (7-6-84) இரவு 8.00 முதல் 8.30 மணி வரை ஐ. டி. என். ஒளிபரப்பை அவதானித்தவர்கள், பிரபல ஹொலிவூட் நடிகர் யூல் பிரைனர் நடித்த "அஜ அன்ட் த கிங்" டெலி பிளேயைப் பார்த்து ரசித்து மகிழ்ந்திருக்கவே செய்வர்.

யூல் பிரைனர் என்ருலே ஆங்கிலத் திரைப்பட ரசிகர்களுக்கு

ஐ.டி.என்: ஐந்தாவதாண்டுவிழா விசேஷ நிகழ்ச்சியின் போது இடம் பெற்ற இசை விருந்தில், பிரபல சிங்களத் திரைப்பட ஹாஸ்ய நடிகர் பிறெடி சில்வாவுடன் இணைந்து கலாவதி சின்னச்சாமி சிங்களப் பாடல் பாடும் காட்சி.

பதை யூல் பிரைனர் டி. வி. பிளேயில் காட்டினர்.

## தமிழ்ப் படங்கள் புறக்கணிப்பு!

கடந்த இரு புதன்கிழமைகளாக ரூபவாஹினியில் சிங்களத் திரைப்படங்களே ஒளிபரப்பாகி வருவது ரூபவாஹினி ரசிகர்கள் அறிந்ததே.

கடந்த புதன்கிழமை (6-6-84) தமிழ்த் திரைப்படம் ஒளிபரப்பாகும் என எதிர்பார்த்த தமிழ் டி. வி. ரசிகர்களுக்கு பெரும் ஏமாற்றத்தையே வாஹினியினர் அளித்துள்ளனர்.

எதிர்வரும் புதன்கிழமை (13-6-84) யாவது தமிழ்த் திரைப்படம் ஒளிபரப்பாகுமா என்று எதிர்பார்த்தால், அன்றும் நிச்சயம் ஏமாற்றம் தான் கிடைக்கவிருக்கிறது.

அன்று போயா தினமாதலால் அதைச் சாட்டாகக் கொண்டு அந்தப் புதன்கிழமையும் தமிழ்த் திரைப்பட ஒளிபரப்பு தட்டிக் கழிக்கப்படும் வாய்ப்பு வாஹினியினருக்குக் கிடைத்துள்ளது.

மாதமொரு தமிழ்த் திரைப் படத்தைக் கூட ஒழுங்காகக் காட்ட வாஹினியினருக்கு முடியவில்லை என்ருல், என்ன பிரயோசனம்?

இதே நிலை தான் இன்று இலங்கைத் திரைப்படக் கூட்டுத்தாபனத்திலும் நிலவுகிறது. புதிய திரைப்படங்கள் எதுவுமே இறக்குமதியாகாத நிலையில் பழைய படங்களையே பார்க்க வேண்டிய தலைவிதி தமிழ் ரசிகர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

## கலாவதி சின்னச்சாமியின் சிங்களப் பாடல்

ஐ. டி. என். (சுயாதீன ஒளி பரப்புச் சேவை) ஐந்தாவதாண்டுக் கொண்டாட்டங்களை முன்னிட்டு கடந்த செவ்வாய்க் கிழமை (5-6-84) ஐ. டி. என். ஒளிபரப்பில் பிற்பகல் 4.15 முதல் விசேஷ நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

இரவு 7.15 முதல் 9.00 மணி வரை பிரபல சிங்கள, ஆங்கிலப் பாடகர்கள் பங்கு கொண்ட கலை நிகழ்ச்சி ஒன்றும் இடம் பெற்றது.

இந்நிகழ்ச்சியில் அமரதேவ, விக்டர் ரத்நாயக்க, நீலா விக்ரமசிங்க, எச். ஆர். ஜோதிபால, மில்டன் மல்லவராச்சி, சுஜாதா அத்தநாயக்க, டி. எம். ஜெயரட்ண, பிறெடி சில்வா, கலாவதி சின்னச்சாமி ஆகியோர் சிங்களப் பாடல்களையும் —

டல்ரீன், ராஜ் செனிவிரட்ண ஆகியோர் ஆங்கிலப் பாடல்களையும் பாடி நிகழ்ச்சியைச்

வருகிறது" "எக்க மவகே தருவோ" சிங்கள தொடர் டெலி டிராமா, ஒவ்வொரு வாரமும் அதன் முடிவில் ஆவலைத் தூண்டும் வகையிலேயே நிறுத்தப்படுகிறது.

கடந்த வாரம் கதையில் பெரும் திருப்பத்தையே ஏற்படுத்தும் வகையில் அதன் முடிவு அமைந்திருந்தது.

ஜூலி வன்செயல் பின்னணியைக் கொண்டு, சிங்கள — தமிழ்க் குடும்பங்கள் மத்தியில் நிலவிய அன்பையும் நட்புறவையும் பிரதிபலிக்கும் "சந்தாகே கதாவ" என்னும் சிங்கள டெலி டிராமா, கடந்த மே மாதம் 15 ஆம் திகதி இரவு 10.35 முதல் 11.30 வரை ஒளிபரப்பப்பட்டது தெரிந்ததே.

அன்று (15-5-84) வெசாக் தினமாதலால், வெசாக் கொண்டாட்டங்களைப் பார்க்கப் பல்லாயிரக் கணக்கானேர் வெளி



ஐ. டி. என்னில் ஒளிபரப்பான "அஜ அன்ட் த கிங்" டெலி பிளேயில் டீச்சர் அனுவாக சமந்தா எட்கரும், கிங் ஆக யூல் பிரைனரும் தோன்றும் ஒரு கட்டம்.

மாக அமைந்திருந்தது.

சிறுவனின் இறப்பின் மூலம் வில்லன் திடீரெனத் திருந்துவதாகக் கடைசியில் காட்டுவது நம்பக் கூடியதாக இல்லையே?

## தமிழ் நிகழ்ச்சி

ரூபவாஹினியில் இவ்வாரம் ஒளிபரப்பாகவுள்ள தமிழ் நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு:—

* ஜூன் 11 திங்கட்கிழமை: மாலை 7.15 மணிக்கு கலையரங்கம் – குச்சுப்புடி நடனம் ரங்கா விவேகானந்தன்.

* ஜூன் 13 புதன்கிழமை: மாலை 6.20 மணிக்கு பௌத்த சமயப் பேச்சு (தமிழ்); மாலை 6.30 மணிக்கு உள்ளூர்த் திரைப்படத் தொடர் "நாடுபோற்ற வாழ்க".

* ஜூன் 15 வெள்ளிக்கிழமை: மாலை 6.00 மணிக்கு விளையாட்டுப் பயிற்சி (தமிழ்)

## 'பக்த பிரகலாதா'

இதேவேளையில் "பக்த பிரகலாதா" தமிழ்த்திரைப்படம் எதிர்வரும் ஜூன் 20 ஆம் திகதி ஒளிபரப்பப்படும் என்று "ரூபவாஹினி" தமிழ்ப் பகுதியினர் அறிவிக்கின்றனர். (ம)


லிடோ
(யாழ். நகர்)
10-30, 2-30, 6-30
லக்கி
(கினிகத்தேனை)
6-00, 9-30.
குமரன்
(மன்னார்)
2.00, 6.00, 9.30,
சேகர், ரூபா,
ரவிந்தர் உஷா
நடித்த
ஒருதலை
ராகம்
(கலர்)
கதை, வசனம், டைரக்ஷன்:
இசை:
ராஜேந்தர்


வியாழக்கிழமைகளில் ரூபவாஹினியில் ஒளிபரப்பாகி வரும் "எக்க மவகே தருவோ" சிங்கள டெலி டிராமா அங்கத்திற்கு அங்கம் கதையம்சம் கூடிக் கொண்டே ரசிகர்களை மகிழ்வித்து வருகிறது. இதைப்போன்ற இன்னும் பல நாடகங்களை எதிர்பார்க்கிறோம். — எம். எஸ். பர்ஸான், நலீப், ரியாஸ், அக்குரணை.

ஹிஸாமா, ரிஸ்னு, பர்வீன், ரிஸ்வானு, மடவளை பஸார்.

★

மூன்று சகோதரிகளின் ஆழமான அன்பை அறிமுகப்படுத்தி வரும் "ஏக்க மவககே தருவோ" சிங்கள டெலி நாடகம் தமிழ் ரசிகர்கள் மத்தியிலும் பெரும் வரவேற்பைப் பெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும். — செல்வி பி. கிருஷ்ணு, பொகவந்தலாவ.

★

கடந்த புதன்கிழமை (6-6-84) தமிழ்த் திரைப் படத்தை எதிர்பார்த்த டி.வி. ரசிகர்களை வாஹினியினர் ஏமாற்றியதை மன்னிக்கவே முடியாது. செல்விகள் பத்மா, சித்ரா, பவளம், ரஞ்சி, யாழ்ப்பாணம்.

★

டி. வி. நிகழ்ச்சிகளின் விமர்சனங்கள் சுவையாக இருக்கின்றன. மிக்க மகிழ்ச்சி. வாஹினியை மட்டுமன்றி வானொலியையும் விமர்சிக்க வேண்டுகிறேன். — எம். ஐ. உஸனுர் ஸலீம், நிந்தவூர்-1.

# வாசகர் எதிரொலி - எதிரொளி

★

"பிளேக்ஸ் 7" இவ்வளவு சீக்கிரம் முடியுமென நாம் எதிர்பார்க்கவே இல்லை. முடிவும் சோகமாகிவிட்டது. இவ் விஞ்ஞானத் தொடர் ரசிகர்களின் ஏகோபித்த பாராட்டுதல்களைப் பெற்றிருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. — எஸ். உதயகுமாரன், ஏ. முரளீதரன், ஏ. சியாமளாதேவி; ஆறுமுகத்தான் குடியிருப்பு.

★

உள்ளூர்த் திரைப் படத் தொடரில் "ஏமாளிக"ளை அடுத்து, "நாடு போற்ற வாழ்க" ஒளிபரப்பாகி வருவதையிட்டு மிக்க மகிழ்ச்சி. — எம். சிவசுப்பிரமணியம், கொஸ்லாந்தை.

★

வாஹினியில் எம்.ஜி.ஆர். படம் ஒளிபரப்பாவதைக் கண்டு களிப்புறக் காத்திருக்கும் பல்லாயிரக் கணக்கான டி.வி. ரசிகர்களில் நானுமொருவன். எங்கள் நம்பிக்கை வீண்போகாதிருக்க வாஹினியின் உயர் அதிகாரிகள் உரிய நடவடிக்கைகள் எடுப்பார்களென நம்புகிறேன். — எம். எம். பஹ்மி, கடுகண்ணாவ.

★

ரூபவாஹனியில் ஒளிபரப்பான "எத்தின் ஏத்தட்ட" சிங்களத் திரைப்படம் இன்றைய முற்போக்கு எண்ணம் கொண்ட இளைய சமுதாயத்தினருக்கு ஏற்ற படமாகும். களங்கப் படுத்தப்பட்டவளையும் கைப்பிடிக்க முனையும் காளையின் துணிவைப் பாராட்டத்தான் வேண்டும். நாகரிகப் படாடோபத்துக்கு அடிமையாகாது தன்னை விரும்பிய கிராமத்து ஆடவனையே நாடிச் செல்லும் கிராமத்து அழகியின் அன்பு அளப்பரியதாகும். — எம். ராஜேந்திரன், உடபுசல்லாவ.

★

2-6-84 சனிக்கிழமை இரவு வானொலியில் இடம் பெற்ற "உயிருள்ளவரை உமா" நாடகம் ரசிக்கத்தக்க விதத்தில் அமைந்திருந்தது. நாடகத்தை எழுதியவருக்கும், நடித்த கலைஞர்களுக்கும் எங்கள் பாராட்டுக்கள். — ஜவ்பர்கான், காத்தான்குடி - 02.

★

புதன்கிழமை தோறும் வாஹினியில் ஒளிபரப்பாகி வரும் உள்ளூர்த் திரைப்படத் தொடரை மாலை 6.30க்கு ஒளிபரப்புவதால், நோன்பு திறந்து விட்டுப் பார்க்கச் சிரமமாக இருக்கிறது. ஆகவே நேரத்தை மாற்றவும். — ஏ.ஏ.ஏ. அலி, ஏ.கே. நௌஷாத், எம். சரீப்தீன், எஸ். எம். காசீம்தீன், "ஊர்க்குருவி" சின்னக்கிண்ணியா - 3.

★

கடந்த திங்கட்கிழமை (4-6-84) வாஹினி கலையரங்கம் நிகழ்ச்சியில் ஒளிபரப்பான ரங்கா விவேகானந்தனின் குச்சுப்புடி நடனம் நன்கு சிறப்பாகவும், கண்ணுக்கு விருந்தாகவும் அமைந்திருந்தது. — எஸ். பி. ராஜன் குடும்பத்தினர், சென்ட் லெனுட்ஸ் குருப்.

★

3-6-84 வாஹினியில் இடம் பெற்ற கொரிய மக்களின் திருமண, மரணச் சடங்குகளை நேரில் பார்ப்பது போன்று விவரணச் சித்திரம் அமைந்திருந்தது. "கலையரங்கம்" நிகழ்ச்சியை இன்னும் சிறப்பாக அமைக்க வேண்டுகிறோம். — செல்விகள் ஷாந்தி சேதுராமன், பவா சேதுராமன், மட்டக்களப்பு.

"ஒருகை ஓசை"க்குப் பின் வாஹினியில் பாக்கியராஜாவைக் காணவில்லையே? மீண்டும் இனி எப்பொழுது அவர்படம் ஒளிபரப்பாகும். — எஸ். நளீர், எம். எஸ். அன்சார், கிண்ணியா — 3.

★

ரூபவாஹனியில் கமல் படத்தை எதிர்பார்த்து ஏமாந்தது தான் கண்ட பலன். ரஜனி அல்லது வேறு நடிகர்கள் நடித்த படங்களையாவது ஒளிபரப்பவும். — செல்வி எஸ். ராஜேஸ்வரி, கொட்டகலை.

நித்தியகலா!

22 கெரட் நகைகளுக்கு நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம் அத்தனைக்கும் நித்தியகலாவை நாடுங்கள்

NEW Nithiyakala Jewellers

19, SEA STREET,
COLOMBO — 11. PHONE: 547111

## நாளுக்கு நாள் முக்கியத்துவம் பெற்று வரும் கிராம்பு

கிராம்புச் செடிகள் இந்தியாவில் முதலில் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள குற்றாலம் மலையிலும், நீலகிரி மாவட்டத்திலுள்ள பரளியாறு தோட்டத்திலும் உற்பத்தி செய்யப்பட்டன.

கிராம்பின் முக்கியத்துவம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருவதால் அதை மேலும் உற்பத்தி செய்ய தமிழக அரசு திட்டமிட்டது. கிராம்பு, விலை தற்போது கிலோவுக்கு ஏறத்தாள ரூ. 150 முதல் 200 வரை உள்ளது.

ஆதலால் கன்னியாகுமரி மாவட்டத்தில் காடுகளிலும், தனியார் கிராம்பு பயிரிட முன் வந்துள்ளனர்.

அதன் பயனாக இந்தியாவிலேயே முதன் முதலில், மத்திய அரசு நிதி உதவியோடு கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மலைகளின் மண்வளமும், தட்பவெப்ப நிலையும் கிராம்பு உற்பத்திக்கு உகந்தது எனக்கருதி தமிழக அரசு ஐந்தாண்டுத் திட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலை வளர்ச்சி திட்டத்தின் கீழ் 1976–77 முடிய 100 ஹெக்டர் பரப்பளவில் கிராம்பு உற்பத்தி செய்ய ஒப்புதல் அளித்தது.

அத்திட்டத்தை அமுல் படுத்துவதற்கு வனத்துறையில் அதற்கென தனித் தோட்டம் நாகர்கோவிலில் 24–7–1984 இல் ஆரம்பிக்கப்பட்டது.

இம்மாவட்டத்தில் 1976 77 இல் 31ஹெக்கரில் கிராம்பு பயிர் செய்யப்பட்டுள்ளது

(ம–சி)

NITHIYAKALA

கலா ரசிகர்களையே அதிசயிக்க வைக்கும் நவீன டிசைன்களில் தங்க, வைர நகைகளைப் பெற்றுக் கொள்ள இன்றே விரையுங்கள்.

நியூ நித்தியகலா நகைமாளிகை

19, செட்டியார் தெரு, கொழும்பு - 11.
தொலைபேசி:– 547111

# சீக்கியர் போராட்டம் உச்சக் கட்டம்!

சீக்கியர்களின் போராட்டம் இந்தியாவில் உச்சக் கட்டத்தை அடைந்திருக்கிறது.

சீக்கியர்களின் "தலைமை நிலையம்" எனக் கருதப்பட்ட அமிர்தசரஸ் பொற் கோயிலின் அரண் நிலை குலைந்து போய் விட்டது.

அது மட்டுமா? சீக்கியர்களின் தீவிரவாதத் தலைவரான ஜர்னைல் சிங் பிந்தரன்வாலே இராணுவத்தினரின் தாக்குதலுக்குப் பலியாகியிருக்கிறார்.

முற்றிலும் எதிர்பாராதஇந்தச் சம்பவம் உலகின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்திருக்கிறது.

இந்தியாவில் எதிர்க் கட்சியினர் இந்திராவின் இந்த இராணுவ நடவடிக்கையை ஆதரித்திருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் சீக்கியர்கள் அவர் மேல் கடும் கோபம் கொண்டிருக்கிறார்கள். நாடெங்கும் சீக்கியர்கள் ஆர்ப்பாட்டத்தில் இறங்கியிருக்கிறார்கள்.

எனினும் பஞ்சாப்பின் தீவிரவாத சீக்கியர்கள் கிளப்பிய பிரச்சினைக்கு, மிக நிதானமாக அவசரப்படாமல், தீர்வுகாண்பதில் திருமதி இந்திரா காந்தி வெற்றி கண்டுள்ளார் என்றே பெரும் பான்மையினர் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

சீக்கியரின் புனித ஸ்தலமான பொற்கோயிலில் மறைந்திருந்த சீக்கிய தீவிரவாதிகளை இந்திய இராணுவம் சரணடையச் செய்வதில் வெற்றி கண்டுள்ளது. 300க்கதிகமான தீவிரவாதிகள் இராணுவத்தினருடன் நடத்திய மோதலில் உயிரிழந்துள்ளனர்.

இராணுவத்திலும் 48 பேர் பலியாகியுள்ளனர். 450க்கு மேற் ... களால் ஏற்படுத்தப்பட்ட பிரச்சினை என்றே கூறுவர்.

"பஞ்சாப்பில் நடைபெறும் வன்செயல்களின் பின்னணியில் வெளிநாடுகள் சம்பந்தப்பட்டுள்ளன என்பதற்கு நிச்சயமான அத்தாட்சிகள் அரசாங்கத்திடம் அகப்பட்டுள்ளன. தேசிய பாதுகாப்பை முன்னிட்டு இவ் விரகசியங்களைப் பகிரங்கப் படுத்த முடியாது" என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி சில வாரங்களுக்கு முன்னர் கூறியதை இங்கு சுட்டிக் காட்டலாம்.

அகாலிதள கட்சியைச் சேர்ந்த சீக்கியர்களின் கையிலிருந்து திசை மாறிய வன்செயல்கள் இப்போது வல்லரசுகளின் ஏஜண்டுகளின் கைகளுக்குச் சென்றுள்ளன என்றும் கூறப்பட்டது.

சீக்கியர்களின் புனித பொற்கோயிலின் உள்ளே நடைபெறுவன பெரும் பாரதூரமானவை ஆக மாறிவிட்டன. வன்செயல் புரிபவர்கள் பாதுகாப்புப் படைகளின் பிடியிலிருந்து தப்பி யோடும் புகலிடமாகவும் பொற் கோயில் மாறியது. இதனால் கோயிலின் புனிதத் தன்மை கெட்டு விடும் என்று கருதிய சீக்கியரிடையே பிளவும் ஏற்பட்டிருந்தது.

இக்கலவரங்கள் குறித்து இந்திய உள்துறை அமைச்சின் செயலாளர் எம். கோ- வாலி, புதுடில்லியில் நிருபர்களுக்களித்த பேட்டியின் போது, "2 மாதங்களுக்கிடையில் தீவிர வன்செயல் இயக்கத்தின் முதுகெலும்பை முறித்துவிடுவோம்" என்று தெரிவித்திருந்தார்.

அப்படியே நடந்தும் விட்டது. ஏறத்தாள பத்துப் பன்னிரண்டு வருடங்களுக்கு முன்னர், இந்தி... றன என்பது முற்றிலும் உண்மையே. இந்தியாவின் ஐக்கியத்தைக் குலைப்பதில் அமெரிக்கா முன்னிற்பதை இந்தியப் பத்திரிகைகள் பகிரங்கமாகவே சுட்டிக் காட்டியிருந்தன.

இந்தியாவைத் துண்டாடவும், வளர்முக நாடுகளிடத்திலும் உலகிலும் அதற்குள்ள செல்வாக்கி...



பிந்தரன்வாலே

...னைத் தகர்ப்பதற்கும் அமெரிக்கா கொண்டிருந்த திட்டங்களுக்கான முக்கிய ஆதாரத்தை இந்திய அரசு பெற்றிருந்ததாகக் கூறப்படுகிறது. இத்திட்டங்களைத் தீவிரமாகச் செயல்படுத்த சி. ஐ- ஏ- விசேஷ நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஜனாதிபதி றேகன் சிபார்சு செய்ததாகவும் இந்தியப் பத்திரிகைகள் எழுதியிருந்தன.

வளர்முக நாடுகளில் தன் கால்களை ஊன்றுவதற்காக, அந்...

விளங்குகிறது" என்று குறிப்பிட்டதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

சீக்கியத் தீவிரவாதிகள் தமது போராட்டத்திற்காக அமெரிக்காவிடமிருந்து வருவித்த ஆயுதங்களைப் பாகிஸ்தானூடாகவே பெற்றனர் என்றும் அவதானிகள் தெரிவித்தனர்.

இந்தியாவைத் துண்டாடுவதில் அக்கறை கொண்ட பிற நாட்டரசாங்கமொன்று விநியோகம் செய்த நவீன ஆயுதங்களை ஏந்திய நூற்றுக்கணக்கான நபர்கள் பொற் கோயிலினுள் காணப்படுவதனால் பெரும் நாசத்தின் பின்பே வெற்றியை அடைய நேரிடும் என்று "டைம்ஸ் ஒப் இந்தியா" பத்திரிகை எழுதியிருந்தது.

தற்சமயம் தீவிரவாத சீக்கியர்களுக்கு எதிரான போராட்டத்தில் ஒரு குறிப்பிடத்தக்க வெற்றியைக் கண்டிருக்கிறார் பிரதமர் இந்திரா என்றே கூறவேண்டும்.

ஆயினும் சீக்கியர்களின் வரலாற்றை அறிந்தவர்கள் இந்த அளவில் விஷயம் முற்றுப் பெற்று விட்டது என்று கருத மாட்டார்கள்.

உலக நாடுகளில் உள்ள சீக்கியத் தலைவர்கள் இந்திராவுக்கு எதிராகத் தமது ஆத்திரத்தைக் கக்கியிருக்கிறார்கள். "பொற்கோயிலுக்குள் இராணுவத்தினரை அனுப்பியதன் மூலம் இந்திய அரசாங்கம் தனக்குத்தானே மரண வாரண்ட்டைப் பிறப்பித்திருக்கிறது" என்று கூறியிருக்கிறார் ஒருவர்.

சீக்கியர்களின் போராட்டம் இப்போது தான் ஆரம்பித்திருக்கிறது என்று அறிவிக்கிறார் மற்றொருவர். இவற்றை எல்லாம்...

## பூலோக சஞ்சாரம்

கதாசி

அரபு மக்களை நிர்ப்பந்திப்பதற்காகத் தனியாகச் செய்து கொள்ளப்பட்ட காம்ப் டேவிட் ஒப்பந்தத்திற்கு எதிர்காலம் இல்லை என்ற உண்மையை எகிப்து இறுதியாக உணர்ந்து விட்டது, என்பதை மத்திய கிழக்குப் பிரச்சினைபற்றிய சர்வதேச மாநாடு நடத்தும் யோசனைக்கு எகிப்து அளிக்கும் ஆதரவு எடுத்துக் காட்டுகிறது.

இப் பயணத்தின் போது மத்திய கிழக்குப் பிரச்சினைக்கான தீர்வை ஆதரிக்கும் சக்திகள் எவை, எதிர்க்கும் சக்திகள் எவை என்பது தெளிவாகும்.

சிரியா, ஜோர்தான், லெபனான், எகிப்து, இஸ்ரவேல் போன்ற நாடுகளின் தலைவர்களை ஐ. நா- பொதுச் செயலாளர் சந்திக்கவுள்ளார்- இச்சந்திப்பின் போது, மத்திய கிழக்குப் பிரச்சினை பற்றிய சர்வதேச மாநாட்டில் கலந்து கொள்ள இந்த நாடுகள் தயாரா, இல்லையா என்பது தெரியும்.

இத்தகைய சர்வதேச மாநாடு கூட்டப்படுவதை எகிப்து, ஜோர்தான் முதலிய அரபு நாடுகளின் தலைவர்கள் ஆதரித்துப் பேசியிருக்கின்றனர். தங்கள் நாடுகளின் ஒவ்வொரு பகுதியையும் இஸ்ரவேலுக்குப் பறிகொடுத்துள்ள சிரியாவும் லெபனானும் மத்திய கிழக்குப் பிரச்சினைக்கு விரிவான நியாயமான தீர்வு ஏற்படுவதை விரும்புகின்றன-

இருக்கின்ற அதே வேளையில், அமெரிக்காவையும் இஸ்ரவேலையும் போன்று அதனைக் கடுமையாக எதிர்க்கும் நாடுகளும் உள்ளன-

போராடும் தரப்புக்கள் உண்மையில் சமரசத்தை நாடாததால், அத்தகைய சர்வதேச மாநாடு கூட்டுவதற்கு உரிய நிலைமை இன்னமும் ஏற்படவில்லை என்று பிரிட்டனும், பிரான்ஸும் கருதுகின்றன.

லண்டனும் பாரிஸும் இப்படிச் செய்வதன் மூலம் தற்போதைய நெருக்கடியை நீடிக்கச் செய்வதில் வாஷிங்டனுக்கும் டெல் அவிவிக்கும் அவை உதவவே செய்கின்றன

### வங்கதேசம்

வங்காள தேசத்தின் தென் கிழக்குப் பிரதேசத்தில் பல குடியேற்றக் கிராமங்கள், கடந்த வாரம் மலைஜாதி கெரில்லாக்களின் தாக்குதல்களுக்கு உள்ளாகின- சுமார் 123 பேர் கொல்லப்பட்டனர். சுமார் 900 பேர் காயமுற்றனர்-

இத் தாக்குதலின்போது தன்னியக்கத் துப்பாக்கிகளும், ஒற்றைத் துப்பாக்கிகளும் பயன் படுத்தப்பட்டன.

அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட குடியேற்றங்களின் மீதே இத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன-

1975 இல் 6000 மலை ஜாதியினர் இப் பிரதேசத்தில் சுயாட்சி கோரி ஆயுதப் போராட்டம் நடத்தினர்- அதனைத் தொடர்ந்தே இங்கு குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

வங்காள தேசத்தில் ஜனப் பெருக்கம் அதிகமாகவுள்ள...

கான இன ஒதுக்கல் எதிர்ப்பாளர்கள் லண்டனில் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

பிரதமர் போத்தா லண்டன் வந்து சேர்ந்ததும் உடனடியாகவே பிரதமர் திருமதி தாட்சரின் உத்தியோகபூர்வ நாட்டுப்புற மாளிகைக்கு ஹெலிக்கொப்டர் மூலம் அழைத்துச் செல்லப்பட்டார்.

தென் ஆபிரிக்கா, காமன்வெல்த் அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்ட பின்னர் அதன் பிரதமர் ஒருவர் பிரிட்டனுக்கு அழைக்கப்பட்டது இதுவே முதல் தடவையாகும்.

இதனால் எதிர்க் கட்சியினர், திருச்சபைக் குழுக்கள், இன ஒதுக்கல் எதிர்ப்பு இயக்கம் ஆகியனவற்றில் இருந்து எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது.

### சீனு

32 லட்சம் துருப்புகளைக் கொண்ட தனது இராணுவத்தை நவீனமயப்படுத்த சீனா திட்டமிட்டுள்ளது-

இதற்குத் தேவையான உயர்ரக ஆயுதங்களையும், இராணுவ நுட்பங்களையும் அமெரிக்காவிடமிருந்தும், மற்றைய நேச நாடுகளிடமிருந்தும் சீனு வாங்கும்.

சீன பாதுகாப்பு அமைச்சர் ஷாங்–ஹய்–பிங் பிரான்ஸ், அமெரிக்கா, கனடா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு ஒரு மாத பயணமொன்றை மேற்கொண்டுள்ளார்.

### அமெரிக்கா

அமெரிக்க ஜனாதிபதி றேகன் கடந்த வாரம் பிரிட்டனுக்கு விஜயம் செய்தார்- அவருக்கு...

இராணுவத்தினருடன் நடத்திய மோதலில் உயிரிழந்துள்ளனர்.

இராணுவத்திலும் 48 பேர் பலியாகியுள்ளனர். 450க்கு மேற்பட்ட தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், பின்னர் ஏனைய தீவிரவாதிகள் சரணடைந்துள்ளதாகவும் செய்திகள் கூறுகின்றன.

சீக்கியரின் பொற் கோயிலிலிருந்து ஏராளமான வெடிமருந்துகளையும் ஆயுதங்களையும் இராணுவத்தினர் கைப்பற்றியுள்ளதாகத் தெரிகிறது.

பஞ்சாப் பிரச்சினையை அறிந்தவர்கள் இது பஞ்சாப் மக்களால் ஏற்பட்ட பிரச்சினை என்று கூறுவதைவிட, அந்நிய சக்தி வித்திருந்தார்.

அப்படியே நடந்தும் விட்டது. ஏறத்தாள பத்துப் பன்னிரண்டு வருடங்களுக்கு முன்னர், இந்தியாவில் பேரலை வீசிய நக்ஸலைட்டுகளின் தாக்குதல்களை வேரோடு கிள்ளியெறிந்த திருமதி இந்திரா காந்திக்கு பஞ்சாப் எல்லைக்குள் கொழுந்து விட்ட சீக்கியரின் போராட்டத்தை அடக்குவது ஒன்றும் பெரிய காரியமல்ல.

ஆனால் அவதானமாக, ரத்தச் சாக்காட்டைக் குறைத்து செயற்பட்டதையும் பாராட்டாதிருக்க முடியாது. பஞ்சாப்பின் பிரச்சினையைத் தூண்டிவிடுவதில் வெளிநாட்டுச் சக்திகள் முன்னின்றுந்தன.

வளர்முக நாடுகளில் தன் கால்களை ஊன்றுவதற்காக, அந்நாடுகளில் உள்ள மத, மொழி, இன மற்றும் பிரிவினைகளைத் தூண்டிவிடுவதில் அமெரிக்கா நாட்டம் கொண்டிருந்தது என்று புகார் கூறப்படுகிறது.

அமெரிக்காவின் ரகசியத் திட்டங்களை இந்தியாவில் செயல்படுத்துவதற்கு பாகிஸ்தான் துணை நின்று வருகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது. லோகசபையில் உரை நிகழ்த்திய இந்திய பாதுகாப்பமைச்சர் ஆர். வெங்கட்ராமன் "பாகிஸ்தான், மேற்குலகின் காவல் அரணாக

சீக்கியர்களின் போராட்டம் இப்போது தான் ஆரம்பித்திருக்கிறது என்று அறிவிக்கிறார் மற்றொருவர். இவற்றை எல்லாம் அவதானிக்கும் போது இந்திரா இன்னும் பல சவால்களைச் சமாளிக்க வேண்டியவராக இருக்கிறார் என்பது தெளிவாகிறது.

## ● மத்திய கிழக்கு விஜயம்

ஐ. நா-பொதுச் செயலாளர் பெரஸ் டி குவெல்லர், மத்திய கிழக்கில் சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொள்ளவிருக்கிறார்.

மாநாடு நடத்தும் யோசனைக்கு எதிர்த்து அளிக்கும் ஆதரவு எடுத்துக் காட்டுகிறது.

லெபனனில் பின்பற்றப்படும் அமெரிக்க - இஸ்ரவேலியக் கொள்கை இதற்கு ஓர் உதாரணம். இந்தக் காரணத்தினால் தான் இந்தப் பிரதேசத்தில் உண்மையான அமைதியை ஏற்படுத்துவதற்குப் புதிய வழி கண்டுபிடிக்க வேண்டும் என்ற முடிவுக்கு அரபுக்கள் வருகின்றனர்.

மத்திய கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு பற்றிய சர்வதேச மாநாடு கூட்டும் யோசனைக்கு ஆதரவு தெரிவிக்கும் நாடுகள்

றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

வங்காள தேசத்தில் ஜனப் பெருக்கம் அதிகமாகவுள்ள இடங்களிலிருந்து ஏனைய இடங்களுக்கு மாற்றி ஜன விகிதாசாரத்தை சமப்படுத்தவே அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

## பிரிட்டன்

தென் ஆபிரிக்கப் பிரதமர் பீட்டர் போத்தா பிரிட்டனுக்கு விஜயம் செய்தார். அவருடைய விஜயத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஆயிரக் கணக்

அமெரிக்க ஜனாதிபதி றேகன் கடந்த வாரம் பிரிட்டனுக்கு விஜயம் செய்தார். அவருக்கு வைபவ ரீதியான வரவேற்பு அளிக்கப்பட்டது.

பிரிட்டிஷ் பிரதமர் மார்கரட் தாட்சர் சம்பிரதாய முறைப்படி அவரை வரவேற்றார். இரு தலைவர்களும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டனர்.

அயர்லாந்தில் நான்கு நாள் விஜயமொன்றை முடித்துக் கொண்டே ஜனாதிபதி றேகன் லண்டன் வந்தார். அவர் பிரான்ஸுக்கும் சென்றார்.

(மு)


# நிபுணர்களின் தீர்ப்பு:

உலக சுகாதார நிறுவனத்தின் வாய்ச் சுகாதாரப் பிரிவு கூட்டிய நிபுணர்கள் குழு ஒன்று, சில பற்பசைச் சேர்வம்சங்கள் பற்சிதைவைக் குறைக்கும் தன்மை கொண்டவை என்று முடிவு செய்தது.

(உலக சுகாதார நிறுவனச் செய்தித் தாள், 60 (4): 633-638 (1982).)

சிக்னல் 2 சேர்வு முறை, உலக விஞ்ஞானிகள் குழு ஒன்றின் பரிசோதனைக்காகத் தானாகச் சமர்ப்பிக்கப்பட்ட முதலாவது இலங்கைப் பற்பசைச் சேர்வு முறையாகும்.

நடுநிலையான நிபுணர்களின் மதிப்பீடு:

சிக்னல் 2 சேர்வு முறை, பற்சிதைவுக்கு எதிரான பாதுகாப்புத் தன்மை கொண்டது.




| | |
|---|---|
| சிக்கன அளவு | 14-20 |
| பெரியது | 9-20 |
| நடுத்தர அளவு | 6-55 |

**புளோரைட் கொண்ட சிக்னல் 2 பற்களைக் கெட்டிப்படுத்திப் பற்சிதைவைக் கட்டுப்படுத்தும்**

ஒரு தரமுயர்ந்த லீவர் உற்பத்தி

TAL

நம்பிக்கை – நாணயம்,
தங்க நகைகளுக்கு
கலை அழகு மிக்க
உத்தரவாதம்
கொண்ட ஸ்தாபனம்
எண்ணற்ற நகைத் தெரிவுகளில்
என்றும் முன்னணியில் திகழ்வது
சுஜாதா நகை மாளிகை
109, செட்டியார் தெரு, கொழும்பு – 11.
தொலைபேசி: 36918.

சிந்தாமணி ஆரம்
இல. 757 CHINTAMANI MAGAZINE SECTION 10–6–1984

வண்ணமிகு வனிதையரின்
வனப்புமிகு மேனிக்கு எழிலூட்டும்
22 கரட் தங்க நகைகளுக்கு
நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்
SUJATHA JEWELERS
109, Sea Street. Colombo-11.
Phone: 36918

# திருமணம் என்பது ஒரு தெய்வீக வாழ்க்கை நெறியாகும்

## ஆணும் பெண்ணும் இணையும்போது தன்னலம் அகன்று பரநலம் பிறக்கிறது

பொதுவாகத் திருமணங்கள் எல்லாம் ஆண், பெண் உடல் அழகையும், கவர்ச்சியையும் செல்வத்தையும், செல்வாக்கையும் கொண்டே நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன.

இப்படி நடைபெறுமல் ஆன்மீகக் கவர்ச்சியினல் ஒருவர் உள்ளம், இன்னெருவர் உள்ளத்தைக் கவர்ந்து அதன் மூலமாகத் திருமணம நடைபெறுமாஞல் அது சுவர்க்கத்தில் முன் கூட்டியே நிச்சயிக்கப்பட்ட திருமணம் ஆகும்.

ஒரே கடவுளின் இரண்டு திரு உருவங்களுக்குத்தான் திருமணம் நடைபெறுகிறது. இரண்டு ஜோடிக் கண்களும் ஒரே காட்சியைத்தான் காண்கின்றன.

ஒரே நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவே பரிபூரணமாக ஒத்துழைக்கும் இருவர் இத்தகைய திருமணங்களைச் செய்துகொள்கிறார்கள். அதற்காகவே தங்களை இணைத்துக் கொண்டு பணி புரிகிறார்கள். இரண்டு மனங்களும் தம்முடைய இயற்கை உண்மையை உணர்ந்து கொள்வதற்கு ஒன்றுக்கு ஒன்று பரிபூரணமாக உதவி செய்து கொள்கின்றன.

இப்படிப்பட்ட இருவர் ஒருவரை ஒருவர் நன்கு உணர்ந்து கொண்டு ஒரே நெறியில் செல்வதுதான் இறைவனை விரைவில் அடையக்கூடிய முறையாகும்.

கேள்விப்பட்டது இல்லை. இதயம்தான் இன்பம் தரக்கூடியது. மக்கள் இதயத்தின் அடிப்படையிலேயே ஒன்றுபடமுடியும்.

ஆனல் சிந்தனை இல்லாத இதயம் வெறும் உணர்ச்சிமயமாக இருக்கும். சிந்தனையுடன் கூடிய இதயத்துக்கே மதிப்பளிக்க வேண்டும்.

இறைவனின் பெயரால் இரண்டு இதயங்கள் ஒன்றுபடுகின்றன. கணவனும் மனைவியும் ஆகின்றன. தூய இன்பத்தை அடைகின்றன.

ஆணும் பெண்ணும் இவ்வாறு ஒன்றுபட்டு இன்பம் பெறுவது உலகம் முழுவதும்

இந்தக் கடவுள் காதல்தான் கணவனையும் மனைவியையும் ஒன்றுபடுத்துகிறது. ஒரே மனத்துடன் அவர்கள் இணைந்து பணிபுரியவும் செய்கிறது.

திருமணம் ஆன அடுத்த கணமே கணவனும் மனைவியும்



திருமணத்துக்கு முன் தன் நலத்தால் குறுகிக்கிடந்த மனம் இப்போது விரிந்து பரவி செயல்பட ஆரம்பித்துவிடுகிறது.

நம்முடைய பழைய பெயரும் மறைந்து விடுகிறது. நமக்

அவள் கமலக் கண்ணன் ஆகிவிடுகிறாள்.

கண்ணனே "கண்ணன் கமலம்" ஆகிவிடுகிறான்.

இவர்கள் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து கொள்ளுவதன் மூலமாகவே இன்பம் அடைகிறார்கள். உதவி என்பது கொடுப்பது. எவ்வளவு அதிகமாகக் கொடுக்கிறோமோ, அவ்வளவு அதிகமாகப் பெறுகிறோம்.

திருமணத்துக்குள் போட்டி மனப்பான்மை புகுவதற்கு இடம் கொடுக்கக் கூடாது. அது பிரிவினையை ஏற்படுத்தும்.

பெண் உரிமை இயக்கமும், ஆண் உரிமை இயக்கமும் இந்த அடிப்படை உரிமையைப் புரிந்துகொள்ளாததால்தான் ஏற்பட்டு இருக்கின்றன.

பெண் உரிமையும், ஆண் உரிமையும் ஒன்றுபட்டு இயங்குவதுதான் முழு உரிமை.

ஆணுக்கும், பெண்ணுக்கும் இருக்கும் வேறுபாடுதான் என்ன?

உடம்பில் இருக்கும் தோற்ற வேறுபாடுகளும் அவர்கள் அணிந்து கொள்ளும் ஆடை வேறுபாடுகளும் ...

யோகிராஜ்

– சுவாமி சச்சிதானந்தர் –

கணவனும், மனைவியும் ஒருவரை ஒருவர் உண்மையாகக் காதலிப்பது அவ்விருவரும் இணைந்து இறைவனையே காதலிக்கும் புனித காதலாக வளர்கிறது. திருமணம் என்பது ஒரு தெய்வீக வாழ்க்கை நெறியாகும்.

திருமணம் செய்து கொள் ...

இருக்கிறது. இதுதான் உலக இயற்கை.

இந்த உண்மை, உயிர் இல்லாத பொருள்களிலும் காணப்படுகிறது. ஒவ்வொரு அணுவிலும் மின் அணு, முன் அணு மன் அணு என்ற மூன்று நுண் அணுக்கள் இருக்கின்றன.



## உழைத்துப் பிழைப்பவர்

– சண்முகப்ரியா –

தொடுவானில் தேய்நிலா காய்கின்ற நேரம்
பொன்மாலை பகலுக்கு விடைகூறும் நேரம்
படகேறி அவன்போவான் கடல்மீனைத் தேடி
விடைகூறி அவள்நிற்பாள் கண்மீறல் சாடி.

★

விடிவெள்ளி விளக்கேற்றும் அதிகாலைப் பொழுது
வருமோடி அதுமட்டும் அனல்கொட்டும் நிலவு
படம்கிறும் கடல்நீரில் ஆங்காங்கு மீன்கள்
பலசிக்கும் அவன்வீசும் வலைகட்டும் கண்ணில்

★

துடுப்பாலே வலித்தந்த சிறுதோணி ஓட்டி
தடந்தோளைப் பெற்றான் அவ் வெடுப்பான காளை
வலித்தோடி வருவான்பொன் வலைமீனைக் கொண்டு
களைப்போடு சோர்வோடு கரைப்பக்கம் அண்டி.

★

மீளவரும் காதலனை எதிர்பார்த்து நிற்கும்
மீன்விழிகள் இரண்டங்கு வரவேற்றுச் சொக்கும்
கூண்டதனில் மீனள்ளி விலைக்கதனை விற்பாள்
ஈங்கவர்கள் இருவருமே உழைத்துஉயிர் பிழைப்பார்.

★

மீனவர்கள் வாழ்க்கையதில் எத்தனையோ துயரம்
ஆயிடினும் உழைப்பின்பம் காண்பதிலவர் சிகரம்
ஏழ்மையிலும் சிரிப்பவர்க்கு ஏதடியோ நரகம்
என்றுமே அவர்க்கின்பம், எதிலுமே இன்பம்.

இங்கு ஆண் பெண் என்ற வேறு ...

கணவனும், மனைவியும் ஒரு வரை ஒருவர் உண்மையாகக் காதலிப்பது அவ்விருவரும் இணைந்து இறைவனையே காதலிக்கும் புனித காதலாக வளர்கிறது. திருமணம் என்பது ஒரு தெய்வீக வாழ்க்கை நெறியாகும்.

திருமணம் செய்து கொள்ளும் இருவரும் இதயபூர்வமாக ஒருவரை ஒருவர் விரும்பித் தேர்ந்தெடுத்துக்கொள்வதுமுண்டு.

எதற்கும் மூளையை மட்டும் பயன் படுத்தித் தீர்மானம் செய்தோமானல் வேறுபாடுகள் தோன்றிக் கொண்டே இருக்கும். காரணம் மூளையில்தான் அகங்காரம் குடிகொண்டு இருக்கிறது.

இதனுல்தான் இன்பம் அளிக்கும் மூளையைப் பற்றி நாம் இருக்கிறது. இதுதான் உலக இயற்கை.

இந்த உண்மை, உயிர் இல்லாத பொருள்களிலும் காணப்படுகிறது. ஒவ்வொரு அணுவிலும் மின் அணு, மூன் அணு மன் அணு என்ற மூன்று நுண் அணுக்கள் இருக்கின்றன.

அவற்றுள் மின் அணு மற்ற இரு நுண் அணுக்களையும் காதலிக்கிறது. அதனுல் இவற்றைச் சுற்றி சுழன்று கொண்டே இருக்கிறது.

உயிர் இல்லாத பொருள் உயிர் உள்ள பொருள் எல்லாவற்றிற்கும் கவர்ச்சி இருக்கிறது. இது இன்பத்தைக் கொடுக்கும் கவர்ச்சியாகவும் இருக்கிறது. இது எங்கும் நிறைந்திருக்கும் கடவுளின் காதல் என்றே சொல்லலாம்.



தன்நலத்தை இன்னெருவருக்காக விட்டுக்கொடுக்கத் தொடங்கி விடுகிருர்கள். தன் நலம் துறப்பதுதான் வாழ்க்கை.

குப் புதிய பெயர் தோன்றுகிறது.

கமலம் கண்ணனைத் திருமணம் செய்து கொண்டவுடன்

கும் இருக்கும் வேறுபாடுதான் என்ன?

உடம்பில் இருக்கும் தோற்ற வேறுபாடுகளும் அவர்கள் அணிந்து கொள்ளும் ஆடை வேறுபாடுகளும் தவிர வேறு என்ன இருக்கிறது.

இவைகளுக்கும் அப்பால் மனதிலும், அறிவு நுட்பத்திலும், ஆன்மநேயத்திலும் ஆணும் பெண்ணும் ஒன்றுபட்டவர்களே.

உயிர் என்பது ஆணும் அல்ல. பெண்ணும் அல்ல. உயிரைத் தூய்மைப் படுத்துவதற்காகச் செயல்படுவதுதான் யோகம்.

ஆன்மீக நிலையில் நாம் உடம்பையும், மனதையும் கடந்து மேல் நிலைக்குச் செல்கிறோம்.

ஏழ்மையிலும் சிரிப்பவர்க்கு ஏதடியோ நரகம்
என்றுமே அவர்க்கின்பம், எதிலுமே இன்பம்.

இங்கு ஆண் பெண் என்ற வேறுபாடே கிடையாது.

ஒரே பொருள்தான் ஆணுகவும், பெண்ணுகவும் மலர்கிறது.

அவை ஒன்றுக்கு ஒன்று உதவுவதற்காகவே மலர்கின்றன. கூடுகின்றன.

இதுதான் வாழ்க்கை நாடகத்தின் உயிர்நாடியாகும்.

ஒரே பொருள்தான் பார்ப்பதற்கு இரண்டாகப் பிரிந்து தோன்றுகின்றது. பிறகு அதுவே ஒன்றுபடுகிறது. இதுதான் வாழ்க்கை விளையாட்டு.

நாம் எல்லாரும் ஒன்றுதான். வாழ்க்கை நாடகத்தில் பல்வேறு பாத்திரங்களைத் தாங்கி நடிக்கிறோம்.

உண்மையில் நாம் எல்லாரும் ஆன்ம நிலையில் திருமணம் ஆகியவர்களே. நம் எல்லாருக்கும் காவலராக இருப்பவர் இறைவன் ஒருவரே.

உடல் அளவில் நாம் ஆயிரக்கணக்கான கணவர்களாகவும், ஆயிரக்கணக்கான மனைவிகளாகவும் இருக்கிறோம்.

ஆன்மநேய ஒருமைப் பாட்டு

(11ஆம் பக்கம் பார்க்க)

# குருகுலக் கல்வி மூலம் இந்து தர்ம போதனை

## இந்திய புனித நகர் அரித்துவாரத்தில் வேத வித்தகர்கள் உருவாகிறுர்கள்

தங்கள் பிள்ளைகள் டாக்டராகவோ, என்ஜினியராகவோ மாற வேண்டும் என்று தான் பல பெற்றோர்கள் நினைக்கிறுர்கள்.

விரல்விட்டு எண்ணக் கூடிய சில பெற்றோர்கள் தான் தங்கள் புதல்வர்கள் இந்து மத வேதங்களில் வித்தகனுகத் திகழ வேண்டும் என்று விரும்புகிறுர்கள்.

இத்தகைய பெற்றோர்களின் ஆவலை பூர்த்தி செய்ய இந்தியாவில் ஆங்காங்கே குருகுலங்கள் உள்ளன. (வேதங்களைப் போதிக்கும் பள்ளிகள் குருகுலங்கள் என்றே அழைக்கப்படுகின்றன.)

இத்தகைய குருகுலங்களுள் இந்துக்களின் புண்ணியத் தலமான அரித்துவாரில் அமைந்துள்ள மிகப் பழம்பெரும் குருகுலம் குறிப்பிடத்தக்கது.

அரித்துவாரில் அமைந்துள்ள இந்த குருகுலத்தின் பெயர் சாரதா ஆனந்த் குருகுலம். இந்த குருகுலம் முதலில் கங்கை நதிககரையில், கங்கிரி என்ற கிராமத்தில் 1900 ஆண்டு நிறுவப்பட்டது.

1923ஆம் ஆண்டு கங்கையில் ஏற்பட்ட ஒரு வெள்ளத்தின் போது கங்கிரியில் இருந்த குருகுலம் பாதிக்கப்பட்டது. அதற்குப் பிறகுதான் அரித்துவாரில் உள்ள குருகுலம் துவங்கப்பட்டது.

ஏறத்தாழ 200 மாணவர்கள் இந்த குருகுலத்தில் தங்கி கல்வி பயில்கின்றனர். இவர்கள் பிரம்மச்சாரிகள் என்று அழைக்கப் படுகின்றுர்கள்.

மாணவர்கள் என்று அழைக்கப்படுவதில்லை. மதக் கல்வியோடு மற்ற பாடங்களும் இவர்களுக்குக் கற்பிக்கப்படுகின்றன. சமஸ்கிருதம், கணக்கு வரலாறு, விஞ்ஞான பாடங்களோடு இந்து மதம் சம்பந்தப்பட்ட பாடங்களும் இங்குள்ள மாணவர்களுக்கு கற்பிக்கப்படுகின்றன. இந்திதான் இங்கு பாடமொழி.

ஏட்டுக் கல்வியோடு உடல் நலத்திற்கு தேவைப்படும் உடற்பயிற்சிகளும் இங்கு கற்றுத் தரப்படுகின்றன. ஒழுக்கமும், கட்டுப்பாடும் உயிருக்கு மேலாக மதிக்கப்படுகின்றது.



அரித்துவாரத்திலுள்ள சாரதா ஆனந்த் குருகுலத்தில் உச்சிக் குடுமி சகிதம் வேத சாஸ்திரம் கற்கும் இந்துச் சிறுர்கள்.

அதிகாலையில் சூரியன் உதிப்பதற்குள் இந்த குருகுலம் விழித்துக் கொள்கிறது. காலை மணி நாலரை ஆனதும் இந்த குருகுலத்தின் எல்லா விளக்குகளும் எரியத் தொடங்குகின்றன. தூங்கிக் கொண்டிருக்கும் மாணவர்கள் எழுந்துகொள்கின்றனர்.

முகங்களைக் கழுவி விட்டு எல்லா மாணவர்களும் வரிசையாக நிற்கின்றனர். சற்று நேரத்தில் யோகாசன வகுப்புகள் தொடங்குகின்றன . வயது மற்றும் உடல் வாகுக்குத் தக்கபடி பலவிதமான யோகாசனங்கள் கற்றுத் தரப்படுகின்றன. இவைகளைக் கற்றுத்தரும் பொறுப்பை ஆசிரியர்களும், வயதில் பெரிய மாணவர்களும் ஏற்றுக் கொள்கின்றனர்.

ஏறத்தாழ அரை மணி நேரம் யோகாசன வகுப்புகள் நடைபெறுகின்றன. அது முடிந்ததும் கங்கையின் கிளை ஆறு ஒன்றில் குளிப்பதற்காக மாணவர்கள் அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

இந்த வேளையில் ஒவ்வொரு மாணவனும் தானே தன் துணிமணிகளை துவைத்துக் கொள்ள வேண்டும். குருகுலத்தில் தனிப்

(14 ஆம் பக்கம் பார்க்க)


அகன்ற இலைக்களைகளையும் கோரை வகைக் களைகளையும் நெற்பயிரில் கட்டுப்படுத்த பாவியுங்கள்

ரெட்ஸ்டார்

அங்லோ ஏஷியன்

எம்.சீ.பீ.ஏ.40%

தெளியுங்கள்



TEAM

புல்லின களைகள்
மொண்டி, கோழிச்சூடான்
குதிரைவால்புல்
போன்ற வற்றையும்,
அகன்ற இலை களைகளையும்,
கோரை வகை களைகளையும்
கட்டுப்படுத்தும்.

லீற்றர் 4 - ரூ. 270.00
லிற்றர் 1.5 - " 115.00
மி.லீ. 450 " 33.50

அங்லோ ஏஷியன் பேர்டிலைசர்ஸ் லிமிட்டட
சாத்ரட் பேங்க் கட்டிடம் கொழும்பு 1

# பிள்ளைச் செல்வம்

ச. முருகானந்தன்

அன்னம்மா ஆச்சியின் உடம்பு அடித்துப் போட்டது போலிருந்தது. தலையைத் தூக்க முடியாத பாரம் ஒரு புறம்; மூட்டு மூட்டாக வலி மறுபுறம்; அவள் எழுந்து நடமாட முடியாமல் படுக்கையில் கிடந்தாள்.

இப்போது சில நாட்களாக கிழவிக்கு முடிவதில்லை. வயதும் போய் விட்டது. உதவி ஒத்தாசைக்கும் அருகில் எவருமில்லை. பக்கத்து வீட்டுப் பவளம் தான் அவ்வப்போது பார்த்து ஏதாவது உதவி செய்வாள். இன்று அவளும் வரவில்லை.

ஆச்சிக்கு அடிக்கடி இருமல் வரும் சில சமயங்களில் இரண்டு மூன்று நிமிடங்கள் தொடர்ந்து இருமிக் கொண்டிருப்பாள். பெருகி வரும் சளியை அருகே இருந்த தகரக் குவளையில் துப்புவாள். எழுந்து சென்று தேநீர் வைத்துக் குடிக்கலாம் என்றாலும் முடிவதில்லை.

இப்பொழுது மறுபடியும் அந்த இருமல் அவளைத் திணறடிக்க ஆரம்பித்தது. “லொக்கு... லொக்கு” என்று இருமிய அன்னம்மா ஆச்சி, தலையைத் தூக்கித் துப்ப முடியாததால் சளிக்கட்டியை காறி விழுங்கினாள். எனினும் இருமல் நிற்கவில்லை. தொடர்ந்து இடைவிடாத இருமல்!, மூச்சு முட்ட, முளி பிதுங்கி, குடலே வெளியே வருமாப் போல் இருமினாள்.

அந்த இரவின் நிசப்தத்தையே அந்த இருமல் ஒலி கலைத்தது. சத்தம் கேட்டு விழித்துக் கொண்ட பக்கத்து வீட்டுப் பவளம் அவசரம் அவசரமாக எழுந்து வந்து, லாம்பை ஆச்சியின் படுக்கையருகே வைத்து விட்டு அவளைப் பரிவோடு நோக்கினாள்.

“என்னணை செய்யுது மாமி” ஆச்சியினருகே அமர்ந்து, அவளது நெஞ்சை நீவிவிட்டபடி கேட்டாள் பவளம். அவளது அன்பான தடவலிலும், ஆறுதலான வார்த்தைகளிலும் ஆச்சிக்கு ஆறுதலாக இருந்தது. “ஒண்டுமில்லைப் பவளம்... இருமல் கொஞ்சம் கடுவலாயிருக்கு... உடம்பும் கொதிக்கிற மாதிரியிருக்கு... இந்தச் சாமத்திலை நீயேன் எழும்பி வந்தனி பிள்ளை...” இருமிய களைப்பில் குரல் முனகி ஒலித்தது. “என்னால் உனக்குத் தான் கயிட்டம்”.

“எனக்கொண்டும் கஸ்டமில்லை... உங்களை இப்படி இருமவிட்டுட்டு நான் என்ரபாட்டிலை நித்திரை கொள்ளேலுமே? பிறகு அயலட்டையெண்டு இருந்தென்ன பிரயோசனம்?” இருமி வெளிவந்த சளியைத் துப்புவதற்காக மணல் நிரப்பிய பேணியை எடுத்து நீட்டினாள் பவளம்.
அன்னம்மா ஆச்சிக்குப் புல்லரித்தது.

“மெய்யே மாமி, இரவு ஏதும் சாப்பிட்டனீங்களே? பஞ்சியிலை பேசாமல் படுத்துமிருப்பியள். கொஞ்சம் தேத்தண்ணியெண்டாலும் போட்டுத் தரட்டே? சூடாய் குடிச்சால் சுகமாயுமிருக்கும்.

“உனக்கேன் பிள்ளை கயிட்டம்? என்ரை பிள்ளையளுக்கு இல்லாத அக்கறை... பெத்த தாயைத் தனிய விட்டுட்டு, வெளிநாடுகளிலை சிவிக்குதுகள்... ம்... அவர் சாகுமுந்தி நான் பொட்டும் பூவுமாய்ப் போயிருக்க வேணும்... காலம் வரயில்லை. இடந்து அழுந்திறன்... அந்த மனிசன் உசிரோட இருந்தால் என்னை இப்படி கயிட்டப்பட விடுமே? மகராசனைப் போய்ச் சேர்ந்திட்டுது”

ஆச்சியின் மறுப்பைப் பொருட்படுத்தாமல் பவளம் அடுப்படிக்குச் சென்று தேநீர் தயாரித்துக் கொண்டு வந்தாள்.

“மாமி... இதைக் குடிச்சிட்டுக் கிடவுங்கோவன்” ஆச்சியை அணைத்து எழுப்பி தேநீரைக் கொடுத்தாள் பவளம். மெல்ல மெல்ல மிடறிட்டு விழுங்கிய அன்னம்மா ஆச்சிக்கு சிறிது தெம்பு ஏற்படுவது போலிருந்தது. கூடவே வயிற்றுப் புகைச்சலும் இருமலும் அடங்கி வந்தது.

“பிள்ளை பவளம்... பக்கத்திலை நீ இருக்கிறதால எனக்கு எவ்வளவோ ஆறுதல் கண்டியோ... ம்... உனக்கென்ன கைமாறு செய்யப் போறனோ?

“எனக்கொண்டும் கஸ்டமில்லை ஆச்சி... விருப்பமெண்டால் பிள்ளையளுக்கு எழுதிக் கூப்பிடுங்கோவன். மேள் வருவ தானே?”

“பிள்ளையள் எல்லாருக்கும் எத்தினையோ கடிதம் போட்டிட்டன். அவை வாற நோக்கத்தைக் காணன்... ம்...அதுகளைப் பெத்து வளர்த்து ஆளாக்க நான்பட்ட கயிட்டம் கொஞ்ச நஞ்சமே... நன்றி கெட்ட பிள்ளையள்” ஆச்சி அங்கலாய்த்தாள்.



“நான் இருக்கிறன் மாமி... நீங்கள் ஒண்டுக்கும் கவலைப்படாதையுங்கோ” பவளம் அன்போடு கூறுகையில் அன்னம்மா ஆச்சியின் மனம் நிறைந்தது.

“யோசிக்காமல் படுங்கோ மாமி” பவளம் போர்வையை எடுத்துப் போர்த்து விட்டாள்.

இருமி இருமி நெஞ்சு நொந்த களைப்பில் ஆச்சி சிறிது நேரத்தில் கண்ணயர்ந்தாள். சளியோடு சேர்ந்த குறட்டை ஒலி “கொர்... கொர்” என்று சத்தம் எழுப்பிக் கொண்டிருந்தது.

அன்னம்மா ஆச்சியின் மெலிந்து நொடிந்த தோற்றத்தைப் பார்க்கையில் பவளத்திற்குப் பாவமாக இருந்தது. பவளத்திற்கு அன்னம்மா ஆச்சி ஒரு வழியில் மாமி முறையானவள். அடுத்தடுத்த வீடு.

அன்னம்மா ஆச்சியின் குடும்பம் அந்தநாளிலிருந்தே செழிப்போடும் வாழ்ந்த குடும்பம். பெரிய நாற்சார் கல்வீடு. முற்றத்தில் பூந்தோட்டம், கிணற்றடியைச் சுற்றி வாழைத் தோட்டம். பின்வளவில் தென்னை மரங்கள். எப்படிப் பார்த்தாலும் பத்துப் பன்னிரண்டு பரப்புத் தேறும்.

அருகேயிருந்த பவளத்தின் காணி முக்கா பரப்புக் கூடத் தேறுது. அதற்குள்ளே மண்ணால் அமைக்கப்பட்ட குடிசை வீடு.

பவளத்தின் அம்மாவான செல்லாச்சி, அன்னம்மா ஆச்சிக்கு மச்சாள் முறையானவள். வறுமையிலே வாழ்ந்த செல்லாச்சியை அந்த நாளில் அன்னம்மா ஆச்சிக்குப் பிடிப்பதில்லை. தமது அந்தஸ்திற்குச் சமனாக இல்லாததால் ஒதுக்கியே வைத்திருந்தாள்.

செல்லாச்சியின் குடும்பம் வறுமையில் தவித்துக் கொண்டிருந்தபோது அன்னம்மாவின் குடும்பம் செல்லச் செழிப்போடு வாழ்ந்து வந்த கால கட்டத்தில் அன்னம்மா இவர்களுக்குச் சிறு உதவி தானும் செய்யவில்லை.

அன்னம்மா ஆச்சியின் மூத்தவன் மனோகரன் பவளத்தை விரும்பியபோது, அன்னம்மா ஆச்சி பத்திரகாளியாக மாறி அவர்களைப் பிரித்து வைத்ததோடு, மகனை லண்டனுக்குப் படிக்க அனுப்பி வைத்தாள்.

பவளத்திடம் ஆயிரம் சத்தியங்கள் செய்து விட்டுப் போன மனோகரன் ஐந்து வருடங்களுக்குப் பின் ஊர் திரும்பிய மனோகரன் வெள்ளைக்காரியை காதலித்துக் கைப்பிடித்துக் கூட்டி வந்தபோது பவளம் நொருங்கிப் போனாள்.

அன்னம்மா ஆச்சி தனது இரண்டாவது மகன் இந்திரனின் விவகாரத்தில் மிகவும் அவதானமாக இருந்து தான் விரும்பியபடியே பெரிய பணக்கார இடத்தில் கொழுத்த சீதனத்தோடு செய்து வைத்தாள். கூடவே மகளுக்கும் ஒரு வைத்திய அதிகாரியைச் செய்து வைத்தாள்.

அந்த நாளில் அன்னம்மாவைப் பார்த்து அனைவரும் பாராட்டினர்- “உனக்கென்ன குறைச்சல், ஒருத்தன் இங்கிலாந்தில, மற்றவன் அமெரிக்காவில, மகள் கனடாவில...”- மற்றவர்கள் பாராட்டும் போது அன்னம்மா ஆச்சி பூரித்துப் போவாள்.

மனமொடிந்து போயிருந்த பவளம் மனம் தேறி தோட்டக்காரனான கந்தசாமியைக் கைப்பிடித்தாள். எது எப்படியோ அவள் வறுமையிலும் செழுமையோடு மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தாள்.

★

காலச் சக்கரம் சுழன்றது.

அன்னம்மா ஆச்சிக்கு வயோதிபமும் வந்துவிட்டது. அவளது கணவன் சண்முகம் அருகில் இருந்ததால் அவள் மகிழ்ச்சியோடு வாழ்ந்து வந்தாள். ஆனால் மூன்று வருடங்களுக்கு முன்னர் அவரும் மரணமாகி விட, அன்னம்மா ஆச்சி தனிமரமானாள்.

பணத்திற்குக் குறைவில்லை. வீடு நிரம்ப பொருட்களும் இருந்தன. ஆனால் துணை தான் இல்லை. சில நாட்கள் ஒரு வேலைக்காரியை வைத்திருந்தாள் அவளும் நேர்சீர் இல்லை. அதனால் அவளையும் நிறுத்தி விட்டாள் ஆச்சி.

தான் தனியனாகி விட்டதை எண்ணும் போது ஆச்சிக்கு நெஞ்சை அடைக்கும். தகப்பனின் செத்த வீட்டிற்கு வந்து போன பிள்ளைகள் அப்புறம் வரவேயில்லை. இடைக்கிடை பணமும் படமும் அனுப்புவதோடு சரி. கூடவே இரண்டு வரியில் ஒரு கடிதம்! அன்னம்மா ஆச்சி அழுவாள்.

கடைசிக் காலத்தை ஒரு பிள்ளையோடு கழிக்க வேண்டுமென்பது அவளது அவா. கடிதம் எழுதிக் கேட்ட பொழுது ஒருவர் மற்றவரைக் காட்டித் தட்டிக் கழித்தனர். ஆச்சிக்குப் பிள்ளைகள் மீதிருந்த நம்பிக்கை போய் விட்டது.

இப்போதெல்லாம் ஆச்சிக்குத் துணை பவளம்தான். இருந்தும் பெற்ற பிள்ளைகளின் அண்மை இல்லையே என்பதில் மிகுந்த கவலை. இப்போதெல்லாம் பவளத்தில் நல்ல பற்றுதல். “என்ர மூத்தவனை இவளுக்குக் கட்டி வைத்திருக்கலாம்”- காலம் கடந்த ஞானத்தில் ஏங்கி நெடுமூச்செறிவாள்.

பவளம் மறுநாள் காலை அன்னம்மா ஆச்சியைப் பார்க்கச் சென்றபோது, ஆச்சியின் உடல் அனலாகக் கொதித்தது. கட்டாயப்படுத்தி ஆஸ்பத்திரியில் சேர்த்து விட்டுப் பிள்ளைகளுடன் தொடர்பு கொண்டாள்.

“வருத்தத்திற்கு ஒருக்கால், செத்த வீட்டுக்கு ஒருக்கால் என்று இரண்டு தடவைகள் வர முடியாது முடிஞ்சவுடனே டெலக்ஸ் செய்தி அனுப்பு”

## சிறுகதை

என்று கூறினார்கள். ஆச்சியின் மனம் புண்படுமே என்று பவளம் இதை அவளிடம் கூறவில்லை.

மறுநாள் பவளம் ஆஸ்பத்திரிக்குப் போனபோது ஆச்சி “லொக்கு லொக்கு” என்று இருமிக் கொண்டிருந்தாள். “மாமி... தோடம்பழத் தண்ணி கரைச்சுத் தாறன்” என்று பவளம் சொன்னதும் ஆச்சி வேண்டாம் என மறுத்தாள் பவளம் அதைப்பொருட் படுத்தாமல் கரைத்தாள்.

“பவளம்... இதிலை இரு பிள்ளை... நான் சீரும் சிறப்புமாக வளர்த்த பிள்ளைகள் செய்ய வேண்டியதை நீ செய்

(14 ஆம் பக்கம் பார்க்க)

“ஐயையோ! என்ன

அதே வேளையில் நாமும் பணக் காரர்களாக மாறி, மற்றப்

விரும்பாவிட்டால் நாம் ஒன் றும் செய்ய முடியாது. அவளு

"எனக்கொண்டும் கஸ்ட மில்லே... உங்களை இப்படி இரும விட்டுட்டு நான் என்றபாட்டிலே நித்திரை கொள்ளேலுமே?

"எனக்கொண்டும் கஸ்ட மில்லே ஆச்சி... விருப்பமெண் டால் பிள்ளையளுக்கு எழுதிக்

களைப்பில் ஆச்சி சிறிது நேரத் தில் கண்ணயர்ந்தாள். சனி யோடு சேர்ந்த குறட்டை ஒலி

காணி முக்கா பரப்புக் கூடத் தேறுது. அதற்குள்ளே மண்ணால் அமைக்கப்பட்ட குடிசை வீடு.

தலோடு, மகனை லண்டனுக்குப் படிக்க அனுப்பி வைத்தாள்.

ஒரு கடிதம்! அன்னம்மா ஆச்சி அழுவாள்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

# கரடி இளவரசன்

மாஸ்டர் சிவலிங்கம்

முன்னொரு காலத்திலே ஏழை விறகுவெட்டி ஒருவன் வாழ்ந்து வந்தான். அடர்ந்த காட்டின் மத்தியிலே வாழ்ந்து வந்த அவனைப் போலவே அவ னுடைய மனைவியும் கடுமை யாக உழைத்து வந்தாள்.

ஏழைகளான அவர்களுக்கு எட்டுக் குழந்தைகள் இருந்த னர். அந்த எட்டுக் குழந்தை கள் மீதும் அவர்கள் அன்பைப் பொழிந்து வந்தனர்.

அவர்களின் இளைய மகள் எறீன்டேல் மிகவும் அழகான வள். "பேரழகி" என்றே அவளை அனைவரும் அழைத்து வந்த னர்.

ஒரு நாள் மாலை வேளையில் எட்டுப் பிள்ளைகளும் ஆடிப் பாடி விளையாடிக் கொண்டிருந் தனர். அந்தக் காட்சியைப் பார்த்து விறகு வெட்டியும் அவனுடைய மனைவியும் ரசித் துக் கொண்டிருந்தனர்.

பிள்ளைகள் மகிழ்ச்சியுடன் விளையாடுவதைப் பார்த்துக் கொண்டிருந்த தாயின் முகத் தில் திடீரென்று சோகம் கப்பி யது. அவளுடைய கண்களி லிருந்து சொட்டுச் சொட்டாக நீர் வடிந்து கொண்டிருந்தது.

அவளுடைய நிலையைக் கண்டதும் பதறிப் போனான் விறகுவெட்டி. ஒன்றும் புரி யாது சிறிது நேரம் அவளையே பார்த்தபடி இருந்தான். பின்பு அவளுடைய கண்ணீரைத் துடைத்து விட்டான்.

"பெண்ணே! உனக்கு என்ன நடந்தது?, ஏன் இப்படி வேதனைக் கண்ணீர் சிந்திக் கொண்டிருக்கிறாய்...?" என்று அன்புடன் கேட்டான்.

"நமது குழந்தைகள் எல் லாம் மிகவும் அழகானவர் கள்... இராஜ குடும்பத்துப் பிள்ளைகளைப் போல காணப்படு கிறார்கள்... ஆனால் அவர்கள் ஆசைப்படும் பொருட்களை யெல்லாம் வாங்கிக் கொடுக்க முடியாத ஏழைகளாக இருக்கி றோமே... நாம் செல்வந்தர்க ளாக இருந்தால் நமது மகள் பேரழகி எறீன்டேலை இளவர சன் ஒருவனே திருமணம் செய்து கொள்வான். என்ன செய்வது... நாம் ஏழைகளா கப் பிறந்து விட்டோமே...... அதை நினைக்கத்தான் எனக்கு வருத்தமாக இருக்கிறது" என்று வேதனையோடு கூறினாள் அவள்.

"சரி, சரி கவலையை விடு... நல்ல காலம் வந்தால் எல்லாம் சிறப்பாக நடக்கும். கடவுள் கருணை காட்டுவார்" என்று ஆறுதல் கூறினான் விறகு வெட்டி.

கணவனின் ஆறுதல் வார்த் தைகளைக் கேட்டதும் கண்ணீ ரைத் துடைத்துவிட்டு நிம்மதி யாக மூச்சு விட்டாள் அந்த ஏழைப்பெண். அன்று இரவு...!

விறகு வெட்டியின் குடி சைக் கதவில் யாரோ மெது வாகத் தட்டும் ஓசை கேட் டது.

"யாரோ கதவில் தட்டுகிறார் கள்... போய்ப் பாருங்கள்" என்றாள் விறகுவெட்டியின் மனைவி.

விறகு வெட்டி மெதுவாகச் சென்று கதவைத் திறந்து பார்த்தான். அங்கே...

வெள்ளை நிறக் கரடி ஒன்று காணப்பட்டது. வைத்த கண் வாங்காது அந்த அதிசயக் கரடியையே பார்த்தபடி நின் றான் விறகு வெட்டி.

"என்ன இப்படி பார்க்கி றாய்...? நான்தான் உனது வீட்டுக் கதவிலே தட்டினேன்... இப்படி அருகில் வா, உன்னிடம் இரகசியமாக ஒரு விசயம் பேச வேண்டும்" என்று மெதுவா கக் கூறியது அந்த வெள்ளைக் கரடி.

முதலில் சற்றுப் பயந்த விறகுவெட்டி. பின்னர் தனது மனதைத் திடப்படுத்திக் கொண்டு அதன் அருகில் சென் றான்.

விறகுவெட்டியின் காதிலே ஏதோ இரகசியச் செய்தி ஒன் றைக் கூறிவிட்டு மாயமாக மறைந்து விட்டது அந்த மர் மக் கரடி.

கரடி கூறிய செய்தியைக் கேட்டதும் அதிர்ச்சி அடைந்து விட்டான் விறகு வெட்டி. சிறிது நேரம் சிலை போல நின்ற அவன், பின்னர் கதவைப் பூட்டி விட்டு உள்ளே சென்றான்.

விறகு வெட்டியின் நிலையைக் கண்டதும் பதறிப் போனாள் அவனுடைய மனைவி. ஓடிவந்து அவனுடைய கையைப் பற்றி னாள். அவனுடைய கை இலே சாக நடுங்கிக் கொண்டிருந் தது.

"ஐயையோ! என்ன இது...? உங்களுக்கு என்ன நடந்தது...? கதவிலே தட்டி உங்களுடன் பேசியது யார்...? மறைக்காமல் உண்மையைச் சொல்லுங்கள்" என்று பதறி னாள் விறகுவெட்டியின் மனைவி.

"வெள்ளைக் கரடி ஒன்று தான் கதவிலே தட்டியது... அதனுடனேதான் நான் பேசி னேன். அந்தக் கரடி அதிசய சக்தி நிறைந்ததாம்... தான் நினைத்தால் நம்மைப் பணக்கா ரர்களாக ஆக்கிவிடுமாம்..."

விறகுவெட்டி பேச்சை முடிப் பதற்குள் அவசரமாகக் குறுக் கிட்டாள் அவனுடைய மனைவி.

"ஆஹா...! அப்படியா...? நீங்கள் என்ன சொன்னீர் கள்...?" என்று கேட்டபடி சந்தோசத்துடன் துள்ளிக் குதித்தாள் அவள்.

"பெண்ணே அவசரப்ப டாதே... நான் சொல்வதை முழுதும் கேள்... அது நம் மைப் பணக்காரர்களாக ஆக்கி விட்டால், அதற்குப் பிரதி உபகாரமாக நமது இளைய மகள் பேரழகி எறீன் டேலை அதற்குத் திருமணம் செய்து தரவேண்டுமாம்... பேரழகியை சிறப்புடன் பேணிக் காக்குமாம்...

"இந்த விசித்திர நிபந்தனை யைக் கேட்டதும், நான் அதிர் ச்சி அடைந்து விட்டேன். என்ன சொல்வதென்றே எனக் குப் புரியவில்லை. போய்விட்டு ஒரு வாரத்தின் பின்பு வா. முடிவு சொல்கிறேன் என்று கூறி அனுப்பி விட்டேன்" என்று தட்டுத்தடுமாறியபடி கூறி முடித்தான் விறகுவெட்டி.

சிறிது நேரம் ஆழ்ந்த சிந்த னையில் ஆழ்ந்த பின்பு மெது வாகப் பேச்சை ஆரம்பித்தாள் விறகுவெட்டியின் மனைவி.

"அன்பரே! அந்த வெள்ளைக் கரடி சாதாரண கரடியாக இருக்க முடியாது. அந்த அதி சயக் கரடிக்கு நமது இளைய மகள் எறீன்டேலைத் திருமணம் செய்து கொடுத்தால் அவள் இளவரசி போல இன்பமாக இருப்பாள் என்பது எனது நம்பிக்கை.

அதே வேளையில் நாமும் பணக் காரர்களாக மாறி, மற்றப் பிள்ளைகளுக்கும் நல்ல வாழ்வை அளிக்கலாம்..." என்று கூறி னாள் அவள்.

"பெண்ணே! அவசரப் பட்டு நாம் திடீர் முடிவுக்கு வரக் கூடாது. எந்த விஷயத் தையும் ஆர்த்திர ஆராய்ந்த பின்புதான் முடிவு செய்ய வேண் டும். போய்ப் படுத்துக் கொள்... நாளை முடிவு செய் வோம்" என்றான் விறகுவெட்டி.

அடுத்தநாள் பல தடவைகள் விறகு வெட்டியும் அவனுடைய மனைவியும் கலந்துரையாடி னர்.

"வெள்ளைக் கரடியைத் திரு மணம் செய்வதற்கு பேரழகி விரும்பாவிட்டால் நாம் ஒன் றும் செய்ய முடியாது. அவளு டைய சம்மதத்தைப் பெறு வது உனது பொறுப்பு" என் றான் விறகுவெட்டி.

"அவளுடைய சம்மதத்தை நான் ஏற்கனவே பெற்று விட் டேன்... நமது குடும்ப நன் மைக்காக அவள் என்ன செய் யவும் தயாராக இருக்கிறாள்" என்றாள் பேரழகியின் தாய்.

## அமெரிக்க நாட்டுக் கதை

நாட்கள் நகர்ந்தன. ஒரு வாரத்தின் பின்பு, ஒரு நாள் இரவு......!

அந்த அதிசய வெள்ளைக் கரடி வந்து, விறகுவெட்டியின் வீட்டுக் கதவிலே பலமாகத் தட்டிக் கொண்டிருந்தது.

(தொடரும்)




## சிறுவர் சிந்தாமணி




தம்பி, தங்கைகளே! மேலே உள்ள கட்டத்தில் ஒரு இயற்கைக் காட்சி வரையப்பட்டிருக்கிறது. அப் படத்துக்கு அழகூட்டும் விதத்தில் வர்ணம் தீட்டுங்கள் பார்க்கலாம்.

# அந்தோனியார் ஆலயத்தின்

## 150 ஆம் ஆண்டு ஜூபிலி விழா



கொச்சிக்கடை அந்தோ னியார் ஆலயம்

### கொச்சிக்கடை பதியில் கோலாகல வைபவம்

கொழும்பு கொச்சிக்கடையில் அற்புதவரத்தரான அர்ச். அந்தோனியாருக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ள தேவாலயம் ஆசிர்வதிக்கப்பட்ட 150 ஆவது ஆண்டு பூர்த்தி விழா இப்போது சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. எனவே, இம் முறை இந்த ஆலயத்தில் இடம்பெறும் வருடாந்த அந்தோனியார் பெருநாள் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த, விமரிசையான திருவிழாவாக அமைகிறது.

1828 ஆம் ஆண்டு பெருப்பிக்கப்பட்ட அர்ச். அந்தோனியார் ஆலயத்தை 1834 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 1 ஆம் தேதி விக்கார் ஜெனரலாக இருந்த அதிவண பிதா கட்டானே அந்தோனியோ ஆசிர்வதித்தார்.

இந்த ஆலயத்தின் 150 ஆவது ஆண்டு ஜூபிலி விழாவும், வருடாந்த திருவிழாவும் இம்மாதம் மூன்றும் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின. எதிர்வரும் 12ஆம் திகதி மாலை ஆராதனை, மறுநாள் 13 ஆம் திகதி திருவிழாப் பாடற் பூசை என்பவற்றுடன் கொண்டாட்டங்கள் உச்சக் கட்டத்தை அடையும்.

#### கோடி அற்புதர்

கோடி அற்புதரான அர்ச். அந்தோனியாரின் திருவிழா இம்மாதம் 13 ஆம் திகதி உலகெங்கும் உள்ள கத்தோலிக்க கிறிஸ்தவர்களால் கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது. செபதபங்கள், பூசைத் தியானங்கள், கீர்த்தனைகள் என்பன மூலம் அனைவரும் இப் பொன்னுளிலே பதுவைப் பதியரான புனித அந்தோனியாரைப் போற்றித் துதிப்பதிலே இன்பம் காண்பர்.

அன்பே உருவான புனித அந்தோனியார் தம்மிடம் வரும் அனைவரையும் ஆதரித்து, அருள் மழை பொழிந்து காக்கத் தவறுவதில்லை.

அனைவரும் போற்றும் அர்ச். அந்தோனியாரின் வாழ்க்கை வரலாறு அற்புதங்கள் நிறைந்ததாக இருக்கிறது.

தேவதாயார் பரலோகத்துக்கு ஆரோகணமான திருநாளன்று பிறந்தவர் அர்ச். அந்தோனியார். ஆம்! 1195 ஆகஸ்ட் 15 ஆம் திகதி லிஸ்பன் நகரில் அர்ச். அந்தோனியார் பிறந்தார். ஞானஸ்ஞானத்தின் போது இவருக்குப் பெர்தினந்து என்ற பெயர் சூட்டப்பட்டது.

அமல அன்னையின் மீது அளவற்ற பக்தி கொண்டிருந்த அந்தோனியாரின் இளம் உள்ளத்திலே, தேவனுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்ற ஆவல் பிறந்து மேலோங்கி வளர்ந்தது.

தமது ஆசையை நிறைவேற்றிக் கொள்வதற்காக, லிஸ்பனில் அர்ச். அகுஸ்தினுர் சபையில் சேர்ந்து தபசியான அந்தோனியார், அங்கிருந்து கொயிம்பரா என்ற இடத்தில் உள்ள சிலுவை மடத்துக்கு அனுப்பப்பட்டார்.

#### அந்தோனி

ஒருநாள் மாலைப் பொழுதில், சிலுவை மடத்தை நோக்கி வந்து கொண்டிருந்த பிரமாண்டமான ஊர்வலம் ஒன்றை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார் அந்தோனியார்.



பக்தர் குறை தீர்க்கும் அந்தோனியார்

1220 ஜனவரி 16 ஆம் திகதி மொரோக்கோவில் வேத சாட்சிகளான பிரான்சிஸ்கன் சந்நியாசிகளுடைய சரீரங்களை நல்லடக்கம் செய்யப்படுவதற்காக ஊர்வலத்தில் கொண்டு வரப்பட்டன. இந்த ஊர்வலத்தைக் கண்டு அந்தோனியாரின் நெஞ்சம் நெகிழ்ந்தது.

"நானும் ஏன் ஒரு வேத சாட்சியாகக் கூடாது?" என்ற கேள்வியை அவருடைய உள்ளத்திலே கிளப்பி விட்டது இந்த நிகழ்ச்சி. பலன்: அந்தோனியார் உடனே தமது சிரேஷ்டரின் அனுமதி பெற்று, மொரோக்கோ சென்று, பிரான்சிஸ்கன் சபைச் சந்நியாசிகளுள் ஒருவராகி, கபில அங்கியும் இடைக் கயிறும் அணிந்து கொண்டார்.

**— மரியநேசன் —**

பெர்தினந்து என்ற பெயரால் அழைக்கப்பட்டு வந்த இவருக்குப் பிரான்சிஸ்கன் சபையில் தான், "அந்தோனி" என்ற புகழ் மிக்க நாமம் சூட்டப்பட்டது. நாவன்மை மிக்கவராகத் திகழ்ந்து — சகலரின் பாராட்டையும் பெற்ற அந்தோனியார் வேத சாஸ்திர அறிவிலும், ஞானத்திலும், கல்வித் திறனிலும் சிறந்து விளங்கினுர்.

வேத வாக்கியங்களின் உண்மைக் கருத்தைத் தெளிவாக விளக்குவதில் அந்தோனியாருக்கு நிகர் அந்தோனியாரே தான் என்று கூற வேண்டும்.

இவை யாவையும் கருத்தில் கொண்ட பரிசுத்த பாப்பரசர், 9ஆம் கிரகோரியார், "வேத சாஸ்திர விற்பன்னர் பிதா" என்று அந்தோனியாரை அழைக்கலானுர்.

#### புதுமைகள்

தமது வாழ்நாளிலே அர்ச். அந்தோனியார் புரிந்துள்ள புதுமைகள் கணக்கில் அடங்கா. இப்படியாக எண்ணிறந்த அற்புதங்களைப் புரிந்து, "அற்புத வரத்தர்" என்று புகழ் நாமம் பெற்ற அர்ச். அந்தோனியார், "சுவிசேஷத்தின் பெட்டகம்" என்றும், "சத்திய வேத சம்மட்டி" என்றும் அன்பாக அழைக்கப்பட்டார்.

கடுமையாக நோய்வாய்ப்பட்டு, பதுவை நகரில் தேவ தாயாரின் பேரால் அமைந்த ஒரு மடத்தில் தங்கியிருந்த அந்தோனியார் 1231 ஜூன் 13ஆம் திகதி மரணமானுர். "நான் ஆண்டவராகிய சர்வேசுரனைத் தரிசிக்கிறேன்" என்று கூறி அவர் தமது இறுதி மூச்சை விட்டார்.

அர்ச். அந்தோனியார் உயிருடன் இருக்கும் போதே அர்ச்சிய சிஷ்டராகக் கொண்டாடப்பட்டார். வாழ்நாளில் செய்ததைப் போலவே மரித்த பின்னரும் அளவற்ற அற்புதங்களைப் புரிந்ததால் அந்தோனியார் மரித்து ஒரு வருட காலத்திலேயே பரிசுத்த திருச்சபை அவருக்கு அர்ச்சிய சிஷ்டர் பட்டம் சூட்டியது.

அந்தோனியார் மரித்து 32 வருடங்களின் பின்னர் அவரது கல்லறை திறக்கப்பட்ட போது இயற்கை நியதிப்படி சரீரம் மண்ணோடு மண்ணுகிப் போயிருக்க, அவருடைய நாக்கு மட்டும் அழியாமல் உயிருள்ள நாவைப் போல் அப்படியே கல்லறையில் காணப்பட்டது.

அர்ச். அந்தோனியார் மரித்து 753 ஆண்டுகள் ஆகியும் இன்று அவர் நம் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறுர். அண்டி வரும் அனைவரையும் அவர் ஆதரிக்கிறுர்.

இந்நாட்களில் கொச்சிக்கடை தேவாலயத்தில் அலை மோதும் பக்தர்களின் கூட்டம் அர்ச். அந்தோனியார் பேரில் மக்கள் வைத்திருக்கும் அன்புக்கும் விசுவாசத்துக்கும் சான்று பகர்வதாக அமைந்துள்ளது. கிறிஸ்தவர்கள் மட்டுமன்றிச் சகல மதத்தவர்களும் சகோதரர் போல் ஒன்றுபட்டு ஆயிரக்கணக்கில் கூடி அர்ச். அந்தோனியாரை அண்டிச் சென்று, ஏகோபித்த குரலில் துதி பாடி மகிழ்கின்றனர்.

## திருமணம் என்பது ஒரு தெய்வீக....

# சேரும் நாள் எந்நாள்?

— நிலாதமிழின்தாசன் —

மாமா வீட்டு முற்றத்தின்
மாவில் கனிகள் மிகவுண்டு
ஆமா! அந்த அடிநிழலில்
ஆடித்திரியும் கனி தன்னை
"பாமா" என்று பகர்கின்றார்
பாவம் அதனைக் கனியென்கார்.

*

சேலையுடுத்த அக்கனி யோர்
செம்மாங் கனியே! யானறிவேன்
பாலையொத்த பல்வரிசை!
பவளத் துண்டு அதரங்கள்!
வேலையொத்த விழி கொண்டே
வீழ்த்து மென்னை அக்கனிதான்.

*

மஞ்சக் குழலோ மழையிருட்டு
மயிலின் சாயல் மணிக்கழுத்து
நெஞ்சத் திரட்சி மலைமுகடு
நீரின் கமலம் முகவழகு
கொஞ்சிப் பேசும் கனியவளைக்
கோதும் அணில்யா னவளறிவாள்.

*

கண்டா லென்னைக் கண்சிமிட்டும்
கனிவாய் மெல்லத் தான்சிரிக்கும்
கண்டாய்த் தேனாய் உளஞ்சுவைக்கும்
காதல் மழையில் உயிர்குளிக்கும்
செண்டாய் மலராய் மிளிர்வாளைச்
சேரும் நாளும் எந்நாளோ?!

(இ..ம் பக்கத் தொடர்ச்சி)

...நிலையில் நாம் திருமண மானவர்களே. இந்த ஆன்மநேய உணர்வை நாம் பெறும்போது இந்த உலகம் முழுவதும் நமக்கு உரிமை ஆகிவிடுகிறது.

கணவனோ மனைவியோ ஆண் டவனுக்குத் தம்மை அர்ப் பணம் செய்து கொண்டாலும் ஒருவர் மற்றவருக்கு ஆற்ற வேண்டிய கடமைகளில் இருந்து தவறக்கூடாது.

கணவன் மனைவியிடத்திலும், மனைவி கணவன் இடத்திலும் இறைவனைக் காணவேண்டும். இதுதான் இருவரும் அன்பாக வாழுவதற்கு உரிய வழியா கும்.

கணவன் மனைவியிடத்திலும், மனைவி கணவன் இடத்திலும் இறைவனைக் காணும் உயர்ந்த உணர்வைப் பெறத் தவறிவிட் டாலும், கணவனை மனைவி இடத்திலும், மனைவியை கண வன் இடத்திலும் கடவுள்தான் ஒப்படைத்திருக்கிறார் என்ற உண்மையையாவது புரிந்து கொள்ள வேண்டும்.

கணவன் மனைவியை மதிக்க வேண்டும். மனைவி கணவனை மதிக்கவேண்டும். இதன் மூல மாகவே ஒருவர் மற்றவரின் அன்பையும் ஆதரவையும் பெற முடியும்.

கணவன் மனைவி இருவரும் அவரவர் பொறுப்பை உணர் ந்து அதை நிறைவேற்ற வேண் டும். அதே சமயத்தில் ஒருவர் மற்றவர்க்குப் பரிபூரண சுதந் திரத்தையும் கொடுக்கவேண் டும்.

கட்டாயப்படுத்தி எதை யும் பெற முயலக்கூடாது. அப்படிச் செய்தால் அவர்க ளுடைய அதிருப்தியையும், எதிர்ப்பையும் அடையும்படி நேரிடும்.

நல்ல கணவனாகவும், நல்ல மனைவியுமாக ஒருவருக்கு ஒரு வர் உதவி செய்து கொண்டு வாழவேண்டும்.

கணவன் தன் மனைவியிடம் மிகுந்த அன்புடனும் பரிவுட னும் நடந்து கொண்டால் மனைவியும் தன் கணவனிடம் அப்படியே நடந்துகொள்வாள்.

திருமணத்தில் சில பிரச்சினை கள் உண்டாகத்தான் செய்யும். இந்தப் பிரச்சினைகளே வாழ்க் கையில் ஊக்கத்தையும், உற் சாகத்தையும் கொடுக்கும்.

ஆனால் அந்தப் பிரச்சினைகளை விரைவில் பேசித் தீர்த்துக் கொள்ளவேண்டு.

கணவன் மனைவிக்குள் ஊடல் ஏற்படலாம். ஆனால் அது ஒரு வருக்கு ஒருவர் துன்பம் தரும் ஊடலாக வளரக் கூடாது.

கணவன் மனைவி இருவரிடத்தி லுமே தவறுகள் ஏற்படுவது இயற்கை. அது அவ்வப்போது தீர்ந்து விடவேண்டும். தீர்க்கப் படவேண்டும். வளரவிடக் கூடாது.

மனைவியின் தவறுகள் இருபது பங்கு என்று வைத் துக்கொள்வோம். அதனால் கணவனின் தவறுகள் எண்பது பங்காக உயர்ந்துவிடக் கூடாது.

இப்படிப்பட்ட உணர்வு ஏற்பட்டால் ஒருவர் மீது ஒரு வருக்கு நம்பிக்கை இல்லாமல் போய்விடும்.

"அவர் ஏன் தன் தவறை முதலில் உணரக்கூடாது" என்று மனைவியோ "அவள் ஏன் தன் தவறை முதலில் உணரக் கூடாது" என்று கணவனோ கவுரவம் பார்க்கக்கூடாது.

மன அமைதியுடன் இருக்க வேண்டுமானால் நம்முடைய குற்றத்தை நாம் தைரியமாக ஏற்றுக் கொள்ளவேண்டும்.

"நான் என்னுடைய முரட் டுத் தனத்தினால் தங்கள் மன தைப் புண்படுத்தி விட்டேன். அதற்காக வருந்துகிறேன் என்னை மன்னித்துவிடுங்கள்" என்று ஒருவரை ஒருவர் கேட் டுக்கொள்ளவேண்டும்.

இது இரண்டு கைகளும் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து இனிய ஒலி எழுப்புவது போன் றதாகும்.

இரு கைகளில் ஒன்று மற் றொன்றிடம் மெதுவாக அணு கலாம். இன்னொருகை அடுத்த கையிடம் விரைவாக அணுக லாம்.

"நான் இந்த இடத்தைவிட்டு நகரமாட்டேன்! அடுத்த கைதான் என்னிடம் வந்து மோதி ஒலி எழுப்பவேண்டும்" என்று ஒரு கை சொல்லலாம்.

"நீ ஏன் முன்னுக்கு வரக் கூடாது? இது மிகவும் சுலபம் ஆயிற்றே. "நின்ற இடத்தில் தான் நிற்பேன்" என்று ஏன் [illegible] வேண்டும்" என்று இன்னொரு கை சொல்ல லாம்.

இரண்டு கைகளும் ஆணவத் துடன் செயல்பட்டால் ஒன்றை ஒன்று கொடூரமாகத் தாக்கிக் கொள்ளுமே தவிர, அவற்றால் இனிய ஒலியை எழுப்பமுடி யாது.

இதைப்போலத்தான் கண வன் மனைவி நிலையும் ஆகும். இருவரில் ஒருவர் முதலில் தன் அகங்காரத்தை விடவேண்டும். அமைதி பெறவேண்டும். "நான் என்ன பெரிய தவறு செய்து விட்டேன் தணிந்துபோக" என்று அசட்டுக் கவுரவம் பார்க்காமல் தணிந்து போய் விட வேண்டும்.

அந்த சமயத்தில் மற்றவர் அதை ஏற்றுக்கொள்ள முடி யாமலும் இருக்கலாம்.

அதைப்பற்றி கவலைப்பட வேண்டியதில்லை. அந்தச் சம யத்தில் ஒருவர் முன்னால் ஒருவர் நிற்காமல் அந்த இடத்தை விட்டு மௌனமாக வந்துவிட வேண்டும்.

மனைவி சென்றவுடன் கண வன் சிந்திக்கத் தொடங்கிவிடு வான்.

"இது என்ன? நான் எவ் வளவு முரட்டுத்தனமாக நடந்து கொண்டாலும் அவள் அதைப் பொருட்படுத்தாமல் அமைதியாகப் போய்விடுகி றாளே! என்மீது அன்பு காட்டு கிறாளே! இனிமேல் நான் அவ ளிடம் முரட்டுத்தனமாக நட ந்து கொள்ள மாட்டேன்" என்று கணவன் எண்ண ஆரம் பித்து விடுவான்.

ஒவ்வொருவர் இடமும் இப் படிப்பட்ட இளகிய இதயம் இருக்கிறது. அது செயல்படும் படி நாம் நடந்துகொள்ள வேண்டும்.

"அன்பே! இனிமேல் நான் உனக்குத் தொந்தரவு கொடுக்க மாட்டேன். அலுவலகத்தில் எனக்குச் சில பிரச்சினைகள் அது என் மனதை வெகுவாகப் பாதித்திருந்தது. அந்த எரிச் சலை உன்மீது காட்டிவிட் டேன். அதற்காக வருத்தப் படுகிறேன். மறந்துவிடு!" என்று கணவன் சொல்லுவார்.

பலர் வாழ்க்கையில் இப்படி அடிக்கடி நடப்பது உண்டு. அலுவலகத்தில் தனக்கு மேல் இருப்பவர்களிடம் கோபத் தைக் காட்ட முடியாது வீட் டுக்கு வந்ததும் அந்தக் கோபம் மனைவியிடம் பாய்கிறது.

கணவன் மனைவி இருவரில் ஒருவர் மற்றவரின் ஆணவத் தையோ, கோபத்தையோ ஆர்ப்பாட்டத்தையோ, அசட் டுத்தனத்தையோ பொறுத்துக் கொண்டு போகும் ஆற்றலு டன் விளங்க வேண்டும்.

இந்த முறையில் கணவனும் மனைவியும் ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்து உதவி செய்து கொள்ளலாம்.

இதற்குப் போதுமான பொறு மையும் தைரியமும் வேண்டும்.

இப்படிப்பட்ட பொறுமை யும் தைரியமும் இல்லாவிட் டால் வாய் பேசாமல் மவுன மாக வீட்டை விட்டு வெளியே சென்றுவிட வேண்டும்.

மனம் சாந்தி அடைந்த பின் வீட்டுக்குத் திரும்ப வேண்டும். மனைவியுடன் இயல்பாக நடந்து கொள்ள முயல வேண்டும்.

பல குடும்பங்களில் கணவன் மனைவியின் வாழ்க்கையை நான் கூர்ந்து கவனித்திருக்கிறேன்.

கணவனும் மனைவியும் தங்கள் தங்கள் அன்பினாலும், பொறு மையினாலும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு, ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்து. ஒரு வர் கோபப்படும்போது மற்ற வர் தணிந்து கொடுத்து மகிழ்ச்சி யாக குடும்பம் நடத்துவதைப் பார்த்திருக்கிறேன்.

ஒவ்வொருவர் இடத்திலும் அன்பு சுரக்கும் இதயம் இருக்கி றது. பொறுமையாக அந்த இத யத்தின் உணர்ச்சிகளைத் தூண்டி விட வேண்டும். அப்போது இன் பமும் அமைதியும் பெற்று மகிழலாம்.

குடும்பம என்று இருந்தால் ஏதாவது பிரச்சினைகள் இருந்து கொண்டுதான் இருக்கும். அதைக் கண்டு குடும்பத்தை விட்டு ஓடி விடக் கூடாது.

ஒருவரிடம் இருந்து மற்றொரு வர் எதையாவது எடுத்துக் கொள்ள விரும்புகிறார். அப் போது கோபம் ஏற்படுகிறது.

காரணம் "தன்னிடம் இருக்கும் பொருள்கள் தனக்கே உரியவை. அவை மற்றவர்களுக்கு உரியவை அல்ல" என்று எண்ணுவது தான்.

இத்தகைய தன்னல உணர் வுடன் குடும்பம் நடத்தினால் எவ்வளவு அன்புடைய கணவன் மனைவியாக இருந்தாலும் அவர் கள் வாழ்க்கையில் இன்பம் ஏற்படாது. அமைதி ஏற்படாது.

மற்றவர்கள் கொடுக்க வேண் டும் என்று காத்திருக்கக் கூடாது. நாமே முதலில் கொடுக்க வேண்டும்.

நம்மிடம் உள்ளவற்றை நாம் முதலில் கொடுத்தோமானால் நம் மனதின் அமைதி பெருகும். இன் பம் பொங்கும்.

இந்த உணர்வுடன் ஒவ்வொரு வரும் வாழ முயல வேண்டும். அப்படி வாழ்ந்தால் குடும்பங்க ளில் ஐம்பது பங்கு பிரச்சினை தானே தீர்ந்துவிடும். அமைதி நிலவும்.

கணவனோ மனைவியோ இருவ ரில் ஒருவர் "நான் உங்களை வெறுக்கிறேன்" என்று சொல்ல லாம்.

"என்னை வெறுப்பது உங்க ளுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறதா அதில் உங்களுக்கு மகிழ்ச்சி இரு க்குமானால் அந்த மகிழ்ச்சியைத் தான் நான் விரும்புகிறேன். ஏன் தெரியுமா? நான் உங்களைப் பரி பூரணமாக நேசிக்கிறேன். காத லிக்கிறேன். உங்கள் மகிழ்ச்சி யைத்தான் என் மகிழ்ச்சியாக எண்ணுகிறேன்" என்று அமைதி யாகச் சொல்ல வேண்டும்.

அப்படிச் சொல்வதற்கு அபா இப்படிச் சொல்வதற்கு அபா ரமான தைரியம் வேண்டும்.

வெறுப்பைக் கொண்டே வெறுப்பைப் போக்க முடி யாது.

ஒருவரை வெறுப்பதனால் அவர் நம்மை விரும்பும்படி செய்ய முடியாது.

ஒருவர் நம்மை வெறுத்தால் அவரை நாமும் வெறுக்கக் கூடாது.

ஒருவருக்குக் கொடுப்பதும், அவரிடம் அன்பு செலுத்துவ தும், நம்முடைய இயல்பாக இருக்க வேண்டும்.

இதுதான் இறை உணர்வா கும். இதன் தன்மை என்ன? ஒரு வர் எதிர்பார்க்காமல் இருக்கும் போது அவருக்கு எதையாவது கொடுத்துக் கொண்டே இருப் பதுதான். எப்போதும் யாரிட மும் இந்த இயல்புடன் நடந்து கொள்வதுதான்.

அன்பு என்பது பேரம் பேசு வது அல்ல. கொடுத்துக் கொண்டே இருப்பது.

இதுதான் ஆன்மநேய ஒரு மைப்பாட்டு உரிமை.

## எரிகிற வீட்டில் பிடுங்கும் கலை!

எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம் என்பது போல், சில போராட்டங்கள் நடக்கும் போது, கையில் கிடைத்த பொருள்களைச் சுருட்டிக் கொள் வது சிலரின் வழக்கம்.

இந்த வழக்கத்திற்கு பிரே னாட்டு மக்களும் விதி விலக்கு அல்ல.

வேலை வேண்டும் என போரா டிய சில தொழிலாளர்கள், போராட்டத்தின் நடுவே ஒரு ரெடிமேட் சட்டை துணிக் கடைக்குள் புகுந்து, தமக்கு வேண்டிய உடைகளை எடுத்துக் கொண்டு ஓடி விட்டார்கள்.

[illegible]


## "மந்திரயோகி" வசிய, மாந்திரீக, வைத்தியம்

அரசாங்கத்தினால் பதிவு செய்யப்பட்டது பதிவு இலக்கம் C 433

அன்பர்களே! சூனியம், வசிய மருந்திடு, பேய் பிசாசுக் கோளாறுகள், கண்ணூறு, நாவூறு, ஆண், பெண் இரகசிய பாலியல் நோய்கள், தடைப்பட்ட மாதவிடாய்க் கோளாறுகள், தீராத நோய்கள், பிரச்சினைகளை அனுமான் அஞ்சன மை வெளிச்ச மூலமாகவும், மாந்திரிகக் குறி மூல அறிந்து, மருந்து அக்குப்பங்சர், ஹிப்நாட்டிச,மனோவசிய யோக சிகிச்சை மூலமாகவும், மாகவும், தெய்வத் துணைகொண்டு மாந்திரிக சக்தியினாலும் தீர்த்துக் கொள்ள, குடியை மறக்க, எதிரியை அடக்க, விரும்பியவர்களை வசியமாக்க, பரீட்சையில் சித்தியடைய, நேர்முகப் பரீட்சை யில் எடுபட, தொழில் கிடைக்க, வியாபார விருத்தி அடைய, சுவீப் அதிர்ஷ்டம் கிடைக்க, வழக்கு வெல்ல, வீடு, வளவு, உடலைக் காவல் பண்ண, மட்டக்களப்பு நான்காவது பரம்பரை வைத்தியர் மலையாளத்திலேயும், மாந்திரீக சித்தர் என அழைக்கப்படும் மாந்திரீகக் கலாநிதி, சித்த மருத்துவ பண்டிதர் மனோதத்துவ டாக்டர் "மந்திரயோகி" M.B.B.S. (H) S.M.P. (இந்தியா) D.Ac (இலங்கை)யுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

ஆண், பெண் (காதலன் — காதலி) வசியம் நீங்கள் விரும்பும் பெண் அல்லது ஆணை வசிய மாக்கி எல்லோருடைய சம்மதத்துடனும் திருமணம் செய்ய முதல் கடிதத்திலேயே முழுவிபரமும் இருவரின் பெயர்களும் தெரிந்தால் தாய், தந்தையர்களின் பெயர்களும். ஏமாற்ற மாட்டேன்.



சத்தியமாகத் திருமணம் செய்வேன் என்றும், பெண்ணைக் காப் பாற்றும் தகுதி அறிய தொழில் வருமானம் பற்றிய விபரமும் எழுத வேண்டும். நேரில் வர முடியாதவர்களுக்கு மருந்து மாத்திரம் செய்து பார்சலில் அனுப்பப்படும். 3 ரூபா 50 சத முத்திரை யும் 50 சத முத்திரை ஒட்டிய சுய விலாசமிட்ட கவரும். அனுப் புபவர்களின் விடயங்கள் மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும். 10 ரூபாவிற்கு மணியோடர் அனுப்புவர்களின் விடயங்கள் உடன் கவனிக்கப்படும்.

டாக்டர் "மந்திரயோகி"

இந்தியன் வைத்தியசாலை,
கல்லடி, மட்டக்களப்பு.
BATTICALOA.

சினிமா



சிவாஜி — கே. ஆர். விஜயா ஜோடி இணைந்து நடிக்கும் காட்சிகள் இன்றைய இளம் தலைமுறையினருக்குச் சவாலாக இருக்கின்றன. இந்தக் காட்சி "சிம்ம சொப்பனம்" படத்தில். (ம—10)

# ரேகாவின் ஆசைக்கு கமலஹாசன் மறுப்பு!

ரேகாவுக்கு நீண்ட காலமாக ஒரு ஆசை. ஆனால் அந்த ஆசைக்கு இணங்க கமலஹாசன் மறுத்து விட்டார்.

ரேகாவுக்கு இப்போது இந்தியில் மார்க்கெட்டில்லை. நம்ம ஊர் ஸ்ரீதேவியும், தெலுங்கு சுந்தரி ஜெயப்பிரதாவும் அவரைப் பின்னுக்குத் தள்ளிவிட்டார்கள்.

இதனால் ரேகா தன் பழைய "ஜெடுபிடி"களை குறைத்து விட்டார். படப்பிடிப்பில் பந்தா காட்டுவதில்லை.

ஒரு படத்தில் கமலஹாசனுடன் நடிக்கவும் ரெடியாக இருந்தார். ஆனால் கமலஹாசன், அவருடன் நடிக்க விரும்பவில்லை.

தமிழில் "மீண்டும் கோகிலா" படத்தில் இருவரும் ஜோடியாக நடித்து, பாதியில் தகராறு ஏற்பட்டு, படத்திலிருந்து ரேகா விலகியதை கமலஹாசன் இன்னும் மறக்கவில்லை.

ரேகாவுடன் நடிக்க கமலஹாசன் சம்மதித்தால் நிச்சயம் அவர் குடும்பத்தில் பெரும் கொந்தளிப்பு ஏற்படுமென்று எச்சரிக்கை செய்யப்படுகிறது.

(ம— 10)

## 'உங்கள் ஓட்டு யாருக்கு?'

சினிமா கதாசிரியரும் டைரக்டருமான வெங்கட் எழுதி மேடையில் நடிக்கப்பட்டு வரும் "உங்கள் ஓட்டு யாருக்கு?" சினிமா படமாகிறது.

சுவாதி சித்ரா என்னும் பட நிறுவனம் இதை தயாரிக்கிறது. பாண்டியனும், ரேவதியும் ஜோடியாக நடிக்கிறார்கள். இன்னொரு முக்கிய வேடத்தில் ஒய். ஜி. மகேந்திரன் நடிக்கிறார். மற்ற நட்சத்திரங்கள் முடிவாக வில்லை.

கங்கை அமரன் இசை அமைக்கிறார். கதை வசனம் எழுதி டைரக்டு செய்கிறார் வெங்கட்.

(ம—10)

## 'சட்டத்தை உடைக்கிறேன்'

பி. என். ஆர். பிக்சர்ஸ் தயாரிக்கும் படத்திற்கு "சட்டத்தை உடைக்கிறேன்" என்று பெயர் சூட்டப்பட்டு இருக்கிறது.

இதன் பூஜையும், பாடல் பதிவும் ஜெமினியில் நடந்தது. "பூவே பூவே பன்னீர் பூவே உன்னை கனவில் பார்த்தேன் நேற்று. என்ற பாடல், கங்கை அமரன் இசை அமைப்பில் பதிவு செய்யப்பட்டது. எஸ். பி. பாலசுப்பிரமணியமும், எஸ். ஜானகியும் பாடினார்கள்.

இந்த படத்தில் மோகனும், நளினியும் ஜோடியாக நடிக்கிறார்கள். இவர்கள் இருவரும் ஆடும் டிஸ்கோ நடனம் முதலில் படமாக்கப்பட்டது.

இந்த படத்தில் மோகன் ஜெய்சங்கர், ராதாரவி, ஒய். ஜி. மகேந்திரன், எஸ். எஸ். சந்திரன் ஆகியோரும் நடிக்கிறார்கள்.

(ம10)



பாக்கியராஜுடன் "முந்தானை முடிச்சு" படத்தில் நடித்ததால் ஊர்வசி ஒரு அனுபவ நடிகையாகி விட்டார். எனவே புதுமுக நடிகர்களுடன் அவர் ஜோடி சேரும் போது அவருக்கே முக்கியத்துவம் கிடைக்கிறது. விஜயபாரதியுடன் இவ்விதம் ஊர்வசி தோன்றுவது "அனுக்கிரகம்" படத்திற்காக.



நிஜவாழ்வில் திருமணத்தின் பின் மனைவியிடம் அடங்கிப் போனவர் ரஜனிகாந்த். அந்த அனுபவம் அவருக்கு இப்படி ரேவதியுடன் "கைகொடுத்தவன்" படத்தில் தோன்றக் கைகொடுத்திருக்கிறது. (ம—10)



## பின்னணிப் பாடகி எஸ். பி. ஷைலஜா [illegible] நடிக்கிறார்



நிஜவாழ்வில் திருமணத்தின் பின் மனைவியிடம் அடங்கிப் போனவர் ரஜனிகாந்த். அந்த அனுபவம் அவருக்கு இப்படி ரேவதியுடன் "கைகொடுத்தவன்" படத்தில் தோன்றக் கைகொடுத்திருக்கிறது. (ம—10)

இந்திப் பட உலகின் இருபெரும் நடிகர்கள் அமிதாப்பச்சன், ராஜேஷ்கன்னா. இவர்கள் நடிக்கும் படங்கள் திரைக்கு வரும்போது ரசிகர்கள்தான் போட்டி போடுகிறார்களே தவிர, இவர்களிடையே எந்தப் போட்டியும் இல்லை. இதை வெளிப்படுத்தும் விதமாக சென்னையில் நடைபெறும் தேவர் பிலிம்ஸ் இந்தி படப்பிடிப்பில் காணமுடிந்தது. ராஜேஷ்கன்னா நடித்துக் கொண்டிருந்த போது, "திடீர்" என்று அங்கு அமிதாப்பச்சன் வந்தார். இருவரும் ஒருமணி நேரம் ஒன்றாகப் பேசிக் கொண்டிருந்து, ஒன்றாகவே விருந்துண்டனர். நடிகர்கள் போட்டியில்லை. இதைப் புரியாத ரசிகர்களிடமே போட்டி. பூசல்! அடிதடி!

★

போலியான சினிமா கம்பெனிகள் முளைப்பது இப்போது குறைந்திருக்கிறது. ஏனென்றால் பூஜை போட்டு 2 பாடல்கள் ஒலிப்பதிவு செய்யப்பட்டால் படம் விற்பனையாகும் என்ற நிலைமை அடியோடு மாறிவிட்டது. மேலும் படத் தயாரிப்பு செலவும் எக்கச்சக்கமாக கூடியுள்ளது. இதனால் போலி கம்பெனிகளும் மறைந்து வருகின்றன.

★

இங்கே தமிழ்ப் பட உலகில் மாயமாகவே மறைந்துவிட்ட ஒரு நடிகரான சுமன் இப்போது தெலுங்குப் பட உலகில் கொடி கட்டிப் பறக்கிறார். சிரஞ்சீவி, கிருஷ்ணம்ராஜு போன்ற பெரிய நடிகர்கள் வரிசையில் சுமன் இடம்பெற்று விட்டார் என்று சொல்கிறார்கள்.

★

ஸ்ரீவித்யா இப்போது கூடுதல் பூரிப்புடன் காணப்படுகிறாராம். உடல் அளவினால் அல்ல; மனச் சந்தோஷத்தினால். பாக்கியராஜின் படத்தில் நடிக்க அதுவும் சிவாஜியுடன் இணைந்து நடிக்க வாய்ப்புக் கிடைத்துள்ள பூரிப்பு அது. மற்றொரு படத்திலும் சிவாஜியுடன் நடிக்கும் ஸ்ரீவித்யா விரைவில் சிவாஜியின் மற்ற முக்கிய ஜோடிகளான விஜயா, சுஜாதா வரிசையில் இடம்பெற்று விடுவார் என்றும் தெரிகிறது. ஸ்ரீவித்யா பூரிக்காமல் என்ன செய்வார்?

★

சிலுக்கு சுமிதாவுக்கும், அவர் தாடிக்கார காதலர் ராதாகிருஷ்ணனுக்கும் இன்னும் திருமணம் நடக்கவில்லையென்றாலும் ஒரே வீட்டில் வசிக்கிறார்கள். ஒன்றாகக் குடும்பம் நடத்துகிறார்கள். இதற்கு சிலுக்கு சுமிதாவின் தாயாரும் அனுமதி தந்திருக்கிறார். (ம—10)

## முக்தா டிரஸ்ட் புதிய படம்

முக்தா டிரஸ்ட் சார்பில் முக்தா சீனிவாசன் இப்போது டைரக்ட் செய்துவரும் படம் "இரு மேதைகள்" இதில் சிவாஜிகணேசனுடன் பிரபு, ராதா நடிக்கிறார்கள்.

இது வெளியானதும் தயாரிக்கும் புதுப்படத்தில் விஜயகாந்த் கதாநாயகனாக நடிக்கிறார்.

கதை வசனத்தை தூயவன் எழுதுகிறார். எம். எஸ். விஸ்வநாதன் இசை அமைக்கிறார்.

கர்ணன் ஒளிப்பதிவு செய்ய வி. சீனிவாசன் டைரக்ட் செய்கிறார். வி. ராமசாமி தயாரிக்கிறார். (ம—10)



எத்தனை தந்திரம் பண்ணினாலும் கார்த்திக்கினால் சினிமா உலகில் நிலையான இடத்தைப் பிடிக்க முடியவில்லையே! இங்கு அவர் சுலக்ஷணாவுடன் தோன்றுவது "ராஜதந்திரம்" படத்திற்காக. (ம—10)

## எஸ். பி. ஷைலஜா மீண்டும் நடிக்கிறார்

பிரபல பின்னணிப் பாடகர் எஸ். பி. பாலசுப்பிரமணியத்தின் தங்கை எஸ். பி. ஷைலஜா. இவரும் பல படங்களில் பின்னணி பாடிவருகிறார்.

ஷைலஜா நடித்த முதல் தெலுங்குப் படம் "சாகர சங்கமம்." இது தமிழில் "சலங்கை ஒலி"யாக வந்தது.

கமலஹாசன் கதாநாயகனாக நடித்த இந்தப் படத்தில் ஜெயப்பிரதாவின் மகளாக ஷைலஜா நடித்தார். பிரபல தெலுங்கு டைரக்டர் கே. விஸ்வநாத் டைரக்ட் செய்தார்.

இதன் பிறகு புதிய படங்களில் நடிக்க அவர் ஒப்புக் கொள்ளவில்லை. பட அதிபர்கள் கேட்டதற்கு மறுத்து விட்டார். இனி மீண்டும் நடிக்கப் போகிறார்.

"அலைகள் ஓய்வதில்லை", "கோழி கூவுது" படங்களைத் தயாரித்த ஆர். டி. பாஸ்கர் (கங்கை அமரனின் அண்ணன்) பாவலர் கிரியேசன்ஸ் சார்பில் அடுத்து ஒரு படம் தயாரிக்கிறார். இந்தப் படத்தை கங்கை அமரன் டைரக்ட் செய்கிறார். இதில் எஸ். பி. ஷைலஜா முக்கிய வேடம் ஒன்றில் நடிக்கிறார். (ம—10)

# விஜயகாந்துடன் ரேவதி ஜோடி!

சேலம் சுவாமிநாதன் ஸ்ரீ சொர்ணலட்சுமி கலாமந்திர் சார்பில் தயாரிக்கும் படம் "இது என்ன நியாயம்?"

இதன் பூஜையும், பாடல் பதிவும் பிரசாத் ஒலிப்பதிவு கூடத்தில் நடந்தது.

இளையராஜா இசை அமைப்பில் "தண்ணி கொடம் தூக்கி வந்தா சமைஞ்ச பொண்ணு அத்தமகள் சுத்திவர அமைஞ்ச பொண்ணு" என்னும் பாடல் பதிவு செய்யப்பட்டது.

மலேசியா வாசுதேவன் பாடினார்.

இந்தப் படத்தில் விஜயகாந்த் ஜோடியாக ரேவதி நடிக்கிறார். அவர்கள் இருவரும் இணைந்து நடிக்கும் முதல் படம் இது.

ரவிபாபு ஒளிப்பதிவு செய்கிறார். கதை வசனம் எழுதி டைரக்ட் செய்கிறார், மணிவண்ணன். (ம—10)



முரட்டுக் குதிரைகளை அடக்குவதற்கு முரட்டு சுபாவம் இருக்க வேண்டும். அந்த வகையில் தியாகராஜன் பொருத்த மானவர் தாம்! அவருடைய இந்தத் தோற்றம் "முரட்டுக் கரங்கள்" படத்தில். (ம—10)

## காதலுக்கு ஒரு படம்

"வெள்ளைப்புறா ஒன்று" படத்திற்குப் பின், ஏ.வி.எம். குமரன், கே. சண்முகம் புதிய படம் ஒன்றை தயாரிக்கிறார்கள். இது காதலை சித்தரிக்கும் படமாக இருக்கும்.

இதில் பிரபல முன்னணி நட்சத்திரங்கள் நடிப்பார்கள்.

"பயணங்கள் முடிவதில்லை" ஆர். சுந்தரராஜன் இந்த படத்தை டைரக்ட் செய்கிறார். ராஜராஜன் ஒளிப்பதிவு செய்கிறார். (ம—10)




மு. முடிச்சு கதாநாயகன் அடுத்து தா. கனவுகள் படத்தில் கதாநாயகனாக நடித்து டைரக்ட் செய்து, தயாரிக்கிறார் அல்லவா? இந்தப் படத்தில் இவருடைய குருவான ம. வாசனை டைரக்டர் சினிமா டைரக்டரா கௌரவ வேடமேற்று நடிக்கிறார். இப்படி நடிக்க வற்புறுத்தியதற்கு காரணமே விதி தந்த வெற்றித் திருப்பம்தானும். விதியில் சினிமா டைரக்டராகக் கௌரவ வேடமேற்று நடித்தவர் சிஷ்யன்தானே!

★

கன்னடத்தில் இருந்து தமிழ்ப் படத்தில் கதாநாயகியாக அறிமுகமான இரு எழுத்து நடிகை, இந்த நடிகைக்கும், இளம் கன்னட நடிகர் ஒருவருக்கும் மிக மிக நெருக்கமான காதலாம்! காதல் கோழி கூவுது. பொழுது விடியுமா? கெட்டி மேளம் கொட்டுமா? இங்குதான் சந்தேகம் சதிராடுவதாகக் கேள்வி.

★

எந்த டைரக்டர் டைரக்ட் செய்த படத்தில் ரேவதி நடிகை முதன் முதலில் நடித்தாரோ, அந்த டைரக்டருக்கு நடிகை வைத்திருக்கும் செல்லப் பெயர் என்ன தெரியுமா? "பெல்ட்" — "பெல்ட்" என்று அழைப்பது ஏன்? அதன் இரகசியம் அவர்களுக்கே தெரிந்ததாக இருப்பதாக!

★

இளைய இசையின் "கால்சீட்டு" கிடைப்பதே பட அதிபர்களுக்கு இப்போது பெரும் பிரச்சினையாகி விட்டதாம்! "ரீரிக்கார்டிங்"குக்காக மட்டும் 2 மாதம், 3 மாதமென்று காத்திருந்து, காத்திருந்து பட அதிபர்கள் மனம் துடித்துப் போகிறதாம்! சிறப்பாக இசையமைக்கும் இளைய இசையும் இப்படிச் செய்யலாமோ!

★

"நெஞ்சத்தைக் கிள்ளாதே" அறிமுக நாயகி அடுத்த ஆண்டுக்குள் திருமணம் செய்து, நடிப்புக்கு முழுக்குப் போட முடிவு செய்து விட்டாராம்! பல தெலுங்குப் படங்களில் நடிப்பதால் திருமணத்தையும் ஒரு ஆண்டு தள்ளிப் போட்டிருக்கிறாராம்! அது சரி, மணமகன் யார்? அதையும் இப்போதே முடிவு செய்து விட்டாரா? (ம—10)

# நடிகரின் நடமாற்றம் மாணவிகளுக்கு தெரியும்

ஒரு நடிகர் இருக்கிறார். அவர் எங்கு செல்கிறார்? என்ன செய்கிறார்? — இவை போன்ற விவரங்கள் அவர் வீட்டாருக்கே தெரியாது. ஆனால் அவருடைய ரசிகைகளான மாணவிகளுக்கோ நடிகரின் நடமாட்டம் அப்படியே அத்துப்படி!

மோகன நாயகனுக்கு கல்லூரி மாணவிகளான ரசிகைகள் எக்கச்சக்கமாம். இப்படிப்பட்ட சில ரசிகைகளிடம் மோகன நடிகர் பற்றிய விவரத்தைத் தெளிவாகக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாமாம்! இன்று எந்த இடத்தில், எந்தப் படத்தின் படப்பிடிப்பில் நடிகர் கலந்து கொள்கிறார் என்பதற்கு நூற்றுக்கு நூறு மார்க் போடும் விதத்தில் பதில் கொடுப்பார்களாம்!

இதே நேரத்தில் மற்றொரு நடிகரின் நிலையைப் பாருங்கள்:

பொதுவாக வெளியூரிலோ அல்லது வெளியூருக்கோ சென்றிருக்கும் தங்கள் கணவர் எப்போது வருவாரென்று மனைவி சொல்வது வழக்கம். தியாகராஜனின் மனைவி மட்டும் இதில் விதிவிலக்கு. தொலைபேசியை அவர் எடுக்க நேர்ந்தால் வேண்டுமென்றே ஊரிலிருக்கும் தன் கணவன் வெளியூர் சென்றிருக்கிறார் என்றும், எப்போது வருவார் என்று தெரியாதென்றும் பட்டென்று சொல்லி, சட்டென்று போனை வைத்து விடுகிறாராம்!

கணவனுக்கு இதனால் கெட்ட பெயரல்லவா வரும்? வரட்டுமே. படங்கள் குறையும். குறையட்டுமே! இதனால் மனைவிக்கு என்ன இலாபம்? "என் புருஷன் எனக்கு மட்டும்தான்" என்பதாவது மிஞ்சுமல்லவா? (ம- 10)



## ஸ்ரீபிரியா இயக்கும் இரண்டாவது படம்

ஸ்ரீவீர்னர் பிலிம்ஸ் சார்பில், தன் தாயார் கிரிஜா தயாரிக்கும் "சாந்தி முகூர்த்தம்" படத்தை நடிகை ஸ்ரீபிரியா டைரக்டு செய்கிறார். இந்த படம் முடியும் தறுவாயில் இருக்கிறது.

சூட்டோடு சூடாக புதிய படத்திற்கு பூஜை போடுகிறார் கிரிஜா. இந்த படத்தையும் ஸ்ரீபிரியாவே டைரக்ட் செய்கிறார்.

ஸ்ரீபிரியாவின் கதைக்கு திரைக்கதை வசனம் வினுசக்ரவர்த்தி எழுதுகிறார்.

விஜயகாந்த், நளினி நடிக்கிறார்கள். மற்ற நட்சத்திரங்கள் முடிவாகவில்லை.

நிவாஸ் ஒளிப்பதிவு செய்ய, சந்திரபோஸ் இசை அமைக்கிறார். (ம-10)

"மங்கை அவள் அருகில் இருக்கையில் கங்கை பெருக்கெடுத்தாலும் கவலை இல்லை" என்ற நினைப்போ இந்தக் காளைக்கு? "இங்கேயும் ஒரு கங்கை" படத்தில் முரளி — தாரா ஜோடி. (ம—10)



### வாள் போன்ற கூர்மையான கண்கள் இருந்தால்....

வாள் போன்ற கூர்மையான கண்கள் இருப்பதனால் இளைஞர் உள்ளம் எல்லாம் ஊடறுத்துச் செல்லும் விதத்தில் பார்க்கும் சக்தி பெற்றவராக இருக்கிறார் இந்தி நடிகை கோமில்லா வர்க். (ம—10)



## டைரக்ட் செய்வதுடன் முக்கிய வேடத்திலும் மவுலி

பாடல் ஆசிரியர் ஆலங்குடி சோமுவின் விவிதாலயா படநிறுவனம் தயாரிக்கும் படம் "அவுங்கள பாத்திங்களா?"

இதில் சுரேஷ், இளவரசி ஜோடியாக நடிக்கிறார்கள். மற்றும் ஒய். ஜி. மகேந்திரன், சுமித்ரா, வனிதா, மேனகா, பாஸ்கர், சகுந்தலா, கல்லாப்பெட்டி சிங்காரம் ஆகியோர் நடிக்கிறார்கள்.

இதன் கதை, வசனம் எழுதி

தேவிப்பிரசாத் ஒளிப்பதிவு செய்ய, ஷியாம் இசை அமைக்கிறார்.

சக்தி சண்முகம், எஸ். வீ.



எங்கோ தனது கவனத்தைச் செலுத்தும் சிலுக்கு சுமிதாவைத் தன் பக்கம் இழுத்து விடத் துடிக்கும் பிரபு அதற்காகத் தன் கைவரிசையைக் காட்டுகிருரோ? படம்: "கைராசிக்காரன்". (ம—10)

## டைரக்ட் செய்வதுடன் முக்கிய வேடத்திலும் மவுலி

பாடல் ஆசிரியர் ஆலங்குடி சோமுவின் விவிதாலயா பட நிறுவனம் தயாரிக்கும் படம் "அவுங்கள பாத்திங்களா?"

இதில் சுரேஷ், இளவரசி ஜோடியாக நடிக்கிருர்கள்.

மற்றும் ஒய். ஜி. மகேந்திரன், சுமித்ரா, வனிதா, மேனகா, பாஸ்கர், சகுந்தலா, கல்லாப் பெட்டி சிங்காரம் ஆகியோர் நடிக்கிருர்கள்.

இதன் கதை, வசனம் எழுதி டைரக்ட் செய்கிருர் மவுலி, ஒரு முக்கிய வேடத்தில் அவரும் நடிக்கிருர்.

தேவிப்பிரசாத் ஒளிப்பதிவு செய்ய, ஷியாம் இசை அமைக்கிருர்.

சக்தி சண்முகம், எம். இ. ராமசாமி, சரவணன் ஆகியோர் இந்த படத்தை தயாரிக்கிருர்கள். (ம-10)



இடுப்பில் கை வைத்திருக்கும் தேவி வில் போல் வளைந்து நின்ருலும் அவர் எவருக்கும் சுலபத்தில் வளைந்து கொடுக்க மாட்டார் என்பது தெளிவாகிறது தானே? (ம—10)

## 'ரோஜா மலரே' துரித வளர்ச்சி

கிரேஷ் ஆர்ட்ஸ் தயாரிக்கும் "ரோஜா மலரே" படப்பிடிப்பு இடைவிடாமல் நடந்தது.

கும்பகோணத்தில் தொடங்கிய இதன் படப்பிடிப்பு சென்னையை அடுத்த குளப்பாக்கத்தில் நடந்தது.

இதில் மதன், இசை அமைப்பாளர் கணேஷ், வை. விஜயா, ரஜினி, தேவிஸ்ரீ, ஆனந்தகுமார், ஆகியோர் நடிக்கிருர்கள்.

ஆறுமுகம், அழகப்பன் ஒளிப்பதிவு செய்ய, பிரபு டைரக்ட் செய்கிருர். (ம-10)

## இரட்டை வேடத்தில் தியாகராஜன்

தியாகராஜன் இரட்டை வேடத்தில் நடிக்கும் முதல் படம் "ராஜா யுவராஜா" பி. எஸ். ஆர்ட்ஸ் பிலிம்ஸ் தயாரிக்கும் இந்தப் படத்தின் பூஜையும், பாடல் பதிவும் ஏவி. எம். ஸ்டுடியோவில் நடந்தது.

"வாம்மா வரட்டுமா, நான் ஏங்கறேன்— ரொம்ப நேரமா— ஏம்மா பிடிவாதமா?" என்ற பாடல் பதிவு செய்யப்பட்டது. எஸ். பி. பாலசுப்பிரமணியமும், வாணி ஜெயராமும் பாடினுர்கள்- இதன் படப்பிடிப்பு வாகினியில் தொடங்கியது.

தியாகராஜனுக்கு ஜோடியாக, இளவரசியாக ஊர்வசி நடிக்கிருர். இன்னெரு ஜோடி புதுமுகம் ரிதிகா.

மற்றும் சுனிதா, செந்தாமரை, கவுண்டமணி, செந்தில், லூஸ் மோகன், விஜயகுமாரி, மனேரமா ஆகியோர் நடிக்கிருர்கள்.

இந்தப் படத்தைத் தயாரிக்கும் சுரேந்தர் கதை வசனம் எழுதுகிருர். இசையும் அமைக்கிருர்.

திரைக்கதை அமைத்து டைரக்ட் செய்கிருர், சோமசுந்தரம். (ம-10)



[illegible] (ம—10)

## ரஜினியின் அழகிய வீடு சினிமாவில் நடிக்கிறது!

கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவி பாடும் என்பார்கள். நடிகர் ரஜினிகாந்த்தின் வீடோ ஒரு படி மேலே சென்று தனது எஜமானனைப்போல் சினிமாவிலும் நடிக்கிறது.

ரஜினிகாந்த் வீட்டில் முதன் முறையாகச் சினிமாப் படப்பிடிப்பு நடந்தது. அதில் அவர் கலந்து கொண்டு நடித்தார்.

கதாசிரியர் தூயவனும், துர்கா தமிழ்மணியும் சேர்ந்து எஸ். டி. கம்பைன்ஸ் சார்பில் தயாரிக்கும் படம் "அன்புள்ள ரஜினிகாந்த்."

இதில் ரஜினிகாந்த் கதாநாயகனுக நடிக்கிருர். நடிகர் ரஜினிகாந்த், பாத்திரத்திலேயே படத்தில் அவர் வருவார்.

ஊனமுள்ள குழந்தை மீனு அவரைப் பார்க்க வேண்டுமென்று விரும்புகிருள். அவளை அம்பிகா சக்கர நாற்காலியில் அழைத்துச் செல்கிருர்.

மீனுவை அன்புடன் உபசரித்து சாப்பாடு கொடுக்கிருர் ரஜினிகாந்த்.

ரஜினிகாந்த், அம்பிகா, பேபி மீனு கலந்து கொண்ட சில காட்சிகள் அங்கு படமாக்கப்பட்டன.

இந்தப் படத்தில் மற்றும் ராஜ்குமார், சுலக்‌ஷணு, பேபி மீனு, மாஸ்டர் சுரேஷ், மாஸ்டர் டிங்கு, ஒய். ஜி. மகேந்திரன். மணிமாலா, செந்தாமரை, வி. கோபாலகிருஷ்ணன், பேபி சோனியா ஆகியோர் நடிக்கிருர்கள்.

இளையராஜா இசை அமைக்கிருர். கதை, வசனத்தை தூயவன் எழுதுகிருர். பாபு ஒளிப்பதிவு செய்ய, கே. நடராஜ் டைரக்ட் செய்கிருர். (ம—10)




இல: 40
செட்டியார் தெருவில் உள்ள
நித்திய கல்யாணி
நகை மாளிகைக்கு
செட்டியார் தெருவிலோ, கொழும்பிலோ
நாடெங்கிலுமோ
வேறு கிளைகள் இல்லை

தங்க நகைகளைத் தயாரிப்பதில் நம்பிக்கையான ஸ்தாபனமாக நாம் விளங்குவதால் எமது பெயரைச் சிலர் மோசடி செய்து தமது கடைகளை எமது கிளைகள் என்று சொல்லிக் கொண்டு தரமற்றவர்களாக நடக்கிருர்கள். அப்படிக் கிளைகள் எனச் சொல்லிக்கொள்பவை செட்டியார் தெருவில் இருப்பினும்

அவைகளும் போலிகளே

நித்திய கல்யாணி
நகை மாளிகை
(ஸ்தாபிதம்: 1950)
40, செட்டியார் தெரு, கொழும்பு-11.
தொலைபேசி- 21617.

## முத்தமோ முத்தம்

— ப. சண்முகம் —

ஊனுள்ள முல்லைஇதழ் விரிக்கத் தென்றல்
களித்துபடி வைப்பதுவோ காதல் முத்தம்
தேனுண்ணும் கருவண்டு மலரைக் கூடி
சேர்த்த ணைத்துத்தருவதுதான் கலவி முத்தம்
வானுள்ள மீனெல்லாம் இரவோன் அந்த
வஞ்சிக்கு வந்தீந்த சொந்த முத்தம்
தானுள்ளங் கொண்டுள்ள கற்பனைக்குத்
தமிழ்க்கவிஞன் தருவதுதான் கவிதை முத்தம்
★
நிலவுக்குச் செங்கதிரோன் தொலைவிருந்து
நெருங்காமல் அளிப்பதுதான் கலையா(ம்) முத்தம்
நிலத்துக்குக் கடற்கணவன் கரையின் மீது
நெஞ்சுவந்து பதித்திடுவான் அலைமுத் தங்கள்
உழவுக்கும் உழைப்புக்கும் இயற்கை நல்கும்
உயர்முத்தம் நற்பயனும் விளைவு முத்தம்
களங்கண்ட வேல்மறவன் பெறுவதொன்றே
களங்கமிலாப் புகழ்முத்தம் வெற்றிமுத்தம்
★
மாலைானும் மங்கைதனைக் கந்திக் காதல்
மணவாளன் தருமுத்தம் நாணமுத்தம்
சேலைநிகர் கண்ணாட்குக் கொழுநன் அன்னாள்
செவ்விதழிற் பதிப்பதுவோ இன்பமுத்தம்
சோலைக்கு முதற்படியாய்த் தோன்று முத்தம்
துய்கனைவைப் படிப்படியாய்த் தோன்று முத்தம்
காலைவர வெதிர்த்தபடி காலை யோடுங்
களவாட இருள்நாட் வைக்கு முத்தம்

## கங்காணி வருகிறார்!

பி. வேதாந்த மூர்த்தி

சோக்குப்பட்டி சோனும் பட்டி ராத்திரி போட்ட பூனைக் குட்டி — இந்தப் பாட்டு மடுவத்திலிருந்து ஒலிக்கிறது என்றால் நேரம் காலை 7.00 மணி, என்பது நிச்சயம். தோட்ட சனங்களும் வேலைக்குப் பஞ்சாயப் பறப்பார்கள்.

தோட்ட சனங்கள் வேலைக்குச் செல்ல கடிகாரம், தேவையில்லாத அளவுக்கு இந்த பாட்டு காலையில மக்களை படுத்தும் உஷாருக்கு காரணம் அந்த சோக்குப்பட்டி கங்காணியும்... லயத்து வாண்டுகளும் தான்.

ஆனால் பாட்டைக் கேட்ட மாத்திரத்தே கங்காணியின் கோபம், உச்சஸ்தாயியில் ஏறி விடும். அதன் பிரதிபலனாக தனது கிருதா மீசையை முடுக்கிவிட்டு, மனுசி, தடுப்பதையும் பொருட்படுத்தாது ஒரே பாய்ச்சலில் மடுவ மைதானத்தில் நின்று தன் பூனைக் கண்ணை உருட்டி — உருட்டி — சந்து பொந்தெல்லாம் நோட்டம் விடத் தொடங்கி விடுவார்.

அவரின் வாய், நாலு வெற்றிலையோடு, ஒரு நீண்ட புகை விலையையும் அசைபோட்டுக் கொண்டு "டேய் இந்தப் பாட்டை படிச்சவன் எவனா இருந்தாலும் ச ரி... வா வெளியே..., நீ... ஆம்பலன்னா... வாடா வெளியேன்னு" மலையே அதிரும்படி கத்தும்.

இத்தனைக்கும் அவர் இங்கு போட்டிக்கு கூப்பிடும் எதிரி. உண்மையிலே இவரோடு ஒத்த... ஐம்பது வயது பலசாலிகள் அல்லர். லயத்தை

இதற்குள் மடுவத்தின் தாழ்வாரத்தின் கூரைகளில் பதுங்கி இருந்த ஒரு வாண்டுக் கூட்டம், இன்னும் ஒரு படி முன்னேறி, தாழ்வார மரத்திற்கு மரம்தாவி, கங்காணி ஓடுவதை மேலிருந்து, பார்த்து ரசித்துக் கொண்டிருக்கும்.

கங்காணியும் சாமானிய மான ஆள் இல்லை. விடுவனா பார் என்று வேட்டியை ஒரு கையில் பிடித்துக் கொண்டு, அவிழ்ந்துவிடும் தலைப்பாகையும், ஒரு பக்கம் வீசிவிட்டு...

றவற்றை லயத்து வாண்டுகள் அபகரித்திருப்பார்கள்.

அதற்குள் லயத்து வாண்டுகளும் ஆசிரியரிடம் சென்று சில முறைப்பாடுகளைத் தெரிவிப்பதுண்டு. சிலர் காற்சட்டையுடன், சிலர் சட்டையுடன், சிலர் பிறந்த மேனியுடனும் சென்று கங்காணிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வது வழக்கம். இந் நிலையில் பாடசாலை வாத்தியாரால் என்ன தான் செய்ய முடியும்.

கங்காணிதான் அன்றுடம்



சுற்றி கலக்கும் ஒரு வகையில் இப்பொழுது அன்றாடம் கங்காணியை மேய்க்கும்... லயத்து வாண்டுப் பயல்கள்தாம்.

இந்த சத்தம் கேட்கு முன்னே... "மடுவத்தின் கோடியில் இருந்து... ஒரு வாண்டு நாக்கை மடித்து... அடிக்கும் விசில் சத்தம், கொக்கரப்பட்டி கங்காணியின் அன்றைய சி. ஐ. டி. வேலைக்கு... பெரிய துப்பாக மாறி, வேட்டியை இழுத்து மடித்துக் கொண்டு ஓட்டமாய் விசில் அடித்தவனைப் பிடிக்க மடுவத்தின் கோடிக்கு ஓட வைக்கும்.

விசில் அடித்தவன் தான் வாண்டுகளில் ஒருவனையாவது பிடிக்க, ஓடுவார்.

அப்பொழுது... தான் வாண்டுகளின் சேட்டை இன்னும் தலைக்கு மிஞ்சி கங்காணி வீசிச் செல்லும் தலைப்பாகை வேட்டியையும் காவிக் கொண்டு... ஓடத் தொடங்கும்.

இங்கு ஆரம்பமாகும்... மரதன் ஓட்டம், மீண்டும் லயத்தில் அநேகமாக முடிவுபெறும். இப்பொழுது கங்காணியின் சில

அந்த லயத்துப் பிள்ளைகளைப் பாடசாலைக்குக் கூட்டி வருவது வழக்கம். லயத்துப் பிள்ளைகளோ பாடசாலையில் படிப்பவர்கள். ஒருவாறு நிலைமையைச் சமாளிக்க, அவர் லயத்து வாண்டுகளிடம், கங்காணியின் பொருட்களை ஒப்படைக்கச் சொல்லுவார்.

பொருட்களை பதுக்கி வைக்கப்பட்டு இருக்கும் இடங்களைச் சிறுவர்கள் வரிசையாகக் கூறி விடுவார்கள்.

## பிள்ளைச் செல்...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

ருய். உன்னை நான் அந்த நாளையில புறக்கணிச்ச பிறகும், நீ எனக்குச் சேவை செய்கிருய். சொந்த பந்தங்களைத் தூக்கி எறிஞ்சு நடந்தது எவ்வளவு பிழை எண்டு இப்ப உணருகிறன்" ஆச்சியின் கண்கள் பெருக்கெடுத்தன.

"இப்ப அழாதைங்கோ மாமி...... முதல்லை இதைக் குடியுங்கோ..." மெல்ல மெல்ல கரண்டியால் ஊட்டினாள் பவளம்.

"பவளம்... நான் ஒண்டு கேக்கிறேன், செய்வியா குஞ்சு? இக்கணம் நான் செத்தாலும் என்ரை பிள்ளையளுக்கு அறிவிக்கக்கூடாது. நீதான் எனக்குக் கொள்ளி வைக்க வேணும். அண்டைக்கு உன்னை மருமகளாக வேண்டாம் எண்டு ஒதுக்கி வைச்சன்... இப்ப நீ என்ர மகளாயிட்டாய் குஞ்சு! கட்டாயம் நீதான் கொள்ளி வைக்கவேணும்..." ஆவேசம் வந்தவள் போல் கூறினாள் ஆச்சி.

பவளம் கரண்டியால் அள்ளி அள்ளி ஆச்சியின் வாயில் தோடம்பழச் சாற்றை விட்டாள். தங்கு தடையின்றிச் சாறு வாய்க்குள் இறங்கியது. ஆச்சியின் விழிகள் பவளத்தை வெட்டாமல் நோக்கின. ஆம் ஆச்சியின் சப்த நாடிகளும் ஒடுங்கி விட்டன.

பவளம் ஒரு கணம் ஸதம்பித்துப் போய் விட்டாள். என்ன இருந்தாலும் அவள் பெண் தானே! ஆயினும் ஆச்சி தந்த பொறுப்புகள் அவளைச் சுறுசுறுப்பாக இயங்கத் தூண்டின. அன்னம்மா ஆச்சியின் இறுதி ஆசையைப் பூர்த்தி செய்யச் சுறுசுறுப்புடன் காரியத்தில் இறங்கினாள். (ம)

## மணிக் கவிதை

### தாய்ப்பால்

தான் பெற்ற
குழந்தைக்கு
தாய்ப் பால்
கொடுத்தால்
தன் அழகு
குலையுமென்று
புட்டிப்பால் கொடுத்த
நாகரிகச் சிமாட்டிக்கு
இன்று — அறுவைச்
சிகிச்சை மூலம்
பால் சுரப்பி
பறிபோகும்
மார்பினிலே
புற்று நோயாம்!

★ ஷண்பா

### நோன்பு

மன வயலில்
விளையும்
பாவக் களைகளை(ப்)
பிடுங்கி,
நன்மை விதைகளை(த்)
தூவும்
விவசாயி!

### விலைமகள்

சமுதாய நூலகத்தில்
பலராலும்
படிக்கப் படுகின்ற
இரவல் புத்தகம்

★ எம். ஐ. எம். ஸுபைர்

### செல்வம்

தனவந்தனின்
தவறுகளை
மூடி மறைக்கும்
திரை!

★ தாஹிர் எஃப்.
அஸ்லம்

### தண்ணீர்

தேகத்தை
சுத்தம் செய்யும்
தண்ணீர் —
சமயத்தில்
தேங்கி நின்று
தேச சூழலையும்
அசுத்தம் செய்வதுண்டு!
எத்தனையோ பயன்பாடுகள்
இந்த தண்ணீரில்!
ஆனால் —
கண்ணீரில் வாழும்
ஏழை எங்களுக்கு — இது
ஒருவேளை —
உணவாகப் பயன்படுவதை
இங்கு —

## சோதிட சிந்தாமணி

சிந்தாமணி சோதிடர்: திரு. ஆர்வி

10 — 6 — 1984 தொடக்கம் 16 — 6 — 1984 வரை உள்ள பலாபலன்கள்.

மேஷம் சிங்கம் தனு

## நகைச்சுவை

— சிந்தாமணி சோதிடர்: திரு. ஆர்வி —

10 — 6 — 1984 தொடக்கம் 16 — 6 — 1984 வரை உள்ள பலாபலன்கள்.

## மேஷம்

அசுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் கால்.

மேஷம்.— உடல் நலம் சீரடையும். கொடுக்கல் வாங்கல் திருப்திகரமாக நடைபெறும். பழைய கடன்கள் திரும்பி வரும். உறவினரால் சில தொல்லைகள் ஏற்படும். புதிய வீடு, காணி வேண்ட அல்லது குடி புக நேரிடும். பிரயாணத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஆசிரியர்கள், நடிகர்கள், அரசியல் வாதிகள் பதவி ஏற்றம் — புகழ் அடைவர்.

## ரிஷபம்

கார்த்திகை 2, 3- 4 ஆம் கால்கள். ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் கால்கள்.

ரிஷபம்:— வர்த்தகர்களுக்குப் புதிய முயற்சியில் வெற்றி கிடைக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு மேலிட ஆதரவு உண்டு. கடிதப் போக்குவரத்துகள் பலனை அளிக்கும். வார இறுதியில் பழைய நண்பர் ஒருவர் தொல்லை தருவார். தாய் வழியில் ஒருவருக்கு ஆபத்து ஏற்படும். பெண்களுக்கு உடன் பிறந்தோரால் மகிழ்ச்சி.

## மிதுனம்

மிருகசீரிடம் 3 ஆம், 4 ஆம் கால்கள். திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் கால்கள்.

மிதுனம்.— தனலாபம் உண்டாகும். பந்தயத்தில் வெற்றி யீட்டலாம். நண்பர்களால் புதிய முயற்சி ஒன்றுக்கு ஆக்கமும் ஊக்கமும் ஏற்படும். தொழிலாளர் சுமை குறையும். யாத்திரை, தெய்வதரிசனம் கைகூடும். சயன போஜன சுகம் உண்டு. கணவன் — மனைவி உறவு மகிழ்ச்சியாக இருக்கும்.

## கடகம்

புனர்பூசம் 4 ஆம் கால், பூசம், ஆயிலியம்.

கடகம்.— வாழ்க்கையில் வீசிய புயல் இவ்வாரம் ஓயும். நிம்மதி பிறக்கும். பணப் புழக்கம் நன்றாக இருக்கும். மகிழ்ச்சியான சம்பவங்கள் நடைபெறும். குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் நீங்கும். கடன் கட்டுக் கடங்கியிருக்கும். எதிர்பாராத பண வருவாய்க்கும் இடமுண்டு. பிள்ளைகளால் சிறு சிறு தொல்லைகள் ஏற்படும். ஜவுளி வியாபாரிகள் ஆதாயம் அடைவர்.

## சிங்கம்

மகம், பூரம், உத்தரம் 1 ஆம் கால்.

சிங்கம்.— முன்னேற்றமான வாரம், தடங்கலாக நின்ற காரியங்கள் தடைகள் நீங்கி, வெற்றியாக நிறைவேறும். குடும்ப நலம் நன்றாக இருக்கும். பிள்ளைகள் அனுசரணையுடன் நடப்பார்கள். இன சனத்தாரால் உதவி கிடைக்கும். இழந்த பொருட்கள் திரும்பவும் கிடைக்கும். வியாபாரிகள் ஆதாயம் அடைவார்கள்.

## கன்னி

உத்தரம் 2, 6, 4 ஆம் கால்கள் அத்தம், சித்திரை 1 ஆம், 2 ஆம் கால்கள்.

கன்னி:— சிறிது கஷ்டமான வாரம். எனினும் பெரிதாகக் கவலைப்படத் தேவை இல்லை. பெண்களுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. பொருட்கள் சேரும். வியாபாரிகள் வருமானத்தால் பாதிக்கப்படுவர். அதிகாரிகளுக்கு மானபங்கம் ஏற்படக் கூடிய காரியங்கள் நடக்கும். வார்த்தையை நிதானித்துப் பேசுவது நல்லது. கோர்ட் வழக்குகள் தள்ளிப் போடப்படும்.

## துலாம்

சித்திரை 3, 4 ஆம் கால்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் கால்கள்.

துலாம்.— குதூகலமான வார இது. காதல் விவகாரங்கள் வெற்றி தரும். இனசனத்தார் அன்புடனும் உதவியுடனும் பழகுவார்கள். விருந்துபசாரங்கள் அமர்க்களப்பட இடமுண்டு. பிள்ளைகளால் புகழும் மகிழ்ச்சியும் ஏற்படும். பழைய கடன்கள் திரும்பி வரும். தூர தேசப் பிரயாணத்துக்கு இடமுண்டு. பல்கலைக் கழகக் கல்வி பயில்வோர் சிறப்படைவர்.

## விருச்சிகம்

விசாகம் 4 ஆம் கால் அனுஷம், கேட்டை.

விருச்சிகம்:— தொழிலாளர், சிப்பந்திகள் மனம் போல் முன்னேற்றமடைவார்கள். எதிர் நீச்சல் போட வேண்டிய அவசியம் இராது. விடுபட்ட காதல், நட்பு மீண்டும் தொடரும். கலைஞர்களுக்குத் தொழில் சுறுசுறுப்பு அடையும். வாழ்க்கையில் இருந்து வந்த முட்டுக்கட்டைகள் நீங்கும். இரும்பு வியாபாரிகள் அதிக ஆதாயமடைவார்கள்.

## தனு

மூலம் பூராடம், உத்திராடம் 1 ஆம் கால்.

தனு:— பணவருவாய் நன்றாக இருக்கும். செலவினங்கள் கட்டுக்கடங்கி இருக்கும். கடன் தொல்லை இராது. ஆசிரியத் தொழில் புரிவோர் சிலர் கவலையடையலாம். பிரச்சினைகள் ஏற்படும். வார இறுதியில் உடல் நலம் சிறிது பாதிக்கப்பட்டாலும் கவலைப்பட வேண்டியதில்லை: நெருப்பால் தீமை ஏற்பட இடமுண்டு.

## மகரம்

உத்திராடம் 2, 3, 4 ஆம் கால்கள். திருவோணம், அவிட்டம் 2 ஆம் கால்கள்.

மகரம்:— புண்ணிய யாத்திரை மேற்கொள்ள வாய்ப்புண்டு. கடல் கடந்த பிரயாணமும் கைகூடும். பெண்களுக்கு நல்ல வாரம். பணம், ஆபரணம், புடைவை சேரும். சொந்தக்காரர் ஒருவர் பழிச் சொல் பகர்வார். தாய் வழியால் எதிர்பாராத வருமானம் வந்து சேரும். கோர்ட் விவகாரங்கள் வெற்றிகரமாக முடியும். வார இறுதியில் சிறு நோய்கள் ஏற்படலாம்.

## கும்பம்

அவிட்டம் 3, 4 ஆம் கால்கள். பூரட்டாதி, சதயம் 1, 2, 3 ஆம் கால்கள்.

கும்பம்:— நீண்ட காலமாக நினைத்துக் கொண்டிருந்த காரியங்கள் கைகூடும். எதிர்பாராத வகையில் உதவிகள் கிடைக்கும். வியாபாரிகள், தொழிலாளிகள் பலன் காண்பார்கள். கலைஞர்களுக்கு வருமானம் அதிகரிக்கும். குடும்பச் சிக்கல்கள் நீங்கி அமைதி பிறக்கும்.

## மீனம்

பூரட்டாதி 4 ஆம் கால் உத்தரட்டாதி ரேவதி.

மீனம்.— உள்ளத்தில் மகிழ்ச்சியும், தைரியமும் உண்டாகும். இருந்து வந்த எதிர்ப்புக்கள் முறியடிக்கப்படும். வெளியிடத்தில் இருந்து நல்ல செய்தி கிடைக்கும். மனைவி, பிள்ளைகள் ஆதரவாக இருப்பார்கள். காதல் விவகாரங்கள் கைகூடும். மேலிட ஆதரவு கிடைக்கும். அரசு உத்தியோஸ்தர்களுக்கு சிறு சிறு தொல்லைகள் ஏற்படலாம்.

---

கங்காணியின் அன்றைய ஏ. ஐ. டி. வேலைக்கு... பெரிய ஆப்பாக மாறி, வேட்டியை இழுத்து மடித்துக் கொண்டு ஓட்டமாய் விசில் அடித்தவனைப் பிடிக்க மடுவத்தின் கோடிக்கு ஓட வைக்கும்.

விசில் அடித்தவன் தான் இந்தப் பாட்டு பாடியவன் என்பதை இந்த ஆதாரத்தை வைத்து எட்டிப் பிடிக்க அவர் படும்பாடு... அந்த வாண்டுகள் அந்த கங்காணியைப் படுத்தும் பாடு, அவருடைய ஆதாயத்தை வேட்டை நாயைப் போல எப்படியாவது மோப்பம் பிடித்துக் கொள்ளும். அந்த வாண்டுகள் காற்சட்டையை ஒரு கையில் பிடித்த வண்ணம், மடுவத்தைச் சுற்றி ஓடத் தொடங்குவார்கள்.

இங்கு ஆரம்பமாகும்... மரதன் ஓட்டம், மீண்டும் லயத்தில் அநேகமாக முடிவுபெறும். இப்பொழுது கங்காணியின் சில பொருட்களை, இந்த லயத்துப் பயல்கள் அபகரித்து வைத்துள்ளார்கள் என்ற முறைப்பாடு தோட்டப் பாடசாலை ஆசிரியருக்கு வரும்.

கங்காணியின் தலைப்பாகை, கைக்கம்பு, அவரின் வெற்றிலைப் பை, சில்லறைக் காசுகள் போன்ற பொருட்களை பதுக்கி வைக்கப்பட்டு இருக்கும் இடங்களைச் சிறுவர்கள் வரிசையாகக் கூறி விடுவார்கள்.

சரி... பாட்டுப் பாடியது யார்? என்னதான் முயன்றும், அதன் மர்மத்தை கண்டு பிடிப்பதற்கு அடுத்த நாள் காலை... தான் மீண்டும் மடுவத்திற்கு செல்ல வேண்டும். அந்த நேரம் காலை 7 மணியாக இருக்கும்!

(ம)




# குருகுலக் கல்வி மூலம்....

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட சலவைக்காரர்கள் அனுமதிக்கப்படுவதில்லை.

கடவுள் வணக்கம் முடிந்ததும் காலைச் சிற்றுண்டி வழங்கப்படுகிறது. ஒரு விதமான ரஸ்க் மற்றும் பால் மட்டுமே காலைச் சிற்றுண்டியாக வழங்கப்படுகிறது. டீ அல்லது காப்பி குருகுலத்திற்குள் அனுமதிக்கப் படுவதில்லை.

கண்ணியமும், கட்டுப்பாடும், ஒழுக்கமும் இந்த குருகுலத்தின் உயிர் மூச்சுகளாகத் திகழ்கின்றன. எல்லா மாணவர்களும் ஒரே மாதிரியான வெள்ளை உடைகளைத்தான் அணிந்து கொள்ள வேண்டும். தலை முடியை சவரம் செய்து விட்டு "குடுமி" கட்டாயமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

இங்கு சேர்க்கப்படும் மாணவர்களிடமிருந்து ஒரு மாணவனுக்கு ஒரு மாதத்திற்கு 150 ரூபாய் என்ற விகிதத்தில் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இந்தப் பணம் லாப நோக்கில் வசூலிக்கப்படுவதில்லை. மாணவர்கள் செலுத்தும் கட்டணம் மூலம் வசூலாகும் 30 ஆயிரம் ரூபா இந்த குருகுலத்துக் கட்டடங்களைப் பராமரிக்கவே செலவாகி விடுகிறது.

எனவே நல்ல மனம் படைத்தவர்களின் நன்கொடைகள் மூலம் தான் இந்த குருகுலம் நடத்தப்படுகிறது என்கிறார் இந்த குருகுலத்தின் பொறுப்பாளர் ஒருவர்.

இங்கு எத்தகைய குடும்பத்து மாணவர்கள் படிக்கிறார்கள்?

ஆரம்ப காலத்தில் மிகப் பெரிய பணக்கார வீட்டுப் பிள்ளைகள் இங்கு கல்வி கற்க வந்தனராம். ஆனால் தற்போது பணக்கார வீட்டுப் பிள்ளைகள் அதிக எண்ணிக்கையில் வருவதில்லை.

அளவுக்கு அதிகமாக குறும்பு செய்யும் பிள்ளைகளை மட்டுமே சில பணக்காரர்கள் இங்கு கல்வி கற்க அனுப்பி உள்ளார்களாம். மற்றபடி நடுத்தர குடும்பங்களைச் சார்ந்த மாணவர்கள் தான் இந்த குருகுலத்தில் அதிக எண்ணிக்கை உள்ளவர்களாக உள்ளனர்.

(ம-10)

# வலிந்து தேடிய சேலைகள்

# தேடித் தந்த விபரீதம்!

வீடு புகுந்து திருடிய பட்டுச் சேலையைக் காதலியிடம் கொடுத்து விற்ற வாலிபர் கைது செய்யப்பட்டார்.

சேலம் மாவட்டம் சுக்கும்பட்டியைச் சேர்ந்த செல்லையன் என்னும் வாலிபர் இரவில் அரூர் பைபாஸ் வீதியில் வந்து கொண்டிருந்தார். அப்போது ரோட்டையொட்டி உள்ள நடராஜன் என்பவரின் வீடு பூட்டப்பட்டிருப்பதை கண்டார்.

செல்லையன் அந்த வீட்டின் கூரை மேல் ஏறி ஓடுகளை பிரித்து உள்ளே இறங்கினார்.

வீட்டுப் பீரோவை திறந்து அதிலிருந்து 8 பட்டுச் சேலைகளை எடுத்துக் கொண்டார்.

பிறகு அங்கிருந்து வெளியேறினார்.

திருடிய சேலைகளை குள்ளம்பட்டியில் உள்ள தனது காதலி தமிழரசியிடம் கொடுத்து விற்கச் சொன்னார்.

தமிழரசி அவரிடமிருந்து 2 பட்டுச் சேலைகளை வாங்கிக் கொண்டு சேலம் வந்தாள்.

சேலத்தில் அவளை போலீஸார் கைது செய்து சேலைகளை கைப்பற்றினார்கள்.

இதுபற்றி அரூர் போலீஸுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

அரூர் குற்றப் பிரிவு போலீஸ் சப் - இன்ஸ்பெக்டர் வெங்கட்ராமன், சேலம் போலீஸார் கொடுத்த தகவலின் பேரில் வாலிபர் செல்லையனை கைது செய்தனர்.

திருட்டுச் சேலை ஒன்றை செல்லையனின் தங்கை கண்ணம்மாள் கட்டியிருந்தாள். அதையும், மற்ற திருட்டு சேலைகளையும் போலீஸார் கைப்பற்றினர்கள்.

இவற்றின் மொத்த மதிப்பு ரூபா 2 ஆயிரம் ஆகும்.

இது தொடர்பாக செல்லையன் மீது அரூர் போலீஸார் தர்மபுரி சப் மாஜிஸ்திரேட்டு கோர்ட்டில் வழக்கு தொடர்ந்துள்ளனர்.

---

இந்த தண்ணீரில்!

ஆனால் —
கண்ணீரில் வாழும்
ஏழை எங்களுக்கு — இது
ஒருவேளை —
உணவாகப் பயன்படுவதை
இங்கு —
எவரேனும் அறிவீர்களா?

★ சி. எம். சங்கர்

## சீதனப் பேய்

இதயங்களிரண்டில்
மலர்ந்த உணர்ச்சிகள்
காதலாகக்
கனிந்தபோது
எங்கிருந்தோ வந்த
சீதனப் பேய்
கூட நின்று
குழிபறித்தது!

★ டெனியல் நடராஜா

## வேல்விழி!

நங்கையே
உனது கண்களை
"வேல் விழி" என்பது
பொருத்தமே.
ஏனென்றால்
இந்தக்
கண்களால் தானே
தினம் தினம்
என் இதயத்தைக் குத்திக்
காயப் படுத்துகிறாய்.

★ தமிழ் வேந்தன்

## நவீன கண்ணகி

உன்னைக்
கண்ணகி
என்று எண்ணிக்
காதலித்தேன் — உன்
கை வளையலையும்
கேட்டேன்.
கொடுத்தாய்.
ஆனால் — அது வெறும்
"கவரிங்" நகை என்று
சொல்லக் கூடாதா?
அடைவு பிடிப்பாளரிடம்
மானம் போய் விட்டதே!

★ இரா. பாஸ்கரன்

## எம். பிக்கள்

வணக்கத்தை
மொத்தமாக
வழங்கி
சில்லறையாகப்
பெற்றுக் கொள்ளும்
சமுதாய
வியாபாரிகள்!

★ ஏ. சீனிவாசன்

## வெறி

எறும்பு
ஊரக்
கல் தேயும்!
வயிற்றில்
கள் ஊறப்
புத்தி தேயும்!

★ சிவாஜி பாலு

## காதல்

சாதி வேற்றுமையால்
உடைந்து போகும்
குழந்தை பலூன்.

★ முருகேசன்

# பெண்ணுக்கு நாணம் மிக நல்ல அணிகலன்!

பெண்களுக்குப் பண வசதி இருந்தால் நலன்கள் யாவும் தேடி வரும் என்பது உண்மைதான். வசதிக்கு ஏற்ப பொன் நகைகளையும் அணிந்து அலங்காரம் செய்து கொள்ளலாம். ஆனால், பெண்ணுக்கு நாணமே மிக நல்ல அணிகலன் என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

பெண்களின் நான்கு நற்குணங்களில் நாணம் முக்கிய இடத்தை வகிக்கிறது. இது பெண்களின் அழகை உயர்த்தும் அரிய அணிகலனுமாகும்.

நாணமில்லாத பெண்டிர் வாசமில்லா மலருக்கு ஒப்பாவர். அணங்குகளுக்கு அலங்காரமளிக்கும் நாணம் ஆண்களுக்கும் பொது உடைமை என மார்க்கம் விளக்குகின்றது.

தீய சக்திகள் மனிதனை திணறடிக்கும் போது அவற்றிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளத்தக்க பாதுகாவலனாக இருந்து அவனை மாண்புறச் செய்வதும் நாணமே.

மழை, நிலத்தை உயிர்ப்பிப்பது போல் நாணம் உள்ளத்தை உயிர்ப்பிக்கிறது. நாணம், நன்மையைத் தவிர தீமை எதையும் தருவதில்லை.

நாணமற்ற பேச்சும் செயலும் நல்லவற்றுக்கு புறம்பானதாகும். நாணமும், இறை நம்பிக்கையும் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டவை.

எனவே, இவை இரண்டில் ஒன்று நீக்கப்பட்டால்கூட வாழ்வில் நிறைவு ஏற்படப் போவதில்லை.

"ஒரு பெண்ணுக்கு அவளுடைய நன்நடத்தை செங்கோலாகிறது. அவளது நாணமோ ஆட்சி செலுத்தும் அரச கிரீடமாகிறது" என்பது ஒரு அறிஞரின் கூற்று.

— அருணா —

நாகரிக நங்கையரின் நல் வாழ்வுக்கு உகந்த கேடயமாக விளங்குவது நாணம் என்றால் மிகையாகாது.

எனவே, நங்கையராகிய நாம் நாணத்தை மதித்து நடப்போமானால் நானிலத்தில் நற்பேறு கிட்டுவது நிச்சயம்.

(ம—சி)

## சிநேகிதிகளே முக்கியம்!

ஏராளமான சிநேகிதிகள் இல்லா விட்டால் வாழ்க்கை, வாழ்க்கையாகவே அமைய முடியாது.

என்னைப் பொறுத்தவரை செல்வத்தை விட சிநேகிகள் தான் எனக்கு முக்கியம்.

மேலே மேலே முன்னேற வேண்டும் என்ற ஆர்வம் பெண்களுக்கு இருக்க வேண்டும்.

சிலர் பார்க்கும் உத்தியோகமே பரவாயில்லை என்று இருந்து விடுவார்கள். முன்னேற முயற்சிப்பதே இல்லை. இன்னும் சிலருக்கு நல்ல வாய்ப்புக்கள் வந்து சேரும். ஆனால் அவற்றை பயன்படுத்திக் கொள்ள மாட்டார்கள். முண்டியடித்து முன்னேறுவது என்பது பெண்களுக்கு ஏற்றதல்ல என்ற கூச்ச உணர்வுதான் காரணம்."

— இப்படிச் சொல்லி இருப்பவர் யார் தெரியுமா?

பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கரெட் தாட்சர். (ம—10)



கிரேக்க நாட்டு அழகி சொவ்லா கொஸ்பினி தமது தாய் மொழியில் மாத்திரமல்ல ஆங்கிலம், பிரெஞ்சு, இத்தாலி, ஸ்பானிஷ் போன்ற மொழிகளிலும் இசை பாடக் கூடியவர். மேலும் புதிய மொழிகளைப் பயிலுவதில் ஆர்வம் கொண்டிருக்கிறார் அவர். (ம—சி)

## அழகு சாதனங்களில் மோசடி!

கண்களுக்கு இட்டுக் கொள்ளும் மை, நெற்றிக்கு வைத்துக் கொள்ளும் வண்ணச் சாந்து இவற்றினை தரக் குறைவாகத் தயாரித்து விற்பனைக்கு அனுப்பும் ஒரு சில வியாபாரிகள் பிடிபட்டுள்ளனர்.

மருத்துவ கண்காணிப்பு நிறுவன அதிகாரிகள் இவற்றைக் கண்டுபிடித்தனர். தரக் குறைவான இம் மாதிரியான பொருட்களை உபயோகிப்பதனால் சரும நோய், மற்றும் அலார்ஜிகள் உண்டாகலாம்.

(ம—10)

# அழகு நிலையங்கள் அவசியம் தானா?

ஒருவர் பிறப்பில் அழகு பெறுகிறாரா? அழகாக்கப்படுகிறாரா? இதை அழகுக் கலைக் கூடம் நடத்துபவரிடம் கேட்டால் என்ன சொல்வார்? மாஸ்கோவில் உள்ள ஒரு அழகுக் கலைக் கூடத்தின் தலைவி டாக்டர் இன்னா கொலுகுனென்கோவிடம் இதை கேட்ட பொழுது, "மக்கள் அழகாக்கப்படுகிறார்கள் என்பதற்கு எங்கள் கலைக்கூடம் ஒரு எடுத்துக் காட்டு" என்றார்.

"அப்படியானால் அழகுடன் இருக்க இயற்கையின் தயவு தேவையில்லையா?" என்று கேட்ட பொழுது, "அப்படித் திட்டவட்டமாகக் கூறி விட முடியாது. ஒவ்வொருவரும் அவரவர்கள் பாணியில் அழகுடன்தான் விளங்குகின்றனர். சில சமயங்களில் பிறப்பால் சில கோளாறுகள் இருக்கலாம். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் விஞ்ஞானம் மிக உதவியாக இருக்கும். ஆனால், முழுக்க முழுக்க இக்கலையினால் ஒருவரை மாற்றிவிட முடியும் என்று கூறி விட இயலாது. உதாரணமாக ஒரு கலைஞன் தனது ஓவியத்தை இன்னும் தத்ரூபமாக்க இறுதியாகத் தனது சித்திரக் கோலால் சரி செய்து பூர்த்தி செய்வது போன்றதுதான் இக்கலை" என்கிறார் அவர்.

இக்கலைக்கூடத்திற்கு வருபவர்களில் பெரும்பாலோர் நோய் மற்றும் பல்வேறு காரணங்களினால் உடல் ஊனமுற்றவர்கள். அவர்களை எங்கள் கூடத்தின் நிபுணர்கள் நன்கு ஆராய்ந்து முதலில் என்ன செய்ய வேண்டும் என்பதை நிர்ணயித்துக் கொள்வர். இக்கூடத்தில் உணவு, உடற்கூறு இயல்கள், பல் மற்றும் எலும்பு போன்ற 20க்கும் மேற்பட்ட துறைகளைச் சேர்ந்த நிபுணர்கள் வேலை பார்க்கின்றனர்.

ஒரு நாளைக்கு 2,000 பேர் விண்ணப்பிக்கின்றனர். சப்பை மூக்கு, நீண்ட காது, குழி விழுந்த கண்கள் என்று பல பேர் வருகின்றனர். இவர்கள் நோயாளிகள் அல்லர் என்ற போதிலும் தனக்கு மூக்கோ, காதோ சரியாக அமையவில்லை என்ற ஒரு மனப்பான்மையினால் அவர்கள் நோயாளிகளை விட பெரிதும் கவலைக்குள்ளாகியுள்ளனர். இந்த வேதனை அவர்களுடைய அன்றாட வாழ்க்கையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது.

தங்கள் அங்கத்தில் உள்ள குறை அகற்றப்படும் என்ற ஒரு அசையாத நம்பிக்கையில் அனைவரும் இங்கு வருகிறார்கள். இந்த எண்ணம் அவர்களுடைய மனதில் ஒரு ஆழமான நம்பிக்கையை உண்டுபண்ணுகின்றது. அதனால் தாழ்வு மனப்பான்மை நீங்கி வாழ்வில் பற்றுதலுடன் ஈடுபடத் தொடங்குகின்றனர். ஆகவே, இந்தக் கலையினால் மனிதனின் உள்ளத்தில் ஏற்படும் ஆன்மீக மாற்றம், அவனை தார்மீக வழிக்கு இட்டுச் செல்லும் — என்கிறார்.

இக்கலைக்கூடத்தில் பல பிரிவுகள் உள்ளன. மனோதத்துவ துறையில் ஆரம்பித்து, சதை மாற்றும் அறுவை சிகிச்சை துறை, உடற் பயிற்சி, அலங்காரம், சிகை அலங்காரம், ஒப்பனைக் கலை, உடை அலங்காரம் வரை பல்வேறு துறைகள் உள்ளன.

மனிதனுடைய தோற்றத்தை மேலும் அழகுபடுத்த விஞ்ஞான தொழில் நுட்பம் பெரிதும் உதவுகிறது. அலங்காரக் கலை நிபுணர்கள் பயன்படுத்தும் பல்வேறு உபகரணங்கள் இதற்கு எடுத்துக் காட்டாகும். லாசர் செயற்கைத் கதிர் வீச்சு. மிகக் குறைந்த உஷ்ண நிலை, செயற்கை அவயங்கள் போன்ற பல்வேறு விஞ்ஞானக் கருவிகள் உள்ளன. முகத்தில் ஏற்படும் தேவையற்ற, அழிந்து பட்ட இறுகிப் போன சதைகளை அகற்ற ஒரு விநாடியில் 60,000 சுற்றுக்கள் சுழலும் மிக நவீன கருவிகள் உள்ளன.

இங்கு நாட்டு வைத்திய முறையும் கையாளப்படுகிறது: காய் கறிகள், தானியங்கள், பழவகைகள் போன்ற விசேஷ உணவு வகைகளாலும் சிகிச்சை அளிக்கப்படும். (ம—சி)

## வேலைக்கு ஆபத்து

இத்தாலியில் உள்ள மாடெனா நகரத்தில் ஒரு தொழிற்சாலையில் வரவேற்புப் பெண்ணாக வேலை பார்க்கும் பியாரன்கா பேரன்சி என்ற அழகி தனக்கு உடல் நலமில்லை என்று கூறி ஒரு நாள் லீவு எடுத்துக் கொண்டாள்.

பிறகு அழகுப் போட்டி ஒன்றில் கலந்து கொண்டு வெற்றியும் பெற்றாள். சிறந்த அழகிக்கான பரிசைப் பெற அவள் மேடை ஏறியபோதுதான் அதிர்ச்சி காத்திருந்தது.

அவளுக்குப் பரிசு வழங்கியவர் அவளுக்கு லீவு வழங்கிய மேலதிகாரியே. மறுநாள் அவள் வேலைக்குத் திரும்பியபோது அவள் கையில் கடுதாசியைக் கொடுத்து விட்டனர். ஆம்! அந்த மிஸ் டிஸ்மிஸ் செய்யப்பட்டாள். (ம—சி)

எல்லாத் துறைகளிலும் பெண்கள்

இயலாது. உதாரணமாக ஒரு கலை ஞன் தனது ஓவியத்தை இன்னும் தத்ரூபமாக்க இறுதியாகத் தனது சித்திரக் கோலால் சரி செய்து பூர்த்தி செய்வது போன்றதுதான் இக் கலை" என்கிறார் அவர்.

ஒரு நாளைக்கு 2,000 பேர் விண்ணப்பிக் கின்றனர். சப்பை மூக்கு, நீண்ட காது, குழி விழுந்த கண்கள் என்று பல பேர் வருகின்றனர். இவர்கள் நோயாளிகள் அல்லர் என்ற போதி

[illegible] கைகளை உண்டுபண்ணுகின்றது. அதனுல் தாழ்வு மனப்பான்மை நீங்கி வாழ்வில் பற்றுதலுடன் ஈடுபடத் தொடங்குகின்றனர். ஆகவே, இந்தக் கலையினுல் மனிதனின் உள்ளத்தில் ஏற்படும் ஆன்

இங்கு நாட்டு வைத்திய முறையும் கையா ளப்படுகிறது: காய் கறிகள், தானியங்கள், பழ வகைகள் போன்ற விசேஷ உணவு வகைகளா லும் சிகிச்சை அளிக்கப்படும். (ம—சி)

[illegible] அவள் கையில் கடுதாசி யைக் கொடுத்து விட்டனர். ஆம்! அந்த மிஸ் டிஸ்மிஸ் செய் யப்பட்டாள். (ம—சி)

# மாதர் மஞ்சரி

தயாரிப்பு: சுந்தரி

# எல்லாத் துறைகளிலும் பெண்கள் வியாபித்திருக்கவேண்டும்!

பழங்காலத்தில் அதாவது படிப்பறிவு இல்லாத கற்காலத் தில் இருந்த மகளிருக்கும், "ஆணுக்குப் பெண் சளைத்தவள் அல்ல" என்பதனை மெய்ப்பிக் கும் இந்நவீன கால மகளிருக் கும் எத்தனையோ வித்தியாசங் கள் உள்ளன என்பதை நாம் நன்கு அறிவோம்.

அன்றைய மகளிர் கிணற்றுத் தவளைகளாய் வீட்டில் அடைந்து; "கரண்டியும், ஊது-குழலும் பிடிக்கத் தெரிந்தால் போதும்" என்று இருந்தனர்.

ஆனால் இன்றோ "நாடென்ன செய்தது நமக்கு?" என்று கேட்காமல், "நாம் என்ன செய்தோம் நாட்டிற்கு?" எனக் கேட்டு, சமுதாய வளர்ச் சிக்கும், நாட்டின் மேம்பாட் டிற்கும் பாடுபடும் ஆண்களு டன் தம்மையும் ஐக்கியப்படுத் திச் செயல் படுகின்றனர் பெண் கள்.

மகளிரின் இது போன்ற துணிச்சல்மிகு செயல்களைப் பாராட்டுபவர்களுக்கு இடை யில் அவலச் சொல் பேசி, குற்றங் குறை காணுகின்ற, பழை மையையே "குரங்குப்பிடி யாய்" பிடித்து, புதுமையை ஏற்றுக் கொள்ள இயலாத மனம் படைத்தவர்களும் இந்த உலகில் இல்லாமல் இல்லை.

இவர்கள், மகளிர் வெளியில் செல்லக் கூடாது சிரிக் கக் கூடாது, இளைஞர்களு டன் பேசக் கூடாது என்ற பழந் தமிழ்க் கோட்பாடுகளை மனதில் நிறுத்தி மீறுபவ ளுக்கோ நடத்தை கெட்டவள் எனப் பட்டம் தந்து, மனம் கூசாமல் பேசவும் செய்கிறார் கள்.

மகளிர் பல துறைகளில் ஈடுபடுவதனுல் உலக அனுபவத் தைப் பெற்று, குடும்பத்தைச் சிறப்புடன் நடத்துவார்கள் என் பதனை உணராதவர்களே இவர் கள் என்றால், அது மிகையா காது.

"வீட்டின் மூலையில் முடங்கிக் கிடப்பவள் தான் குடும்பத் திற்கு ஏற்றவள்; அவள்தான் கண்ணகி" என்றும் இக்காலத் தில் கூறிக் கொண்டிருந்தால் குடும்பம் சிறக்கவும், மேன்மை யடையவும் வழியே இல்லை என் பதனை உறுதியாகக் கூறலாம்.

முன்னேறி வரும் இக்காலத் தில் மகளிர் எல்லா வகையிலும் சிறந்திருந்தால் தான் அவர்கள் நடத்திச் செல்லும் குடும்ப வாழ்க்கையும் சிறப்புற்று விளங்கும் என்பதை மனதில் நிறுத்த வேண்டும்.

எல்லா வகையிலும் என் றால், எந்த வகையில்? என்று கேட்போரும் இருக்கிறார்கள். எனவே, அவற்றைச் சிறிது காண்போம்.

குடும்பம் சிறப்பதற்கு ஒரு பெண்ணுக்கு வேண்டியது; அழகு, பணம், பகட்டு, ஆடம் பரம் என்று இருந்து விட்டால் மட்டும் போதாது.

இவ்வரட்டுக் கௌரவத்தி குடும்பம் சிறப்பதற்குப் பதி லாக சீரழிந்து தடம் புரண்டு விடும். இவற்றுக்கெல்லாம் மேலாக அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு போன்ற குணதிசயங் கள் அவளிடம் குடிகொண்டி ருக்க வேண்டும்.

அதோடு மட்டுமல்லாமல் கடமை – கண்ணியம் – கட்டுப் பாட்டைப் புரிந்தவளாகவும் அன்பு, பாசம், நேசம் இவை களை இடம், பொருள், ஏவல் அறிந்து பொறுமையாகச் செயல்படத் தெரிந்தவளாக வும் விளங்க வேண்டும்.

(ம—சி)

# கோலங்கள் கூறும் தத்துவம் என்ன?

காலையில் எழுந்து நீராடி விட்டு வாசலில் கோலம் போடுவது குடும்பப் பெண்களின் தலையாய பணிகளில் ஒன்று. லட்சு மிகரமாக வீட்டை வைத்திருக்க உதவும் இந்தக் கோலங்கள் பற்றிச் சில ருசிகரமான தகவல் கள் தற்போது வந்திருக்கின் றன.

தமிழ்நாடு, கர்நாடகம், ஆந்திரா ஆகிய மூன்று மாநில ங்களின் மக்கள் இடும் கோலங் களையும், உடலில் பச்சைகுத்திக் கொள்ளப் பயன்படுத்தப்படும் உருவங்களையும் பற்றி சென்னை யைச் சேர்ந்த அர்ச்சனு சாஸ்திரி என்ற பெண் விரிவாக ஆராய்ச்சி செய்துள்ளார்.

தன்னுடைய ஆராய்ச்சியைத் தொகுத்துப் புத்தகமாகவும் வெளியிட்டுள்ளார். அந்த புத்தகத்தில் இருந்து சில கோலங்களையும் அவற்றிற்கான விளக்கங்களையும் இங்கு தருகி றோம்.




(1). தமிழ்நாடு, கர்நாட கம், ஆந்திரா ஆகிய மூன்று மாநிலங்களிலும் வீடுகள் முன்னே அடிக்கடி இடப்படும் கோலங்கள் இவைகள். கெட்ட தேவதைகள் மற்றும் பில்லி சூனியம் ஆகியவற்றில் இருந்து வீட்டுத் தலைவரையும், வீட்டில் உள்ளோரையும் இந்த கோலங் கள் பாதுகாக்கும் என்று நம்பப்படுகிறது.

(2) இத்தகைய கோலங்களை உடம்பில் பச்சை குத்திக்கொண் டால், கெட்ட ஆவிகளிடம் இருந்து தம்மைக் காப்பாற் றிக் கொள்ள முடியும் என்ற நம் பிக்கை ஆந்திர மக்கள் இடையே நிலவுகிறது.

(3) இது வாழை மரத்தைக் குறிக்கிறதாம். கர்நாடகாவில் கல்யாணமான பெண்கள் இந்த வாழை மரத்தை தங்கள் உடம் பில் பச்சை குத்திக் கொள் கிறார்கள். இவ்வாறு செய்து கொண்டால் வாழையடி வாழை யாகக் குடும்பம் தழைக்கும் என்ற நம்பிக்கை கர்நாடகா வில் நிலவுகிறது.

(4) புதிதாகக் [illegible] பட்ட வீட்டிற்கு திருஷ்டி விழுந்து விடாமல் இருக்க இந்த வகை கோலங்களை தமிழ்நாடு மற்றும் ஆந்திர மக்கள் இடுகிறார்கள்.

(5) சில கோவில்களில் கர்ப்பக்கிரகக் கதவில் இது போன்ற இடைவெளி காணப் படுகிறது. கதவு அடைக்கப் பட்ட பிறகு தெய்வங்களைத் தரிசிக்க இந்த இடைவெளி பயன்படுகிறது. இருப்பினும் இது போன்ற இடைவெளி மூலம் பார்க்கும்போது கடவு ளைப் பார்த்து பிறர் திருஷ்டி போட முடியாதாம்.

(6) சிரங்கு நோயால் பாதி க்கப்படுபவர் முதுகில் இது போன்ற உருவத்தை வரைந்து விட்டால் நோய் பறந்துவிடும் என்ற நம்பிக்கை ஆந்திர மக்க ளிடையே நிலவுகிறது. இந்த ஓவியம் சிங்கத்தைக் குறிக்கிற தாம். மேலும் இதை சிரங்கு பிடித்தவர் முதுகில் ஒரு பொற் கொல்லர் வரைந்தால் தான் நல்லபலன் கிட்டுமாம்.

(7) புதிதாகக் கட்டப்பட்ட வீட்டில் துர்தேவதை இருப்பின், அவைகளை விரட்டுவதற்காக வீட்டின் முகப்பில் இது மாதிரி யான ஓவியத்தை ஆந்திர மக் கள் வரைகின்றனர்.

(8) பிறந்த குழந்தைக்கு திருஷ்டி பட்டுவிடக் கூடாது என்பதற்காக குழந்தை இருக் கும் அறையில் கர்நாடகப் பெண்கள் வரைகின்ற பலவகைக் கோலங்களே இவை. குழந்தை பிறந்த ஐந்தாவது நாள் இவை வரையப்படுகின்றன. குழந் தையை யாரேனும் பார்க்க வந்தால் இந்த கோலங்களை உடனே அழித்து விட வேண்டு மாம்.

(9) மாடுகளுக்கு ஏற்படும் திருஷ்டியைப் போக்க, மாடு களின் மீது இந்த உருவங்களை கர்நாடக மக்கள் வரைகிறார் கள்.

மேலும் கோலங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்த அர்ச்சனு சாஸ்திரி சோக்கட்டியைத் தண்ணீரில் நனைத்து கோலம் போடக் கூடாது என்கிறார். அவ்வாறு கோலமிட்டால் வறுமை ஏற்படும் என்கிறார் அர்ச்சனு சாஸ்திரி.

(ம—10)





JEANS

House Wives Choice
is Shobhas Sheets
Swiss Rose Orchids Sheets

| | | |
|---|---|---|
| ஒற்றைப் படுக்கை | ரூ. | 97/50 |
| இரட்டைப் படுக்கை | ரூ. | 129/50 |
| தலையணை உறைகள் (பொருத்தமானவை) | ரூ. | 27/50 |
| டவல் செட்ஸ் (பொருத்தமானவை) | ரூ. | 129/50 |
| PILLOWS | | 39/50 |

LEVI'S

யூ. எஸ். ஏ. சான்பிரான்சிக்கோவிலிருந்து இறக்கு மதி செய்யப்பட்ட முதல்தரமான டெனிம்/கொட்ரூய் ஜீன்ஸ் ரூ. 490/ முதல் மற்றும் பொருத்தமான ஜீன்ஸ் வெயார்டு ஷோர்ட்டுகள் ரூ. 150/-. சாதாரணம்/நடுத் தரம்/பெரியது/ஆகப் பெரியது.

SHOBHAS

463, GALLE ROAD
COLOMBO. 3 DIAL. 81888

சிந்தாமணி
தின வெளியீடு "தினபதி" ஞாயிறு வெளியீடு சிந்தாமணி
சிந்தாமணி CHINTAMANI

# ஒருமித்த தொனியில் எதிர்ப்புக் குரல்!

இந்திய லோக சபையில் வரதட்சணையின் கடுமை, அதை யொட்டிய பெண்களின் தீ போன்ற சம்பவங்களை சபையின் பெண் உறுப்பினர்கள் ஒருமித்த குரலில் மிகப் பலமாக கண்டனம் தெரிவித்திருக்கிறார்கள்.

திருமதி கீதா, முகர்ஜி, திருமதி குர்பிந்தர் கவுர், திருமதி சுசீலா கோபாலன். திருமதி பிரமோதி தந்தவாதே, திருமதி நிர்மலா குமாரி, சக்தாவதி போன்ற முன்னணி உறுப்பினர்கள் இந்தப் பிரச்சினையை எழுப்பினர்கள்.

வரதட்சணை கொடுமை தாங்காமல் இறக்கும் பெண்களுக்கு எதிராக மாப்பிள்ளை வீட்டாருக்கு எந்த வழக்கறிஞரும் வாதாட முன்வரக் கூடாது என்று இவர்கள் வக்கீல்களைக் கேட்டுக் கொண்டனர்.

இந்தக் கொடுமையைப் பற்றி விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்றும் இவர்கள் வற்புறுத்தினர்கள். (ம—10)

# புதிய அனுபவம்

பல்லூன அபூபக்கர்

சின்னஞ் சிறுகதை

ஆசிரியத் தொழிலுக்குத் தெரிவு செய்யப்பட்டு நியமனம் கிடைத்த நேரம் அது. அதுவும் இயற்கை எழில் கொஞ்சும் ஒரு சிறிய அழகிய கிராமத்துக்கே என்னுடைய திறமையை காட்ட வேண்டிய வாய்ப்பு ஏற்பட்டது.

எனக்கோ மகிழ்ச்சி தாளவில்லை. நிலை கொள்ளாமல் மானெனத் துள்ளித் திரிந்தேன். கூண்டுக்கிளியென அடைபட்டிருந்த எனக்கு புது உலகத்தில் சஞ்சரிப்பது போலிருந்தது.

என்னுடைய ஆசிரிய நியமனத்தை பாரம் எடுக்க இன்னும் நான்கு நாட்களே பாக்கி இருந்தன. இருந்தாலும் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னதாகவே சென்றுவிட வேண்டும் என்ற துடிப்பு என்னுள் மேலோங்கி நின்றது.

அடுத்த நாளே புறப்பட்டேன் பஸ் பிரயாணத்தில் களைப்போ ஏற்படவில்லை அன்று. பின்னேரமே அக்கிராமத்துக்குச் சென்று விட்டேன்.

பாடசாலையை அடைந்து எனக்கென ஒதுக்கப்பட்ட அறைக்குச் சென்றேன். சிறிது நேர ஓய்வின்பின் கிராமத்தைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டேன்.

பல இடங்களை சுற்றிப்பார்த்து விட்டு இறுதியாக ஒரு நீரோடைக்கருகில் வந்து சேர்ந்தேன். உடனே நீருக்குள் பாய்ந்து விட என்னுடைய உள்ளம் துடித்தது.

நீரோடையில் நீரோடுவதென்றால் எனக்கு கைவந்தகலை. என்னுடைய கிராமத்திலும் ஒரு வாரத்தில் ஒரு நாளையாவது நீச்சலடிக்க ஒதுக்கிக் கொள்வது என்னுடைய பழக்கமாக இருந்து வந்தது.

எனவே எவ்வித தயக்கமும் இன்றி உட்காற் சட்டையுடன் தண்ணீரில் இறங்கினேன்.

சிறிது தொலைவில் சில பெண்கள் துணி துவைப்பதிலும் வேறு சிலர் குளிப்பதிலும் ஈடுபட்டிருந்தனர். சிறுவர், சிறுமிகள் ஓடிப் பிடித்தும் தண்ணீருக்குள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களும் நன்கு நீச்சல் கற்றிருப்பார்கள் என்பது அவர்களின் செயல் முறைகளில் இருந்து அறிந்து கொண்டேன்.

அதைப் பார்க்கப் பார்க்க எனக்கோ இருப்புக் கொள்ளவில்லை. உடனே அங்கும் இங்குமாக நீந்தினேன். அலுப்பெல்லாம் எங்கோ மறைந்து விட்டது.

திடீரென்று பெண்கள் கூட்டத்தில் இருந்து சலசலப்புஏற்படவே வியப்பு மேலிட அவர்கள் பக்கம் நோக்கினேன். அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்தபடி ஏதோ பேசிக் கொண்டார்கள். நான் அவர்களுக்கு சற்று தள்ளி நின்றதால் அவர்களின் பேச்சின் அர்த்தம் என்னவென்று அறிய முடியாத நிலையில் இருந்தேன்.

ஆனால் அங்கு கூடி நின்ற சிறுவர், சிறுமிகள் பலர் என்னைக் கடந்து ஓடிப் போவதை அவதானித்தேன். மகிழ்ச்சியால் ஆர்ப்பரித்த என் உடம்பெல்லாம் ஒரு நொடியில் மரத்து விட்டது.

பார்வையைச் சற்று பின்னோக்கித் திரும்பிய எனக்கு வியப்புக்கு மேல் வியப்பு. அங்கே சில ஆடவர்கள் வந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் நான் நிற்கும் பக்கமாகவே வருகிறார்கள் என்பதை அறிந்து கொள்ள எனக்கு அதிக நேரம் எடுக்கவில்லை.

மிக வேகமாக வந்த அவர்கள் என்முன் நின்றார்கள். அவர்களில் வயதான ஒருவர் என்னுடைய கன்னங்களில் மாறி மாறி அறைந்தார் நானோ எதுவும் புரியாமல் விழித்தேன்.

"என்ன திமிரடா உனக்கு பெண்கள் பக்கம் வந்து நின்று நீச்சலடிக்க; உன்னைப் போல ஆட்களை விட்டுவச்சா இந்த சமூகமே உருப்படாதுடா?... ராஸ்கல்... என்ன தைரியம் இருந்தா இந்த இடத்திலே வந்து..." காரசாரமான வார்த்தைகள் என் நெஞ்சில் அம்பெனப் பாயச் சிலை போல அசையாமல் நின்றேன்.

எல்லாம் முடிந்த பின்னரே என்னைப் பற்றி விசாரித்தார்கள்- நான்தான் அந்த ஊருக்கு வந்த புதிய ஆசிரியர் என்பதை அறிந்ததும் அவர்கள் பெரிதும் சங்கடப்பட்டார்கள்- தவறுக்காக மன்னிப்பு கேட்டுக் கொண்டார்கள்-

அவர்கள் தங்களுக்கு என்றே ஏற்படுத்திக் கொண்ட சட்ட திட்டங்களை மீறியதற்குக் கிடைத்த தண்டனை அது. அவர்கள் சட்டத்துக்கு ஒப்ப பெண்களுக்கென்று ஒதுக்கப்பட்டிருக்கும் இடங்களுக்கு ஆண்கள் செல்வதில்லை என்பதை புரிந்து கொள்ள எனக்கு அதிக நேரம் தேவைப்படவில்லை. இதனை முன் கூட்டியே தெரிந்து கொள்ளாமல் விட்டது எனது தவறுதானே!



# அழகும் கவர்ச்சியும்

பரிபூரணன் —

ஆணும் பெண்ணும் சேர்ந்திணைந்து
அன்பாய் வாழும் பூவுலகில்
காணும் இயற்கை காட்சியெலாம்
கண்ணுக் கினிய பேரழகாம்.
பேணும் மேனி அழகினிலே
பெண்ணுக் கிணேவே ருருளரோ
காணும் அழகில் மாந்தருக்குள்
கருத்து வேறு பாடுமுண்டு!

★

அன்னை இயற்கை தந்ததுதான்
அழகாம் பெண்ணுக் கல்லாமல்
தன்னை வெகுவாய் அலங்கரிக்க
தலைமுதல் கால்வரை வேஷமிட்டால்
நன்மை அதனால் இல்லாமல்
நாழியும் பணமும் வீணாகும்.
நன்மை பயக்கும் இயற்கைஎழில்
நாசம் செய்யும் கவர்ச்சிஎழில்

★

கவர்ந்து இச்சை ஊட்டுவதால்
"கவர்ச்சி" என்றார்; அதனாலே –
உயர்ந்த எண்ணம் நன்நெறிகள்
உண்டாகாது மாறாக –
அயர்ந்த உணர்ச்சி எழும்; கெட்ட
ஆசை வளரும் உள்ளத்தில்
கவர்ச்சி பெண்ணுக் கிழிவாகும்
காமம் அதற்குத் துணையாகும்.

★

ஆத லாலே அழகிற்கும்
அழகின் போலிக் கவர்ச்சிக்கும்
பேதம் கண்டு தெளிந்திடுவோம்
பெருமை யோடு வாழ்ந்திடுவோம்.
தீது வருமிக் கவர்ச்சியினால்
செம்மை வளரும் நல்எழிலால்
ஈதிவ் உலகின் நெறியாகும்.
ஏந்திழை யார்க்கு வழியாகும்.

# பிறர் பையில் கை போடும் நபருக்கு நவீன தண்டனை!

சினிமாத்தாரகை
ரத்தி அக்னிஹோத்ரி



# பிறர் பையில் கை போடும் நபருக்கு நவீன தண்டனை!

ஒரு வருடமாக பம்பாய் சர்ச் கேட் ரயில் நிலையத்திற்கும், தாதர் ரயில் நிலையத்திற்கும் இடையில் பயணம் செய்யும் பயணிகளிடம் தினசரி பிக்பாக்கெட் தொல்லை அதிகரித்துக் கொண்டே இருந்தது.

சங்கிலி அறுப்பு, காது தோடு எடுக்க காதோடு கடித்து விடுதல், பர்ஸ் பிக்பாக்கெட் என்று தினமும் பிக்பாக்கெட் அதிகரித்தது. இதனை வெகு திறமையுடன் ஒரே ஒரு நபர் செய்து வந்தான்.

எப்பொழுதாவது தப்பித் தவறி பிடிபட்டு விட்டால், மறு நாளே பணம் செலவு செய்து வெளியே வந்து விடுவான். அவனைப் பற்றி புகார்கள் கொடுத்து, பயணிகள் அலுத்து விட்டனர்.

கொடுக்கிற எல்லாப் புகார்களும் பம்பாய் பொலீஸாரின் குப்பைக் கூடைக்குப் போய்ச் சேர்ந்தன. ஆனால் யாரும் எதிர் பாராத வண்ணம் ஒரு நாள் ரயில் பயணிகளிடம் அந்தப் பிக்பாக்கெட் மன்னன் சிக்கிக் கொண்டான்.

அவனைப் பார்த்த அத்தனை பேரும் கோப வெறியுடன் அவன் மீது பாயத் தயாரானார்கள். ஆனால் அவனை பொலீஸில் ஒப்படைப்பதன் மூலம் நமக்கு எந்தவித பலனும் இருக்கப் போவதில்லை. இவனுக்கு நாமே தண்டனை தர வேண்டும் என்று முடிவு எடுத்தார்கள்.

அவனைப் பிடித்து, அவன் அணிந்திருந்த உடைகளை ரயில்வே நிலையத்தில் அவிழ்த்து எடுத்தார்கள். அவனை முழு நிர்வாணமாக கைகளைக் கட்டி, பொதுமக்கள் பார்வையில் படும்படி நிற்க வைத்தார்கள்.

"இனி மேல் பிக்பாக்கெட் அடிக்க மாட்டேன், அடிக்க மாட்டேன்" என்று கத்தும்படி வற்புறுத்தினார்கள். அவனைச் சூழ்ந்து நின்று கொண்டு எல்லா பயணிகளும் கை தட்டிக் கேலி செய்தார்கள்.

அதில் பெண் பயணிகளும் சேர்ந்து கொண்டனர். நிர்வாணமான அந்த பிக்பாக்கெட் எங்கும் ஓட வழியின்றி அவர்கள் சொன்னதையெல்லாம் செய்து கொண்டு இருந்தான்.

இதனை ரயில்வே பொலீஸாரும் வேடிக்கை பார்த்தனர். இனி பிக்பாக்கெட் அடிப்பது இல்லை என்ற உறுதிமொழியின் பேரில் அவனை விட்டு விட்டனர். (ம—10)

## கரடிக் குட்டியின் உலகம்



பிறந்ததுமே அன்னையினால் ஒதுக்கி வைக்கப்பட்ட இந்தக் கரடிக் குட்டிக்குத் தாயாக இருந்து பாலூட்டுகிறார் பெர்லின் மிருகக் காட்சிச்சாலையைச் சேர்ந்த ஊழியர். இன்று இந்தக் கரடிக்குட்டிக்கு உலகமே இந்த ஊழியர்தாம்! (ம—சி)

## மூளை இல்லாமல் பிறந்த குழந்தை.

ஹைதராபாத் நகரில் மூளை இல்லாமல் ஒரு குழந்தை தனியார் மருத்துவமனை ஒன்றில் பிறந்தது. மூளை இருக்க வேண்டிய இடத்தில் கரு நீல தோல் மூடி உள்ளது. மண்டை எலும்புகளை காணவில்லை. 10 லட்சத்துக்கு இரண்டு குழந்தைகள் இது போல் பிறக்கும் என்று அந்த மருத்துவமனை டாக்டர் புல்லாரெட்டி கூறினார்.

அதில் விட்டமின் மாத்திரைகள் சாப்பிடுவதாலும், விஷத் தன்மை வாய்ந்த ஊசிகளை போட்டுக் கொள்வதாலும் இது போன்ற குழந்தைகள் பிறக்க வாய்ப்பு உள்ளது. இது பரம்பரை வியாதி இல்லை. (ம—10)

## சட்டைப்பையில் பணம்!

வெள்ளைச் சட்டைப் பாக்கெட்டில் பணம் வைத்துக் கொண்டால் அது நன்றாக வெளியே தெரியும். பிக்பாக்கெட்டுகளுக்கு ரொம்ப சவுகரியம்.

பணத்தை ஒரு வெள்ளைத் தாளில் மடித்து வைத்துக் கொண்டால் பணமும் வெளியே தெரியாது, சமயத்தில் ஏதாவது குறிப்புகள் எழுதவும் தாள் உதவும். (ம—10)

இப்பத்திரிகையை அச்சிட்டுவெளியிட்டவர் சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேனமாவத்தை, கொழும்பு — 12. (இலங்கை) தபால்பெட்டி 1613. வெளியீட்டு திகதி 10 ஜூன் 1984.

[illegible] 5, Gunasena Mawatha, Colombo 12, P. O. [illegible]



"வனிதையின் வனப்பென்பது அவள் எழிற் தோற்றமே! எனவேதான் நான் லக்ஸ் பாவிக்கிறேன்."

இன்றைய இளம் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும் இந்திய முன்னணிச் சினிமாத் தாரகைகளில் ரத்தி அக்னிஹோத்திரியும் ஒருவர்.

கமரா எதிரே நிற்கும் ஒவ்வொருவரையும் தன்தோற்றம் மிகக் கவனமாகப் பேணப் படவேண்டும் என்பதை அவர் நன்கறிவார். எனவேதான் அவர் நிச்சயமாக நாடும் துணை—லக்ஸ். லக்ஸ் தூய்மையானது, இதமானது, அதன் செறிவான செழுமை நுரை உங்கள் மேனியெழிலை மென்மையாக, மிருதுவாகப் பேணுகிறது.

"என் எழிற் தோற்றமே எனக்கு முக்கியம்."

ரத்தி கூறுகிறார், "எனவே நான் லக்ஸ் தெரிவு செய்வது இயற்கை."




HTL LB 1174

லக்ஸ் சர்வதேச சினிமாத்தாரகைகளின் அழகு சோப்.

விலை ரூ. 5/35

ஒரு தரமுயர்ந்த லீவர் உற்பத்தி.